'தங்கக் களஞ்சியம்' :

TAMIL VĀCHAKA MĀLAI

BOOK II For Form V

SPECIMEN

Edited by

Vidwan P. K. ARUNACHALA GOUNDER,
Lecturer in Tamil., M. D. T. Hindu College, Tirunelvely,
And
Member of the Academic Council, University of Madras.

SIVAGAMI PUBLISHING HOUSE,
PRINTERS & PUBLISHERS,
SRIVAIKUNTAM. : TIRUNELVELY Dt.

Price As. 12

எங்கள் வெளியீடு-25

தமிழ் வாசக மாலை

இரண்டாம் புத்தகம்

[ஐந்தாம் பாரத்துக்குரியது]

★

பதிப்பாசிரியர் :
வித்வான் கு. அருணசலக் கவுண்டர்,
தலைமைத் தமிழாசிரியர்,
மதுரைத் திரவியம் தாயுமானவர் ஹிந்து காலேஜ்,
திருநெல்வேலி.

★

சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீவைகுண்டம் : திருநெல்வேலி ஜில்லா.
பதிப்புரிமை] 1941 [விலை அணு 12.

Printed at the
Sivagami Printing Press,
Srivaikuntam.

THE RT. REV. STEPHEN NEILL, M.A.,
BISHOP OF TINNEVELLY.

FOREWORD

Vidwan P. K. Arunachala Gounder has taken great pains in the preparation of Tamil Readers for use in the fourth and fifth forms of High Schools. It is difficult to provide material which will not be too advanced for students at that stage of their career, and yet will provide sufficient range of interest to make Tamil study attractive and not a bore to the student. I think Mr. Arunachala Gounder has been very successful. The poetical selections show great range of knowledge and discrimination; there is a sufficient element of classical Tamil verse; there are also well chosen selections from modern verse, and even from popular compositions. The student who has carefully studied these two readers will realise that Tamil literature is not a static thing, but is continuing to grow. The prose selections illustrate the growth of a real standard prose literature in Tamil. There is not as yet any prose literature which can be called classical, in the sense in which Addison and Steele are classical in English or Pascal in French. But there is growing up a volume of Tamil prose material, well expressed and thoughtful. This has appeared largely in periodical form. It is one of the merits of these readers that the compiler has scrutinized recent periodical literature in Tamil and has laid it under contribution for his two books. I am sure that all intelligent High School students will find in these two books much to interest them, and, more important still, will find here good models for their own prose composition. It cannot yet be said that even a majority of those who have taken the High School course can write their own language fluently or gracefully. A careful study of these two books should at least put students on the way towards knowing how modern Tamil can be intelligently written.

STEPHEN TIRUNELVELY.

முன்னுரை

நாலைந்து பாரங்களில் தாய்மொழியிலே கல்வி பயிலும் மாணவர் தகுதியை மனத்திற்கொண்டு, அவர்க்கு இளைப்பாறி மகிழும் வாயிலாகத் தொகுக்கப் பெற்றது இவ்வாசக மாலை. நவில் தொறும் நயமிகும் பாடல்களும், காவியத்தில் சுவை கனியும் பகுதிகளும், பல்லாயிரவர் பாராட்டுப் பெற்ற கட்டுரை களுமே இதன்கண் இடங்கொண்டிருப்பன.

தாங்கள் அரிதின் முயன்று வெளியிட்ட கட்டுரைகளையும் கவிகளையும் இந்நூல் திரட்டில் சேர்த்துக் கொள்ளுமாறு அன்புடன் அனுமதியளித்த ஆசிரியப் பெரியார்களுக்கும் பத்திராதிபர்களுக்கும், தங்கள் நூல்களினின்றும் சில பகுதிகளை உவந்துதவியும், வியாசங்களை வரைந்துதவியும், வாசகமாலை சமைவதற்கு ஆதரவாயிருந்த நண்பர்களுக்கும், நான் பட்டுள்ள கடன் உணரக்கூடியதே யன்றி உரைக்கக் கூடியதன்று.

இந் நூலைத் தங்கள் பிரசுரமாக வெளியிட்ட ஸ்ரீவை. சிவகாமி பதிப்பகத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ம. தி. தா. இந்து காலேஜ்,
திருநெல்வேலி.
14-1-41.


கு. அருணசலக் கவுண்டர்.

பொருளடக்கம்

கவிப்பூஞ்சோலை.

வசனமலர்

கவிப்பூஞ்சோலை



ராவ் ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C.

தமிழ் வாசக மாலை

இரண்டாம் புத்தகம்

1. புதியபாடல்

1. அஞ்சலி

—இராமலிங்க சுவாமிகள்.

தனித்தனிமுக் கனிபிழிந்து
வடித்தொன்றுக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின்
பொடியுமிகக் கலந்தே,

தனித்தநறுந் தேன்பெய்து
பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம்
பருப்பிடியும் விரவி,

இனித்தநறு நெய்யளைந்தே
இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும்
இனித்திடுந்தெள் ளமுதே!

அநித்தமறத் திருப்பொதுவில்
விளங்குநடத் தரசே!
அடிமலர்க்கென் சொல்லணியாம்
அலங்கல்அணிந் தருளே.

2. 'எம் அன்னையே!'

—அ. மாதவையர்.

இந்தியா, எம் அன்னையே !

உன் பொருட்டு யாம் என்ன செய்துளோம்?
உன் பொருட்டு யாம் என்ன செய்கிலோம்?
இந்தியா, எம் அன்னையே!

பொருவில் இன்னருள் பொலியும் உன்விழி;
மருவும் ஞானமும் மாண்பும் உன்மொழி;
'தருமமே ஜயம்! சத்யமே சுகம்!
மருமம் ஈது; அறிந்து உலகில்வாழ்' என
இந்தியா, எம் அன்னையே!

பூ தலத்திலே எந்தநாடு தான்,
நீ படைத்த நற்சீர் படைத்தது?
இந்தியா, எம் அன்னையே!

அற்றை நாள்முதல் இற்றை நாள்வரை
பெற்றுநீ விடும் கொற்ற வீரரை
உத்த மத்திறப் புத்தி மான்களை
ஒத்தபேர்கள் வேறு எத்தலத்து உளார்?
இந்தியா எம் அன்னையே!

3. தமிழ்த்தாய்

—ச. சோமசுந்தர பாரதி.

பாடுதும்நாம் தமிழணங்கின் பல்புகழும்; பாடிப்
பரவுதுமேல் அவளருளப் பட்டுயர்வோம் அன்றே;
ஈடுயர்வில் மொழிக்குழவி என்றும்வளர் இளமை
எழில்இனிமைக் கிழவியைநாம் ஏத்திஇறைஞ் சிடுவாம்.

மண்ணுலகில் மொழிகள்பல மாண்டிடநாம் காண்போம்;
வளமலி நூல் பலபடைத்தும் வாழ்ந்தில அம்மொழிகள்;
எண்ணரிய வயதுமுதுக் குறை(வு)அறத்தால் முதியள்;
எழில்இளமை வளம்இறவாக் கன்னிதமிழ்க்கடவுள்.

தன்னிகரி லாதபழங் கபிலன்உயர் கம்பன்
தமிழ்சொல்இளங்கோவொடுமுன் வள்ளுவரைத்தந்தாள்;
கன்னியழி யாமல்அருங் கருவில்முதிர் கலைகள்
கற்பம்அழி யாதகவி உலகுபல தருவாள்.

நல்லதமிழ் நங்கைவளம் நாடுதும்நாம் நாடி;
நானிலத்து மேன்மொழிகள் நல்குபல நலமும்
எல்லையறும் எழில்இளையாட்(கு)அணிந்துமகிழ்ந்தேத்தி
என்றும் இசை வளர்க்குவம்பல் லாண்டுநிதம்பாடி.

4. இளந்தமிழா !

—நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை.

தமிழன் என்ற பெருமை யோடு
தலைநி மிர்ந்து நில்லடா;
தரணி எங்கும் இணையி லாஉன்
சரிதை கொண்டு சொல்லடா;

அமிழ்தம் என்ற தமிழின் ஓசை
அண்ட முட்ட உலகெலாம்,
அகில தேச மக்க ளுங்கண்
டாசை கொள்ளச் செய்து,மேல்

கமழ் ம ணத்தின் தமிழில் மற்ற
நாட்டில் உள்ள கலையெலாம்
கட்டி வந்து தமிழர் வீட்டில்
கதவி டித்துக் கொட்டியே,

நமது சொந்தம் இந்த நாடு
நானி லத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்து வாழ்க நீண்டநாள்.

5. தமிழ்க்காதல்

—பாரதி தாஸன் (கனக - சுப்புரத்தினம், புதுச்சேரி)

கமலம் அடுக்கிய செவ்விதழால் - மலர்க்
காட்டினில் வண்டின் இசைவளத்தால்
கமழ்தரு தென்றல் சிலிர்சிலிப்பால் - கருங்
கண்மலரால் முல்லை வெண்ணகைப்பால்

அமையும் அன்னங்களின் மென்னடையால் - மயில்
ஆட்டத்தினுல் தளிர் ஊட்டத்தினுல்
சமையும் ஒருத்தி அப் பூஞ்சோலை - எனைத்
தன்வசம் ஆக்கிவிட் டாள்ஒருநாள்;

சோலை அணங்கொடு திண்ணையிலே - நான்
தோளினை ஊன்றி இருக்கையிலே
சேலை நிகர்த்த விழியுடையாள் - என்றன்,
செந்தமிழ்ப் பத்தினி வந்துவிட்டாள்!

சோலை எல் லாம் ஒளி வான மெலாம் - நல்ல
தோகையர் கூட்ட மெலாம் அளிக்கும்
கோல இன்பத்தை என் உள்ளத்திலே - வந்து
கொட்டிவிட் டாள் எனைத் தொட்டிழுத்தாள் !

6. பாரசிகக் கவியமுதம்

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

நிலையின்மை

வாராய் நண்ப வருத்தமெனும்
வாடைக் காலப் போர்வையினை
நேராய் வருமிவ் வசந்தமெனும்
நெருப்பில் வீசி எறிவாயே.
தேரா வாழ்வின் பறவையின்னும்
செல்லுந் தூரம் சிறிதேயாம்;
பாராய் பாராய் பறவையதோ
பறக்கச் சிறகும் விரித்ததுவே. 1

வாழ்க்கை இன்பம்

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையந் தருமிவ் வனம்அன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ? 2

அன்பே யானும் நீயும் இசைந்
தயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்
துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப்பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ? 3

வாழும் வகை

இல்லாப் பொருளுக் கேங்காமல்,
இருக்கும் பொருளும் எண்ணுமல்,
எல்லாம் வல்ல எம்பெருமான்
இரங்கி அளக்கும் படிவாங்கி,
நல்லார் அறிஞர் நட்பையும் நீ
நாளும் நாளும் நாடுவையேல்,
நில்லா உலகில் நிலைத்தசுகம்
நீண்டு வளரும் நிச்சயமே. 4

7. மாதாவும் வாய்பேசா மகவும்

—ராவ்சாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார் ஜி. பி. வி. சி.

'துணிவுடைச் சிறுநர! சொல்லுதி இன்னே.
உன்னாற் பெறலாம் ஊதியம் என்னே?
என்பயன் நின்னால் என்ப தறியேன்?
சொல்ல வல்லையேல், சொல்லுதி ஒல்லே.
தாமரை இதழெனத் தயங்குகை விரலாய்!
திங்களைச் சூழ்ந்து திகழ்கரு முகில்போல்
சுந்தர வதனஞ் சூழ்ந்து தொங்கி
இருண்டு சுருண்டெழில் எறிக்குங் குஞ்சியாய்!
ஒருநாள் போல உறுபல நாளும்நீ
செய்சிறு குறும்புக் கெய்தல விலையால்;
யாவது நின்னால் ஆவ தென்ன
உன்னாற் சொல்ல ஒல்லும் என்னில்,
நன்குசிந் தித்து நவிலுதி வல்லே'
என்றேன்; என்றலும், இருசிற் றடிகள்
குறு குறு நடந்தெனைக் குறுகிஎன் மடிமேல்
உற்றன; மிருகளி ஒளிர்எழில் இளவிழி
கூர்ந்தெனை நோக்கின; குறுநகை அரும்பின;
இருசிறு செங்கைகள் என்னிரு கதுப்பினை
இறுகுறப் பற்றியீர்த் தினிதின் அணைத்தன;
'உனது வினவுக் குறுவிடை கேட்டி;
அன்னாய்! யான்உனக் கன்பு செய்தலே
என்னா லாம் பயன்' எனல் போல்
பவளவாய் திறந்ததென் பாக்கியந் தானே.

வேறு

ஆஆ! உனக்கன்(பு)
அகலேன்; அவ் வெண்ணமதும்
நோவே; அஃ தாற்றேன்.
நுவலிறைவன்—சாவாதே
நான்சிலநாள் வாழவைத்தால்
நன்றியறி வோடுகைம்மா(று)
யான்செய்வேன் என்நல்தா யே.

8. மானங்கெடவரின்

—ராவ்சாஹிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார் ஜி. பி. வி. சி.

என்செய்கேன்! என்செய்கேன்!
எவ்வா(று) இனிஉய்கேன்?
முன்செய்மா பாவம்எனை
முற்றியதோ? — வன்செயலால்
இக்கணமே சாதல்
இயலாதே! எங்ஙனம்இத்
துக்கம்யான் தாங்குவன்அந் தோ? 1

மேகம்இன்றி மின்இன்றி
வெள்ளிடிமேல் வீழ்ந்தாற்போல்
மாகொடும்துன் பாம்விபத்து
வந்ததே! - ஆ! கெடுவேன்;
முன்னறிந்து தப்ப
முடியவில்லை; சாகவில்லை;
என்னதஞ்சம் உண்டிங் கெனக்கு? 2

தப்பிடற்கோ மார்க்கமிலை;
சாவதற்கும் அப்படியே;
இப்படிக்கோ என்னூழ்
இருந்த(து)அந்தோ! - சொப்பனத்தும்
யாவருமே எய்துவள்என்(று)
எண்ணாக் கதிஎனக்கே
மேவியதே! ஆ! தெய்வ மே. 3

வெய்யபுலி கொல்லாதோ?
விண்ணேறு வீழாதோ?
சையம்உயிர் சாக, மேல்
சாயாதோ? — மையுததி
பொங்கி அழுத்தாதோ?
பூதலம்வாய் அங்காந்து
நுங்கி ஒழிக்காதோ? நொய்து. 4

நிறை, கேட்டை எய்திடுமா
நேரின், உயிர் நீத்(து)அந்
நிறைகாத்தல் நல்ல
நெறியாம்; — நிறைகாத்தற்(கு)
என்உயிரை நீக்கறமும்
இல்லேன்; இப் போதுசெய்தற்(கு)
என்உரிய(து?) என்றுள் இனைந்து. 5

9. துரியோதனன் சபையில்

—சி. சுப்பிரமணிய பாரதி.

பாஞ்சாலி,

ஆடை குலைவுற்று நிற்கிருள்—அவள்
ஆவென் றழுது துடிக்கிருள்—வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன்—அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிருன்; — இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும் — கரை
மீறி எழுந்தது வெஞ்சினம். — துயர்
கூடித் தருமனை நோக்கியே—அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டீரோ?

'நாட்டை எல்லாந் தொலைத்தாய்—அண்ணே!
நாங்கள் பொறுத்திருந்தோம்;
மீட்டும் எமையடிமை—செய்தாய்;
மேலும் பொறுத்திருந்தோம்.
துருபதன் மகளைத்—திட்டத்
துய்நன் உடன்பிறப்பை
இருபகடை என்ருய்—ஐயோ!
இவர்க்கடிமை என்ருய்.

இது பொறுப்ப தில்லை—தம்பி
எரிதழல் கொண்டு வா;
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித் திடுவோம்.'

என்று வெகுள, விஜயன் 'என்ன
சொன்ஞய்? வீமா! எங்கு? யாவர்
முன்னே?

'தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்;
தருமமறுபடி வெல்லும்' எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகங்கற்கும்.
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலுங் காண்போம்; இன்று
கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம்மாறும்;
தருமத்தை அப்போது வெல்லக்காண்போம்;
தனுவுண்டு; காண்டீவம் அதன்பேர்' என்ருன்.

10. சிலுவைப்பாட்டு

—எச். ஏ. கிருஷ்ண பிள்ளை.

வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி அவதரித்த எம்மான் சருவேசன்,
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ளர் இருவரொடுங் கல்வாரி நோக்கினார். 1

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன் மறுகூடு வரக்கண்டார் அணிநகரார். 2

செந்தா மரைபோல் திகழுந் திருவதனம்
அந்தோ வதங்கி அழகுகுடி போயதென்பார்;
நந்தாக் கருணை நறுந்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழுந்து விட்டதென்பார் 3

வேறு

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி எவ்வுயிரும்
செப்பரிய துயருழப்பச் செருசலேயைப் புறம்போக்கி,
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன்மனக்கொலைஞர்வதைபுரிவான்கொலைக்களத்தில்.

ஈண்டினியான் புகல்வதெவன்? எம்பெருமான் திருமேனி
தீண்டினார்; சிலுவையொடு சேர்த்தினார்; செங்கையினும்
காண்டகுசே வடியினும்வெவ் விருப்பாணி கடாவினார்;
நீண்டசிலு வையைஎடுத்து நிறுத்தினர் நிலங்கீண்டு. 5

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழிய,
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை. 6

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்(து)'எந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியும்'என்றெழிற்கனிவாய்மலர்ந்தார்நம்அருள்வள்ளல்.

இத்தகைய அரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே
வித்தகனுக்கடித்தொழும்பர்எனத்தகுமெய்க்கிறிஸ்தவர்;மற்
றித்தகைய குணமிலருங் கிறிஸ்தவரென் றிசை பெறுதல்;
செத்தவரைத் துஞ்சினவர் எனஉரைக்குஞ் சீர்மைத்தால். 8

2. தனிப்பாடல் I

1. இராமநாடக அரங்கேற்றம்

—சீகாழி அருணாசலக் கவிராயர்.

சித்திதரு கிறவல்லி புத்திதரு கிறவல்லி
தேவர்கள் வணங்கு வல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணையாலே,

சத்தியவா சகனென்று பூமண்ட லாதிபர்கள்
தாமெங் கணுந்துதிக்கும்
சகலபா ஷாநிபுண மணலிமுத் துக்கிருஷ்ண
சதுர! நீ வாழி கண்டாய்;

நத்துமலர் குவளைநான், மதியம் நீ; செஞ்சாலி
நான்,கருவி மழைமேகம் நீ;
நளினம்நான், பரிதிநீ; பிள்ளைநான், அன்னைநீ;
நான்கவிஞன், வழுதிநீகாண்.

சுத்தமுள ராமாய ணந்தனைக் கொண்டுனது
சுமுகமது பெறவருகிறேன்;
சொற்பொருள் அறிந்தளவுசொல்லுவேன்; கேட்கவே
துணையாக வேணுநீயே.

2. 'நல்குரவே!'

—மதுரகவி.

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல;
நாளைக் கிருப்பாயோ நல்குரவே? - காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே? நானெங்கே?
இன்றைக்கே சற்றே இரு.

3. 'எத்தால் விடியும்?'

—ஒப்பிலாமணிப் புலவர்.

ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ? யான்வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ? - ஊழி
திரண்டதோ கங்குல்? தினகரனும் தேரும்
உருண்டதோ பாதாளத் துள்?

அரவம் கரந்ததோ? அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப் போச்சோ? - இரவிதான்
செத்தானோ? இல்லையோ? தீவினையோ? பாங்கி! எனக்(கு)
எத்தால் விடியும் இரா?

4. செகவீரன் ஆணை

—பழம் பாடல்.

வடக்கும் கிழக்கும்தென் மேற்கும் திகாந்தமும்
மன்னர்குழும்(பு)
அடக்கும் தென்பாஞ்சைச் செகவீர பாண்டியன்
ஆணைஎன்றால்,
கடக்கும் அரிதென்(று) எறும்பா னது நின்று
கால்பதறிக்
கிடக்கும்; நடக்கும்,பின் உத்தர வானகில்
லாக்குகண்டே.

5. கள்வனோ நீ?

—நமச்சிவாயப் புலவர்.

மெய்யாரப் புலிகாணப் பொதுவி லாட்டை
மிகஎடுத்தீர்; உமையாளுக் கொருபங் கீந்தீர்;
பையாரப் பணமெடுத்தீர்; ஐயா! நீர்தாம்
பாரறியச் சக்கரத்தை மாலுக் கீந்தீர்;
செய்யாரத் தடம்புடைசூழ் கருவை வாழும்
திருக்களா ஈச்சுரரே! தேவ ரீர்தாம்
கையார மழுவெடுத்துக் காட்டி னாலும்
களவும்மைக் கொண்டேநான் காண்பிப் பேனே.

6. கலைக்குப் பலி

—கழைக்கூத்தி.

மாகுன் றனையபொற் றோளான் வழுதிமன்,
வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப் பார்த்திலன்;
பையப்பையப்
போகின்ற புள்ளினங் காள்! புழற் கோட்டம்
புகுவதுண்டேல்,
சாகின் றனள்என்று சொல்வீர் அயன்றைச்
சடையனுக்கே.

7. 'நீதியோ இது?'

—அந்தகக் கவிவீரராகவ முதலியார்.

மின்னு மாளிகை அனந்தை யாதிபதி
சந்த்ர வாணமகி பாலன்முன்
வீர ராகவன் விடுக்கும் ஓலை; தன்
விருப்பி னுல்வலிய வே அழைத்(து)

உன்னு காவிய மதிற்பெ ருத்ததொரு
கோவை ஓதுகென ஓதினன்;
ஓதி மாதமொரு மூன்று போகிஒரு
நாலு மாதம்அள வாகவும்,

இன்ன முந்தனது செவியி லேறவிலை;
என்ன இந்தஉல கெண்ணுமோ?
இராச ராசர்திறை கொள்ளும் என்கவிதை
இங்கு வந்துகுறை வாகுமோ?

தன்னை என்சொலுவர்? என்னை என்சொலுவர்?
தான் த மிழ்க் குமணன் அல்லவோ?
தன் பு கழ்க்கும்இது நீதி யோ? கடிது
தானிந் நேரம்வர வேணுமே.

8. 'இன்னும் காணன்'

—படிக்காசன்.

தரைகண்ட மட்டும் படர்ந்தண்ட கோளமுந் தாவி எங்கும்
உரைகண்ட கீர்த்தி பெறுஞ்சீதக் காதி! உலகி னில்வெண்
திரைகண் டெழுங்கடல்மீதேதன் வங்கத்தைச் செல்லவிட்டுக்
கரைகண்டவன்,இனங்காணன்என் ஆசைக்கடற்க ரையே.

9. தமையனுந் தம்பியும்

—அதிவீரராம பாண்டியன் தாயர்.

செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே - விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்.

10. 'தெய்வச்செயல்'

—பராக்ரம பாண்டியன்.

சேலே றியவயல் தென்காசி ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்த(து)இங் கென்செயல் அல்ல; அதனைஇன்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பார்கள்அடி விழ்ந்(து,)அவர்தம்
பாலேவல் செய்து, பணிவன் பராக்ரம பாண்டியனே.

11. எங்கேயோ!

—சாஸனப் பாடல்.

கோதற்ற பத்தி அறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ?
தீதற்ற வெள்ளிச்சிலம்பகத்தோ?செம்பொன் அம்பலத்தோ?
வேதத்தி லோ?சிவ லோகத்தி லோ?விச்வ நாதனிரு
பாதத்தி லோ?சென்று புக்கான் பராக்ரம பாண்டியனே.

12. 'என்ன பிழைப்பு?'

—பழம் பாடல்.

கன்னலெனுஞ் சிறுகுருவி ககனமழைக் காற்றுமல்
மின்னலெனும் புழுவெடுத்து விளக்கேற்றுங் கார்காலம்;
மன்னவனுக் தென்மதுரை மாவலிவா ணனைப்பிரிந்திங்
கென்னபிழைப்பென்ன இருப் பென்னநகைப் பின்னமுமே.

13. புக்கக வாழ்வு

—பழம் பாடல்.

இராமழை பெய்த விரா ஈரத்துச்
செங்கோல் வேந்தன் உழவ னாகிப்
பனைநுகங் கொண்டு யானைஎர் பூட்டி
வெள்ளி விதைக்கப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வு:
செங்காய் வரகுப் பசுங்குரல் கொய்து,
கன்று காத்துக் குன்றின் உணக்கி,
ஊடுபதர் போக்கி,முன் உதவினோர்க் குதவி,
காடுகளை இந்தனம் பாடுபார்த் தெடுத்து,
குப்பைக் கீரை உப்பின்றி வெந்து,
இரவல் தாலம் விரைவுடன் எடுத்துச்,
சோறு கொண்டு பிறல் அடைத்து,
ஒன்றவிட் டொருபொழுது தின்றே கிடப்பினும்
நன்றே தோழிநம் கணவன் வாழ்வே.

3. பிரபந்தகவி

1. ஒரு நாடகம்

—குற்றலக் குறவஞ்சி.

திரிகூடநாதர் பவனிவருதல்

மூக்கெழுந்த முத்துடையார் அணிவகுக்கும்
நன்னகர மூதூர் வீதி
வாக்கெழுந்த குறுமுனிக்கா மறிஎழுந்த
கரங்காட்டும் வள்ள லார், சீர்த்
தேக்கெழுந்த மறைநான்கும் சிலம்பெழுந்த
பாதர், விடைச் சிலம்பில் ஏறி
மேக்கெழுந்த மதிசூடிக் கிழக்கெழுந்த
ஞாயிறுபோல் மேவி னரே. 1

பவனி காணவரும் பெண்கள் வருணனை

ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும்
ஒருகோடி மான்கள்போல் வருகோடி மடவார்,
'புரிநூலின் மார்பன்இவன் அயன்'என்பார்; 'அயனாகில்
பொங்கரவம் ஏது? தனிச் சங்கமே தேன்'பார்.
'விரிகருணை மால்'என்பார்; 'மாலாகில் விழியின்மேல்
விழியுண்டோ?முடியின்மேல்முடியுண்டோ?'என்பார்;
'இருபாலும் நான்முகனும் திருமாலும் வருகையால்
ஈசன்இவன் திரிகூட ராசனே' என்பார். 2

வசந்தவல்லி பந்தடித்தல்

சூடக முன்கையில் வால்வளை கண்டிரு
தோள்வளை நின்றாடப், புனை
பாடக முஞ்சிறு பாதமும் அங்கொரு
பாவனை கொண்டாட, நய
நாடக மாடிய தோகை மயிலென
நன்னகர் வீதியிலே, அணி
ஆடக வல்லி வசந்த வொய்யாரி
அடர்ந்துபந் தாடினளே. 3

வசந்தவல்லி திரிகூடநாதரைக் காணுதல்

முனிபரவும் இனியானோ? (வேத)முழுப்பலவின்கனிதானோ?
கனியில்வைத்த செந்தேனோ? கருத்துருக்க வந்தானோ?
தினகரன்போற் சிவப்பழகும் திருமிடற்றில் கறுப்பழகும்
பனகமணி இருகாதும்(கண்டால்)பாவையுந்தான் உருகாதோ?

1788

வசந்தவல்லி சந்திரனைப் பழித்தல்

தண்ணமு துடன்பிறந்தாய் வெண்ணிலாவே அந்தத்
தண்ணளியை ஏன்மறந்தாய்? வெண்ணிலாவே!
பெண்ணுடன் பிறந்ததுண்டோ? வெண்ணிலாவே!என்றன்
பெண்மை கண்டுங் காயலாமோ? வெண்ணிலாவே!
விண்ணிலே பிறந்ததற்கோ வெண்ணிலாவே! எரு
விட்டுநான் எறிந்ததற்கோ வெண்ணிலாவே
கண்ணில்விழி யாதவர்போல், வெண்ணிலாவே! மெத்தக்
காந்தி, ஆட்டம் ஆடுகிறாய்; வெண்ணிலாவே!

குறிசொல்லுங் குறத்தி வருதல்.

சைவமுத் திரையை வானின்மேல் தரிக்குந்
தெய்வமுத் தலைசேர் திரிகூட மலையான்,
பூவளர் செண்பகக் காவளர் தம்பிரான்,
தேவர்கள் தம்பிரான் திருவருள் பாடி,
இலகு நீ றணிந்து, திலகமும் எழுதிக்,
குலமணிப் பாசியுங் குன்றியும் புனைந்து,
சலவைசேர் மருங்கிற் சாத்திய கூடையும்,
வலதுகைப் பிடித்த மாத்திரைக் கோலும்,
கன்னடந் தெலுங்கு கலிங்கராச் சியமும்
தென்னவர் தமிழால் செயத்தம்ப நாட்டி,
காலமுன் போங்குறி கைப்பல னுங்குறி
மேலினி வருங்குறி வேண்டுவார் மனக்குறி
மெய்க்குறி கைக்குறி விழிக்குறி மொழிக்குறி
எக்குறி யாயினும் இமைப்பினில் உரைக்கும்
மைக்குறி விழிக்குற வஞ்சிவந் தனளே. 6

குறத்தி மலைவளங் கூறுதல்

ஆடும்அர வினுமணி கோடிவெயில் எறிக்கும்;
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்;
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தைஅகில் குங்குமமும் சந்தனமும் நாறும்;
காடுதொறும் ஓடிவரை யாடுகுதி பாயும்;
காகம்அணு காமலையில் மேகநிரை சாயும்;
நீடுபல ஈசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்குந் திரிகூட மலைஎங்கள் மலையே. 7

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை யம்மே!
கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை யம்மே!
எல்லுலவும் விந்தமலை எந்தைமலை யம்மே!
இமயமலை என்னுடைய தமையன்மலை யம்மே!
சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே!
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை யம்மே!
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாடும்
திரிகூட மலைஎங்கள் செல்வமலை யம்மே! 8

குறத்தி நாட்டுவளங் கூறுதல்

தக்க பூமிக்கு முன்புள்ள நாடு;
சகல தேவர்க்கும் அன்புள்ள நாடு;
இக்கெ லாம்வளர்ந் தோங்கிய நாடு;
சிவத்து ரோகமும் நீங்கிய நாடு;
முக்க ணன்விளை யாடிய நாடு;
முதிய நான்மறை பாடிய நாடு;
மைக்க ணாள்குழல் வாய்மொழி பாகர்
வசந்த ஆரிய நாடெங்கள் நாடே. 9

குறத்தி குறி சொல்லுதல்

என்னகுறி யாகிலுநான் சொல்லுவேன் அம்மே! சதுர்
ஏறுவேன் எதிர்த்தபேரை வெல்லுவேன் அம்மே!
மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநான் அம்மே! என்றன்
வயிற்றுக்குத் தினைபோதும் கஞ்சிவார் அம்மே!
பின்னமின்றிக் கூழெனினுங் கொண்டுவா அம்மே! வந்தால்
பெரிய குடுக்கைமுட்ட மண்டுவேன் அம்மே!
தின்னஇலை யும்பிளவும் அள்ளித்தா அம்மே! கப்பல்
சீனச்சரக் குத், துக்கிணி கிள்ளித்தா அம்மே! 10

மாறுமல் இருநிலத்தில் அறம்வளர்க்குங் கையே;
மனையறத்தால்அறம்பெருக்கித்திறம்வளர்க்குங்கையே;
வீறுக நவநிதியம் விளையும் இந்தக் கையே;
மேன்மேலும் பாலமுதம் அளையும் இந்தக் கையே;
ஆறுத சனங்கள்பசி ஆற்றுமிந்தக் கையே;
அணங்கனையார்வணங்கிநித்தம்போற்றுமிந்தக்கையே;
பேறுக நன்னகரங் காக்குமிந்தக் கையே;
பிறவாத நெறியார்க்கே ஏற்குமிந்தக் கையே. 11

2. தமிழருமை

—மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி.

பார்அறியும் அறிவினும்இப் பார்மேல் நின்ற
பசுஞானத் தானும்எட்டிப் பார்க்கொணாத
பேர்அறிவே! சிற்றறிவேற் கிருளைநீக்கும்
பேரொளியே! அங்கயற்கண் பிரியாதானே!
யார்அறிவார் தமிழருமை என்கின் றேன்;என்
அறிவினம் அன்றோ!உன் மதுரை மூதூர்
நீர்அறியும் நெருப்பறியும் அறிவுண் டாக்கி
நீஅறிவித் தாலறியும் நிலமுந் தானே.

3. மகள் மறுத்தல்

—திருவரங்கக்கலம்பகம்.

4 கோற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடனுக்கோமறவர் கொம்பைக் கேட்டாய்.
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்;
மற்றதுதான் திருமுகமே ஆனால், அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே? மன்னர் மன்னன்
பெற்றஇள அரசானால் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே.

4. ஊழிக்கூத்து

—சிதம்பரச் செய்யுட்கோவை.

கூற்றிருக்கும் அடலாழிக் குரிசில்முத
லோரிறைஞ்சக், கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்கும் தில்லைவனத் தசும்பிருக்கும்
பசும்பொன்மன்றத் தொருதாள் ஊன்றி,
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி
ரண்டமா டக்குழைத் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ! காண்மினோ!

5. கலிங்கப்போர்

—கலிங்கத்துப்பரணி.

1. காஞ்சியில்

பாரெ லாம் உடை யான்அப யன்கொடைப்
பங்க யக்கரம் ஒப்பெனப், பண்டொர்நாள்
காரெ லாம் எழுந் தேழுரை நாழிகை
காஞ்ச னம்பொழி காஞ்சி யதன்கணே, 1

அங்கண் ஞாலம் அனைத்தும் புயத்தில்வைத்
தாட கக்கிரி யிற்புலி வைத்தவன்,
சிங்க வாசனத் தேறி இருப்பதோர்
சிங்க வேறெனச், செவ்வி சிறக்கவே, 2

மண்ட லீகரும் மாநில வேந்தரும்
வந்து ணங்கு கடைத்தலை, வண்டைமன்
தோண்டை மான்முதல் மந்திர பாரகர்
சூழ்ந்து தன்கழல் சூடி இருக்கவே, 3

முறையி டத்திரு மந்திர ஓலையாள்
முன்வ ணங்கி, 'முழுவதும் வேந்தர்தம்
திறையி டப்புற நின்றனர்' என்றலும்,
செய்த நோக்கில்வந் தெய்தி நெருக்கவே, 4

வேறு

'அரசர்! அஞ்சல்'என அடியிரண்டுமவர்
முடியில் வைத்தருளி, அரசர்மற்(று)
'உரைசெ யும்திறைகள் ஒழிய நின்றவரும்
உளர்கொல்?' என்றருளு பொழுதிலே, 5

'கடவ தம்திறைகொ டடைய வந்தரசர்
கழல்வ ணங்கினர்கள்; இவருடன்
வடக லிங்கர்பதி அவனி ரண்டுவிசை
வருகி லன்திறைகொ டெ'னலுமே, 6

'எளியன் என்றிடினும் வலிய குன்றரணம்
இடிய நம்படைஞர் கடிதுசென்(று)
அளியல் அம்புமத மலைகள் கொண்டணைமின்;
அவனை யுங்கொணர்மின்' எனலுமே, 7

இறைமொ ழிந்தளவில் 'எழுக லிங்கமவை
எறிவென்' என்றுகழல் தொழுதனன்,
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநகர் அரசனே. 8

2. படை யெழுச்சி.

வேறு

கடல்க லக்கவோ? மலையி டிக்கவோ?
கடுவி டப்பொறிப் பணபணிப்
பிடரொ டிக்கவோ? படை நினைப்பெனப்
பிரள யத்தினில் திரளவே. 9

வேறு

அகில வெற்பும் இன்(று)ஆனை யானவோ?
அடைய மாருதம் புரவி யானவோ?
முகில னைத்தும்அத் தேர்கள் ஆனவோ?
மூரி வேலைபோர் வீரர் ஆனவோ? 10

வேறு

எழுந்தது சேனை; எழலும், இருந்தது பாரின் முதுகு;
விழுந்தன கானம் அடைய; வெறுந்தரை யான நதிகள்.
அதிர்ந்தன நாலு திசைகள்; அடங்கின எழுகடல்கள்;
பிதிர்ந்தன மூரி மலைகள்; பிறந்தது தூளி படலம். 12

வேறு

பாலாறு குரைத்தலைபொன் முகரியாறு
பழவாறு பரந்தெறியுங் கொல்லியென்னும்
நாலாறும் அன்றொருநாள் கடந்துபெண்ணை
நதியாறுங் கடந்துடனே நடந்துசெல்ல. 13

வேறு

கடையிற் புடைபெயர் கடலொத் தரசர்
கலங்கும் பரிசு கலிங்கம்புக்
கடையப் படர்எரி கொளுவிப் பதிகளை
அழியச் சூறைகொள் பொழுதத்தே; 14

'கங்கா நதியொரு புறமா கப்படை
கடல்போல் வந்தது; கடல் வந்தால்
எங்கே புகலிடம்? எங்கே இனியரண்?
யாதோ இதுஇது? விதி'என்றே. 15

'இடிகின் றனமதில்; எரிகின் றனபதி;
எழுகின் றன புகை; பொழில் எல்லாம்
மடிகின் றன; குடி கெடுகின் றனம்; இனி
வளைகின் றனபடை பகையென்றே.' 16

உரையிற் குழறியும் உடலிற் பதறியும்
ஒருவர்க் கொருவர்முன் முறையிட்டே
அரையில் துகில்விழ அடையச் சனபதி
அடியிற் புகவிழு பொழுதத்தே, 17

வேறு

அந்தரமொன் றறியாத வடகலிங்கர்
குலவேந்தன் அனந்த பன்மன்
வெந்தறுகண் வெகுளியினுல் வெய்துயிர்த்துக்
கைபுடைத்து வியர்த்து நோக்கி, 18

'கான்அரணும் மலைஅரணும் கடல்அரணும்
சூழ்கிடந்த கலிங்கர் பூமி
தான்அரணம் உடைத்தென்று கருதாது
வருவதும்அத் தண்டு போலும்! 19

வேறு

பண்ணுக வயக்களிறு; பண்ணுக வயப்புரவி;
பண்ணுக கனிப்பில் பலதேர்;
நண்ணுக படைச்செருநர்; நண்ணுக செருக்களம்;
நமக்கிகல் கிடைத்தது'எனவே, 20

3. போர்

வேறு

'எடும்எடும் எடும்'என எடுத்ததோர்
இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே,
'விடுவிடு விடுபரி; கரிக்குழாம்
விடும்விடும்' எனும்ஒலி மிகைக்கவே, 21

எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களும்எதிர் கிடைக்கவே,
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே, 22

குருதியின் நதிவெளி பரக்கவே,
குடர்நிரை நுரைஎன மிதக்கவே,
கரிதுணி படும்உடல் அடுக்கியே
கரைஎன இருபுடை கிடக்கவே. 23

வேறு

கலக்க மற்ற வீரர்வாள், கலந்த சூரர் கைத்தலத்
துலக்கை யுச்சி தைத்தபோ துழுங்க லப்பை ஒக்குமே.
வாளில் வெட்டி வாரணக்கை தோளில் இட்ட மைந்தர்தாம்
தோளில் இட்டு நீர்விடும் துருத்தி யாளர் ஒப்பவே. 25

வேறு

ஒருவர் ஒருவரின் ஓட ஓட முந்தினர்;
உடலின் நிழலினை ஓட அஞ்சினர்;
'அருவர் அருவர்' எனுஇ றைஞ்சினர்;
'அபயம் அபயம்' எனாந டுங்கியே. 26

வேறு

அப்படிக் கலிங்கர் ஓட, அடர்த்தெறி சேனை வீரர்
கைப்படு களிறு மாவும் கணித்துரைப் பவர்கள் யாரே? 27

வேறு

வேடத்தால் குறையாது முந்நூ லாக
வெஞ்சிலைநாண் மடித்திட்டு, 'விதியால் கங்கை
ஆடப்போந் தகப்பட்டேம் காத்தோம்(பு') என்றென்(று)
அபிதாவிட் டுயிர் பிழைத்தார் அநேகர் ஆங்கே. 28

'சேனைமடி களங்கண்டு திகைத்து நின்றேம்;
தெலுங்கரேம்' என்றுசிலைக் கலிங்கர் தங்கள்
ஆனைமணி யினைத்தாளம் பிடித்துப் பாடி,
யாழ்ப்பாணர் எனப்பிழைத்தார் அநேகர் ஆங்கே. 29

கடற்கலிங்கம் எறிந்துசயத் தம்ப நாட்டிக்,
கடகரியும் வயமாவும் தனமுங் கொண்டு,
சுடர்க்கதிர்வாள் அபயன்அடி அருளி னோடும்
சூடினன் வண்டையர்கோன் தொண்டைமானே. 30

4. களங்காணல்

'வாய்மடித்துக் கிடந்ததலை மகனை நோக்கி,
"மணிஅதரத் தேதேனும் வடுவுண் டாயோ?
நீமடித்துக் கிடந்தது!" எனப் புலவி கூர்ந்து,
நின்றாவி சோர்வாளைக் காண்மின்! காண்மின்! 31

தரைமகளும் தன்கொழுநன் உடலந் தன்னைத்
தாங்காமல் தன்கரத்தால் தாங்கி, விண்ணாட்(டு)
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்! 32

"பொருதடக்கை வாளெங்கே? மணிமார் பெங்கே?
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே?" என்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!' 33

4. காவியம்

1. திலகவதியார்

—பெரியபுராணம் - சேக்கிழார்

நாடும் நகரும்

காலெல்லாம் தகட்டுவரால்; கரும்பெல்லாம் கண்பொழிதேன்;
பாலெல்லாம் கதிர்ச்சாலி; பரப்பெல்லாம் குலைக்கமுகு;
சாலெல்லாம் தரளநிரை; தடமெல்லாம் செங்கழுநீர்;
மேலெல்லாம் அகில்தூபம்; விருந்தெல்லாம் திருந்துமனை. 1

இவ்வகைய திருநாட்டில் எனைப்பலஊர் களும்என்றும்
மெய்வளங்கள் ஓங்கவரு மேன்மையன; ஆங்கவற்றுள்
சைவநெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர். 2

குலமும் குடியும்

தலத்தின்கண் விளங்கியஅத் தனிப்பதியில், அனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நடைமருவுங் குடிநாப்பண்
விலக்கின்மனை ஒழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர் தங்குடிவிள(க்)கும்,

மக்கட்பேறு

புகழனார் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரும் மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்
நிகழுமலர்ச் செங்கமல நிரைஇதழின் அகவயினில்
திகழவருந் திருவனைய திலகவதி யார்பிறந்தார். 4

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்,
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல,
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார். 5

மணப் பேச்சு

அந்நாளில், திலகவதி யாருக்(கு)ஆண்(டு) ஆறிரண்டின்
முன்னாக, ஒத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்,
மின்னார்செஞ் சடைஅண்ணல் மெய்அடிமை விருப்புடையார்,
பொன்னாரும் மணிமௌலிப் புரவலன்பால் அருளுடையார்,

ஆண்டகைமைத் தொழிலின்கண் அடல்அரியே றெனவுள்ளார்,
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையார் எனும்பெயரார்,
பூண்டகொடைப் புகழனார் பால், பொருவில் மகள்கொள்ள
வேண்டிஎழுங் காதலினால் மேலோரைச் செலவிட்டார். 7

கலிப்பகை போர்க்களம் போதல்

கன்னிதிருத் தாதையார் மணம்இசைவு கலிப்பகையார்
முன்அணைந்தார் அறிவிப்ப, வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர் மாறேற்க, மற்றவர்மேல்
அன்னவர்க்கு விடைகொடுத்தான் அவ்வினைமேல் அவர்அகன்றார்.

சாவோலை

ஆயநா ளிடை, இப்பால், அணங்கனையாள் தனைப்பயந்த
தூயகுலப் புகழனார் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே இவ்வுலகை விட்டகலத்
தீயவரும் பிணிஉழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார் 9

மற்றவர்தாம் உயிர்நீப்ப, மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையும் துகளாக வேநீத்துப்,
பெற்றிமையால் உடன்என்றும் பிரியாத உலகெய்தும்
கற்புநெறி வழுவாமல் கணவனா ருடன் சென்றார். 10

தமக்கையும் தம்பியும்,

ஒருவாறு பெருங்கிளைஞர் மனந்தேற்றத் துயரொழிந்து
பெருவானம்அடைந்தவர்க்குச்செய்கடன்கள்பெருக்கினார்.
மருவார்மேல் மன்னவற்கா மலையப்போம் கலிப்பகையார்
பொருவாரும்போர்க்களத்தில்உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார்.

வெம்முனைமேல் கலிப்பகையார் வேல்வேந்தன்ஏவப்போய்
அம்முனையில் பகைமுருக்கி அமருலகம் ஆள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த பெருவார்த்தை தலஞ்சாற்றச்
செம்மலர்மேல் திருவனைய திலகவதியார் கேட்டார். 12

திலகவதியார் தவத்தின்திறம்

'எந்தையும்எம் அனையும் அவர்க்கெனைக்கொடுக்கஇசைந்தார்கள்
அந்தமுறை யாலவர்க்கே உரியதுநான்; ஆதலினால்
இந்தஉயிர் அவருயிரோ டிசைவிப்பன்' எனத்துணிய
வந்தவர்தம் அடிஇணைமேல் மருணீக்கி யார்விழுந்தார். 13

அந்நிலையில் மிகப்புலம்பி 'அன்னையும் அத் தனும்அகன்ற
பின்னையும், நான் உமைவணங்கப் பெறுதலினால் உயிர்தரித்தேன்.
என்னை இனித் தனிக்கைவிட் டேகுவீர் எனில்,யானும்
முன்னம்உயிர் நீப்பன்'என மொழிந்திடரின் அழுந்தினார்.

'தம்பியார் உளராக வேண்டும்'என வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க, உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி,
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார். 15

மருணீக்கியாரோ?
(அங்கவரும்) அமண்சமயத் தருங்கலைநூ லானவெலாம்
பொங்கும்உணர் வுறப்பயின்றே,அந்நெறியில்புலன்சிறப்பத்,
துங்கமுழு உடற்சமணர் சூழ்ந்துமகிழ் வார்,அவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனர்எனும் பெயர்கொடுத்தார்.

திலகவதியாரோ?
சென்றுதிரு வீரட்டா னத்திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து, கோதில் சிவசின்னம்
அன்றுமுதல் தாங்கி, ஆர்வமுறத் தங்கையால்
துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினர். 17

புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப், புனிறகன்ற
நலமலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு,
மலர்கொய்து கொடுவந்து, மாலைகளும் தொடுத்தமைத்துப்,
பலர்புகழும் பண்பினால் திருப்பணிகள் பலசெய்தார். 18

தாண்டுதவ விளக்கனையார்சுடரொளியைத்தொழுது'என்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
வேண்டும்'எனப் பலமுறையும் விண்ணப்பம் செய்தனரால்.

சிவனும், தருமசேனரை 'இனிச்சூலை மடுத்தாளுவம்' என அருள,

அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையும் அது
வடஅனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாம்
கொடியஎலாம் ஒன்றாகும் எனக்,குடரின் அகங்குடையப்
படருழந்து நடுங்கிஅமண் பாழியறை யிடைவிழுந்தார். 20

குண்டர்களும் கைவிட்டார்; கொடுஞ்சூலை கைக்கொண்டு
மண்டிமிக மேன்மேலும் முடுகுதலால் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத் திலகவதி யார்உளராக்
கொண்டு,அவர்பால் ஊட்டுவான் தனைவிட்டார்; அவனும்சென்று

(என்றவன்முன்) கூறுதலும் 'யான்அங்குன் னுடன்போந்து
நன்றறியா அமண்பாழி நண்ணுகிலேன் எனும்மாற்றம்
சென்றவனுக்குக் குரை' என்று திலகவதி யார்மொழிய
அன்றவனும் மீண்டுபோய்ப் புகுந்தபடிஅவர்க்குரைத்தான்.

தம்பி தமக்கையார்தாள் சேர்தல்

அவ்வார்த்தை கேட்டதுமே அயர்வெய்தி 'இதற்கினியான்
எவ்வாறு செய்வன்'என, ஈசரருள் கூடுதலால்
'ஒவ்வாஇப் புன்சமயத் தொழியாஇத் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக வதியார்தாள் சேர்வன்'என, 23

வந்தணைந்து, திலகவதி யார்அடிமேல் உறவணங்கி
'நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன்அனையீர்!
இந்தஉடற்கொடுஞ்சூலைக்கிடைந்தடைந்தேனினிமயங்கா
துய்ந்துகரை ஏறுநெறி உரைத்தருளும்' எனஉரைத்து, 24

தாளிணைமேல் விழுந்தயரும் தம்பியார் தமைநோக்கி,
ஆளுடைய தம்பெருமான் அருள்நினைந்து கைதொழுது,
'கோளில்பர சமயநெறிக் குழியில்விழுந் தறியாது
மூளும்அருந் துயர்உழந்தீர்! எழுந்திரீர்;' எனமொழிந்தார். 25

திருவாளன் திருநீறு திலகவதி யார்அளிப்பப்
'பெருவாழ்வு வந்த'தெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்(கு)
உருவார அணிந்து,தமக் குற்றஇடத் துய்யுநெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம்வந்தார். 26

திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயில் தொழுதுவலங் கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து, தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மா லைகள்சாத்தும் உணர்வுபெறஉணர்ந்துரைப்பார்.

வேறு

'முன்னம்அடி யேன்,அறி யாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேன்உமக் காளும்பட்டேன்;
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்;
தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்?
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே!' 28

தேவாரம்

என்றுபாட, அவர் 'வயிறுற்றடு சூலைமறப்பிணி' நீங்கியது;

மேவுற்றஇவ் வேலையில் நீடியசீர்
வீரட்டம் அமர்ந்த பிரானருளால்,
'பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப்
பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கரசு என்றுல கேழினும்நின்
நன்நாமம் நயப்புற மன்னுக'என்(று)
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறை
வானிடையே ஒருவாய்மை எழுந்ததுவே. 29

2. அசோகவனத்தில் அனுமான்

—கம்பராமாயணம்.

1. காட்சி

இவ்விடை, அண்ணல்அவ் விராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர் வீரத் தூதனும்
அவ்விடை எய்தினன்; அரிதின் நோக்குவான்
நொவ்விடை மடந்தைதன் இருக்கை நோக்கினன். 1

‘எள்ளரும் உருவின இலக்க ணங்களும்
வள்ளல்தன் உரையொடு மாறு கொண்டில;
கள்ளவாள் அரக்கன்,அக் கமலக் கண்ணனார்
உள்ளுறை உயிரினை ஒளித்து வைத்தவா! 2

மாசுண்ட மணியனாள், வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்;
காசுண்ட கூந்தலாள் கற்புங் காவலும்
ஏசுண்ட தில்லையால்; அறத்துக் கீறுண்டோ? 3

புனைகழல் இராகவன் புயத்தை யோ? புகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ?
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தங் குலத்தையோ? யாதைச் சாற்றுகேன்? 4

பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணநோற் றுயர்ந்தது, நங்கை தோன்றலால்;
மாணநோற் றீண்டிவள் இருந்த வாறெலாம்
காண,நோற் றிலன்அவன் கமலக் கண்களால். 5

தருமமே காத்ததோ? சழக்கன் தன்வினைக்
கருமமே காத்ததோ? கற்பின் காவலோ?
அருமையே! அருமையே! யாரி தாற்றுவார்?
ஒருமையே எம்மனோர்க் குரைக்கற் பாலதே!’ 6

என்றிவை இனையன எண்ணி, வண்ணவான்
பொன்றிணி நெடுமரப் பொதும்பர் புக்கவண்
நின்றனன்; அவ்வழி நிகழ்ந்த தென்னெனின்,
துன்றுபூஞ் சோலைவாய் அரக்கன் தோன்றினன். 7

2. நிந்தனை

சிகரவண் குடுமி நெடுவரை எவையும்
 ஒருவழி திரண்டன சிவண,
மகரிகை வயிர குண்டலம் அலம்புந்
 திண்டிறல் தோள்புடை வயங்கச்;
சகரவே லையினீர் தழுவிய கதிரின்
 தலைதொறுந் தலைதொறுந் தயங்கும்
வகையபன் மகுடம் இளவெயில் எறிப்பக்;
 கங்குலும் பகல்பட வந்தான். 8

இனையதோர் தன்மை எறுழ்வலி அரக்கர்
 ஏந்தல்வந் தெய்துகின் றானை
அனையதோர் தன்மை அஞ்சனை சிறுவன்
 கண்டனன்; அமைவுற நோக்கி,
வினையமுஞ் செயலும் மேல்விளை பொருளும்
 இவ்வழி விளங்குமென் றெண்ணி,
வனைகழல் இராமன் பெரும்பெயர் ஓதி,
 இருந்தனன் வந்தயல் மறைந்தே. 9

அவ்வி டத்தரு கெய்திஅ ரக்கன்தான்
'எவ்வி டத்தெனக் கின்னருள் ஈவது?
நொவ்விடைக்குயி லே!நுவல் கென்றனன்;
வெவ்வி டத்தை அமிழ்தென வேண்டுவான். 10

'குடிமை மூன்றுல குஞ்செயுங் கொற்றத்(து)என்
அடிமை கோடி அருளுதி யால்'என,
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கலான் 11

மல்லடு திரடோள் வஞ்சன் மனம்பிறி தாகும் வண்ணம்,
'கல்லொடுந் தொடர்ந்தநெஞ்சங் கற்பின்மேற் கண்டதுண்டோ?
இல்லொடுந் தொடர்ந்த மாதர்க் கேய்வன அல்ல வெய்ய
சொல்லிது;தெரியக்கேட்டி;துரும்பெ'னக்கனன்றுசொன்னாள்.

'பத்துள தலையுந் தோளும் பலபல பகழி தாவி,
வித்தக வில்லி னாற்குத் திருவிளை யாடற் கேற்ற
சித்திர இலக்க மாகும்; அல்லது செருவி லேற்கும்
சத்தியை போறும்! மேனாள் சடாயுவால் தரையின் வீழ்ந்தாய்!'

ஆண்ட வாளரக் கன்கனன்(று,) அண்டத்தை அழிப்பான்
மூண்ட காலவெந் தீயென, முற்றிய சீற்றம்
நீண்ட காதல்நீர் நீத்தத்தின் விவுறு நிலையில்
மீண்டு நின்றொரு தன்மையால் இவைஇவை விளம்பும். 14

'ஒன்றுகேள் உரைக்க;நிற்கோர்உயிரென உரியான்தன்னைக்
கொன்று,கோள் இழைத்தால்,நீநின்உயிர்விடில்,கூற்றங்கூடும்;
என்றனர் உயிரும் நீங்கும்; என்பதை இயைய எண்ணி
அன்றுநான் வஞ்சஞ்செய்த(து;) ஆரெனக்கமரின் நேர்வார்?

பள்ளநீர் அயோத்தி நண்ணிப்,பரதனேமுதலினோர் ஆண்(டு)
உள்ளவர் தம்மை எல்லாம் உயிர்குடித் தூழித் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத் தெளிதின் எய்திக்,
கொள்வன்நின் உயிரும்;என்னை அறிந்திலை குறைந்தநாளோய்!'

'அஞ்சுவித் தானும், ஒன்றால் அறிவுறத் தேற்றி யானும்,
வஞ்சியிற் செவ்வி யாளை வசித்தென்பால் வருவீர்;அன்றேல்
நஞ்சுமக் காவன்' என்னு, நகையிலா முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினந் தரக்கி மார்க்கு வேறுற உணர்த்திப் போனான்.

3. உருக்காட்டுகை

'பொறையிருந் தாற்றிஎன் உயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணும் ஆசையால்;
நிறையிரும் பல்பகல் நிருதர் நீள்நகர்
சிறையிருந் தேனையும் புனிதன் தீண்டுமோ? 18

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி, என்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென,
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கைநான்
உய்ஞ்சனன் இருத்தலும் உலகங் கொள்ளுமோ? 19

ஆதலான் இறத்தலே அறத்தின் ஆறெ'னச்,
'சாதல்காப் பவரும்என் தவத்திற் சாம்பினர்;
ஈதலா திடமும்வே றில்லை' என்றொரு
போதுலா மாதவிப் பொதும்பர் எய்தினள். 20

சுற்றிய கொடியொன்று துணித்துத், தூயவள்
பொற்றடங் கொம்பினில் பூட்டிப்,'பூமியில்
நற்றவ முடையவள் யானெனில் நாயகன்
வெற்றிசேர் திருவடி மேவுவேன்' என்றாள். 21

என்றருந் ததிமனத் தெம்மை யாளுடைத்
துன்றருங் கற்பினள், சுருதி நாயகன்
பொன்றரு மலர்ப்பதம் வழுத்திப், பூங்கொடி
தன்றனிக் கழுத்திடைத் தரிக்கும் எல்லையில், 22

கண்டனன் அனுமனும்; கருத்தும் எண்ணினன்;
கொண்டனன் துணுக்கம்;மெய் தீண்டக் கூசுவான்;
'அண்டர்நா யகன்அருந் தூதன் யான்'எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன். 23

என்றவன் இறைஞ்ச, நோக்கி, இரக்கமும் முனிவும் எய்தி,
'நின்றவன் நிருதன் அல்லன்; நெறிநின்று பொறிகள் ஐந்தும்
வென்றவன்; அல்லனாகில் விண்ணவ னாக வேண்டும்;
நன்றுணர் வுளையன் தூயன் நவையிலன் போலும்' என்னா,

'அரக்கனே யாக; வேறோர் அமரனே யாக; அன்றிக்
குரக்கினத் தலைவ னேதான் ஆகுக; கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி,
உருக்கினன்உணர்வைத்;தந்தான்உயிர்;இதின்உதவியுண்டோ?,

எனநினைத் தெய்த நோக்கி, 'இரங்கும் என்உள்ளம்; கள்ளம்
மனனகத் துடைய ராய வஞ்சகர் மாற்றம் அல்லன்;
நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப் புலம்பா நின்றான்;
வினவுதற் குரியன்;' என்னா 'வீரநீ யாவன்?' என்றாள். 26

ஆயசொல்தலைமேற்கொண்டஅங்கையன்'அன்னை!நின்னைத்,
தூயவன் பிரிந்த பின்பு தேடிய துணைவன், தொல்லைக்
காய்கதிர்ச் செல்வன் மைந்தன், கவிக்குலம் அவற்றுக்கெல்லாம்
நாயகன் சுக்கி ரீவன் என்றுளன் நவையில் தீர்ந்தான். 27

மற்றவன் முன்னோன், அந்நாள் இராவணன் வலிதன் வாலின்
இற்றுகக் கட்டி, எட்டுத்திசையினும் எழுந்து பாய்ந்த
வெற்றியன்; தேவர் வேண்ட வேலையை விலங்கல்மத்தில்
சுற்றிய நாகந் தேய அமுதெழக் கடைந்த தோளான்; 28

அன்னவன் தன்னை,உங்கோன்அம்பொன்றால்ஆவிவாங்கிப்,
பின்னவற் கரசு நல்கித், துணைஎனப் பிடித்தான். எங்கள்
மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன்: வானின்
நன்னெடுங் காலின் மைந்தன்! நாமமும் அநுமன்'என்றான்.

'மீட்டும்உரை வேண்டுவன இல்லை'என, "மெய்ப்பேர்
தீட்டியது, தீட்டரிய செய்கையது, செவ்வே
நீட்டுஇ(து)")என நேர்ந்தனன் எனா,நெடிய கையால்
காட்டினன்ஒ ராழி;அது வாணுதலி கண்டாள். 30

இழந்தமணி புற்றர வெதிர்ந்ததென லானாள்;
பழந்தனம் இழந்தன படைத்தவரை யொத்தாள்;
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்;
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள். 31

இருந்துபசி யாலிடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும்அமு தாகிய(து;) அறத்தவரை யண்மும்
விருந்தும்என லாகியது; வீயும்உயிர் மீளும்
மருந்துமென லாகியது; வாழி!மணி யாழி. 32

'பாழிய பணைத்தோள் வீர! துணையிலேன் பரிவுதீர்த்த
வாழியர் வள்ளலே!யான் மறுவிலா மனத்தேன் என்னின்,
ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம், உலகம்ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும், இன்றென இருத்தி' என்றாள். 33

'இத்துணைச் சிறியதோர் எண்ணில் யாக்கையை;
தத்தினை கடல்.அது தவத்தின் ஆயதோ?
சித்தியின் இயன்றதோ? செப்பு வாய்'என்றாள்,
முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினள். 34

சுட்டினன் நின்றனன்; தொழுத கையினன்
விட்டுயர் தோளினன்; விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுக டெய்தி, 'நீளுமேல்
முட்டும்'என் றுருவொடு வளைந்த மூர்த்தியான். 35

'முழுவதும் இவ்வுருக் காண, முற்றிய
குழுவில துலகினிக் குறுகு வாய்'என்றாள்,
எழுவினும் எழில்இலங் கிராமன் தோள்களைத்
தழுவின ளாம்எனத் தளிர்க்குந் தன்மையாள். 36

மாண்டேன் எனினும் பழுதன்றே!
இன்றே மாயச் சிறைநின்றும்
மீண்டேன்; என்னை யொறுத்தாரைக்
குலங்களோடும் வேர்அறுத்தேன்;
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும்;
புகழே அன்றிப் புன்பழியும்
தீண்டேன்; என்று மனமகிழ்ந்தாள்
திருவின் முகத்துத் திருவன்னாள். 37

4. சூளாமணி

'கேட்டிஅடி யேன்உரை; முனிந்தருளல்; கேளார்
வீட்டியிடு மேலவனை வேறல்வினை அன்றால்;
ஈட்டிஇனி என்பல; இராமன்எதிர் நின்னைக்
காட்டி,அடி தாழ்வன்;இது காண்டி; இது காலம். 38

வேறினி விளம்பஉள தன்று; விதி யால்இப்
பேறுபெற என்கண்அருள் தந்தருளு; பின்போய்
ஆறுதுயர்; அஞ்சொல்இள வஞ்சி! அடி யன்தோள்
ஏறுகடி(து') என்றுதொழுது இன்னடி பணிந்தான். 39

'அரிய தன்று;நின் ஆற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை; செய்வதும் செய்தியே;
உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால். 40

அன்றி யும்பிறி துள்ள(து)ஒன்(று;) ஆரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும். வேறினி
நன்றி என்!பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ? 41

அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்
சொல்லி னாற்சுடு வேன்.அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன். 42

ஆத லான்அது காரியம் அன்று;ஐய!
வேத நாயகன் பால்இனி மீண்டனை
போதல் காரியம்' என்றனள் பூவை; அக்
கோதி லானும் இனையன கூறினான். 43

'இருளும் ஞாலம் இராவண னால்;இது
தெருளும் நீஇனிச் சில்பகல் தங்குறின்;
மருளும் மன்னவற் கியான்சொலும் வாசகம்
அருளு வாய்'என் றடியின் இறைஞ்சினான். 44

'இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்;
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!
பின்னை ஆவி பிடிக்கின்றி லேன்;அந்த
மன்னன் ஆணை; இதனை மனக்கொள்நீ' 45

என்றுகூறிச் சூளாமணியை,

வாங்கி னாள்தன் மலர்க்கையின்; அன்னதுமுன்னா
ஏங்கி னாள்; அவ் வநுமனும் 'என்கொல்இ(து!)' என்னா
வீங்கி னான்; வியந் தான்; உல கேழும்வி ழுங்கித்
தூங்கு கார்இருள் முற்றும் இரிந்தது சுற்றும். 46

'சூடை யின்மணி கண்மணி ஒப்பது; தொன்னாள்
ஆடை யின்கண்இ ருந்தது; பேரடை யாளம்,
காடி வந்தென நின்னுயிர் நல்கிய நம்பா!
கோடி' என்றுகொ டுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்.

தொழுது வாங்கினன்; சுற்றிய தூசினன்; முற்றப்
பழுது றுவகை பந்தனை செய்தனன்; வந்தித்(து)
அழுது, மும்மைவ லங்கொடி றைஞ்சினன்; அன்போ(டு)
எழுது பாவையும் ஏத்தினள்; ஏகினன் இப்பால். 48

3. தாயும் தனயனும்

—பாரத வெண்பா - பெருந்தேவனார்.

வாயில் காப்போனுக்குக் குந்தியம்மை கூறல்

'அண்டத் தலர்கதிரோன் புத்திரனைப், ஆடரவத்
துண்டத் துகிற்கொடியோன் தோழனுமாய்,-எண்டிசையும்
வண்மையால் மிக்குயர்ந்த மன்னவனுக் கென்வரவு
திண்மையாய்ச் சென்றறியச் செப்பு.' 1

வாயில் காப்போன் கன்னனுக் குரைத்தல்

'கண்டத்தி விட்ட களங்கத்தாள் கால்வருந்த
மண்ட நடந்து மனம்வாடிக், - கொண்டல்நிகர்
கையானே! உன்றன் கடைத்தலைநின் றாள்'என்றான் 2
மெய்யானைக் கண்டு விரைந்து.

எதிர்சென்று கன்னன் இறைஞ்சுதல்

'வருக வரவிடுதி வந்தென்னைக் காண',
ஒருதனியிக் கோயிற் புறத்தே - திருவனைய
குந்திதனைக் காணா எதிரெழுந்து கைதொழுதான்,
முந்தியவள் காண்பதற்கு முன். 3

குறைதாழ்ந்த சிந்தையளாய்க் குந்திசென் றெய்த,
இறைஞ்சா முடியோன் இறைஞ்சச், - சிறந்த
முலைக்கண்கள் பாலரும்ப நின்றாள்: முகத்து
மலர்க்கண்கள் நீர்அரும்ப வந்து. 4

'வருந்திமிக வந்தவாறு என்?'எனல்

'செம்மையால் மண்ணாண்ட தேர்வேந்தன் மாதேவி!
வண்மை யுடைத்தருமன் மாதாவே!-அம்மே!
திருந்தியநின் பொற்பாதச் செம்மலர்கள் நோவ
வருந்திமிக வந்தவா? மற்று.' 5

சீரடிகள் நோவச் சிவந்து மிகத்துவண்டு,
போரடரும் சோலைப் புனல்நாடர் மாதாவே!
என்னடைந்த வாறின் றெனக்குரைமின்' என்றுரைத்தான்:
மின்னடைந்த வேலான் வியந்து. 6

'ஆராத அன்பின் அடிகள்! அடியேன்பால்
வாராதீர் வந்தவா றென்கொலோ? - சீராரும்
பாண்டவர்கள் ஏவலோ? பாரளந்தான் ஏவலோ?
ஆண்டிருந்து போந்த(து) அருகு' 7

தலைநாள் அவனைத் தானீன்ற வரலாறு கூறல்

ஒற்றைத் திகிரி ஒளியோற்குத் தான்பயந்த
கொற்றக் குலக்குமரன் ஆமாறும், - மற்றவள்தான்
மாறுரைத்த வண்ணமும், மைந்தற் கெடுத்துரைத்தாள்:
பாறுரைத்த சொல்லாள் பரிந்து. 8

கன்னன் தெளிதல்

'அன்னையென வந்தென்னை ஐவர்க்கும் முன்தோன்றல்
என்றும்இது மெய்யாக எண்ணுவரோ? - மின்னும்
துடியிடையாய்! வேண்டுவது சொல்லிக்கேள்' என்றான்:
படிபுகழும் அங்கர்கோன் பார்த்து. 9

'என்னுடைய தாய்மார் எனச்சொல்லி வந்தவர்கள்
தம்அன்பு தாங்கினார் தாமில்லை; - என்னுடைய
தாய்எய் படாம் போர்க்கின் மற்றென்னைப் பெற்றெடுத்த
தாயேநீ' என்றுரைத்தான் தான். 10

இக்கிடந்த மாதரைப்போல் நீரும் இதுபோர்த்துத்
தொக்க உடம்பிழுந்து சோராதே - மிக்கதுதான்
வேண்டிக்கொண் டும்முடைய வீடே நடவும்'என்றான்:
தூண்டிடுதேர் வல்லான் தொடர்ந்து. 11

'பெற்றஉடம் பன்றாயின் என்உடலைத் தின்னுக' என்(று)
உற்ற படாத்துக் குறவுரைத்து, - மற்றதனைச்
சென்றெடுத்துப்போர்த்திருந்தாள், தேர்வேந்தன் தன்முன்னே
நன்றெடுத்த சொல்லாள் நயந்து. 12

தன்னுடைய முன்னே படாம்போர்ப்பத், தார்வேந்தன்
'என்னுடைய மாதா இவள்'என்னா - நன்னுதலாள்
பொன்அடிமேல் விழ்ந்தானைப் பொற்றடக்கை யால்தழுவித்
தன்மடிமேல் வைத்தாள் தளர்ந்து. 13

குந்தியம்மை வேண்டுகோள்

'உனக்கினிய தம்பிமார் ஐவரையும் ஒன்றி
வனக்கிருழ் மண்ணாளை வேண்டி - உனக்கிதனைச்
சொல்லுவான் வந்தேன்; சுடர்வேலோய்! போதெ'ன்றாள்
வில்லுலாம் வாள்நுதலாள் மீட்டு. 14

'மண்ணெலாங் காத்தளித்த மன்னரெலாம் வந்திறைஞ்சக்,
கண்ணெலாங் காதல் களிகூரப், - பண்ணுலாம்
பொற்றேரில் போந்தேறிப், போர்வேந்தர் ஐவரையும்
குற்றவேல் கொள்ளாய் குறித்து.' 15

கன்னன் இயலா தென்னல்

‘ஆவி அனையார்கள் ஐவர்க்கு முன்தோன்றல்
மேவி யனைய வினையேனைப், - பாவியேன்
முன்செய்த தீவினையால் முன்னுரையா தின்றுரைத்தீர்;
என்செய்வேன் சொல்வீர் இனி? 16

இன்னான் எனஅறியா என்னை முடிகவித்து,
மன்னர் வணங்க அரசியற்றிப், - பின்னையும்
தன்எச்சில் உண்ணுத் தகைமையான், தான்உண்டான்
என்எச்சில் என்னோ டினிது. 17

மதமா மழகளிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவி உலகறியும் அன்றே! - உதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தில் நல்லோர்கள்
குன்றுவரோ செய்ந்நன்றி கூறு? 18

மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிப்ப,
அற்று விழுந்த அருமணிதாம். - மற்றவற்றைக்
‘கோக்கேனோ?’ என்றுரைத்தகொற்றவற்(கு,)என் ஆருயிரைப்
போக்கேனோ? வெஞ்சமத்துப் புக்கு. 19

நுந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீர்
இன்(று;)என்மேல் ஆசை இலைஉமக்(கு;) - அன்று
வடுவஞ்சிப் போகவிட்டீர்; மாண்டேனேல், இன்று
நடவென்பீர் யாரை நயந்து?’ 20

குந்தியம்மை ‘தம்பியரைக் கொல்கை தவிர்’எனல்

‘உம்பர்இகல் ஏறுபோல், உற்றெதிர்ந்த அஞ்ஞான்று
தம்பியரைக் கொல்கை தவிர்’என்றாள்: - நம்பி
இயலாரும் வேல்அங்க நீள்நாடன் தன்னைக்
குயிலாரும் மென்மொழியாள் கூர்ந்து. 21

கன்னன் தன் சபதம் சாற்றல்

‘பார்த்தனையான் கோறல் அவன்கைப் படுதல்எனும்
வார்த்தைஉரை செய்தேன் மனமகிழ்ந்து; - வேர்க்கப்
பொருவெஞ் சமர்க்களத்தப் போதெதிர்ந்தால் மற்றாங்(கு)
ஒருவரும் தா மில்லை எதிர்’ 22

குந்தியம்மைக்குக் கன்னன் வரங்கொடுத்தல்

‘வெஞ்சரங்கோத் தெய்து விறலழிக்கும் நன்மகனே!
பஞ்சவருள் பார்த்த னுடன்மலைந்தால், - அஞ்சுதலை
நாகம் இருகால் தொடாதொழிக’ என்றுரைத்தாள்,
ஆகம் உறத்தழீஇ ஆங்கு. 23

'நாகம் இருகால் தொடாதொழிய வேண்டுமென்
றாக உரைத்தீர்; அதுகொண்மின்; - வேகத்
தொருகால் தொடுப்பேன்; உதுபிழைத்தால், பின்னை
இருகால் தொடாதொழிவேன் யான். 24

பொன்னே! எனைப்பயந்த பொற்கொடியே! இன்றுனக்கு
மின்னேர் இடையாய்! மறுப்பனோ? - அன்னாய்!முன்
பெற்றதாய் வேண்ட மறுத்தான் எனும்வார்த்தை
உற்றழியா நிற்கும் உலகு. 25

கன்னன் வேண்டுகை

போர்க்களத்தில் யான்பொருது பொன்றினால், எம்பியரால்
தீக்கடனும் நீர்க்கடனும் செய்விப்பீர்;-சேர்க்கும்
மருமலருந் தாரார் மணிமுடியார் காண,
உரிமையுடன் செய்க உவந்து. 26

உம்முடைய மைந்தர்க்கிவ் வுண்மை தனையுரைக்கின்
அன்னவர்கள் பாகம் எனக்களிப்பர்; - பின்அதனை
ஈங்கெனது தோழற்கே யான்கொடுப்பேன்; ஆதலால்
ஆங்கவர்கட் கில்லை அரசு. 27

பாரதத்துப் பட்டேன்; படேனாயின் பாண்டவர்பால்
ஆர்வமொடு நான்வருவேன்; ஆரணங்கே! - சீர்மிகுத்துன்
பொற்கமலப் பாதம் புரிகின்றேன்; போகெ’ன்றான்
நற்றவத்தின் மிக்கோன் நயந்து. 28

'முன்செய்த பாவத்தால், மூத்தாய்! உனைப்பிரிந்தேன்;
என்செய்தால் இப்பிழைதான் தீரும்?' எனப்-பொன்செய்த
மட்டவிழும் தாரானை மார்புறவே தான்அணைத்து
விட்டவளும் மீண்டாள் விரைந்து. 29

'யாவர்க்காம் பாவம் இது?'

மல்லுயர் தோள்பார்த்தன் மாயன் உடன்நிற்கக்,
கொல்லும் இவனை எனக்குலையா, - நல்லமலர்க்
காராரும் பூங்குழலாள் காதலொடு கண்இணைகள்
நீராரப் போனாள் நினைந்து. 30

பாராளும் பாண்டவர்க்காப் பாவியேன் என்மகனைக்
கோள்நாகம் வேண்டிக் கொலைநேர்ந்தேன்-ஆனாலும்
தேவர்க்காங் கொல்லோ? திரிவில்ள தாங்கொல்லோ?
யவர்க்காம் பாவம் இது?

4. கோவலன் கொலைக்குப் பிறகு

—சிலப்பதிகாரம் – இளங்கோ.

1. ஆய்ச்சியர் குரவை.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

2. துன்பமாலை

குரவை முடிவிலோர் ஊர்அரவங் கேட்டு
விரைவொடு வந்தாள் உளள்.
அவள்தான்,
சொல்லாடாள் சொல்லாடா நின்றாள்அந் நங்கைக்குச்
சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்.

'தஞ்சமோ தோழீ! தலைவன் வரக்காணேன்;
வஞ்சமோ உண்டு; மயங்கும்என் நெஞ்சன்றே!
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின்,
எஞ்சிலார் சொன்ன தெவன்?வாழி யோதோழீ!'

சொன்னது:
'அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனா மென்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே.

எனக்கேட்டு,
பொங்கி யெழுந்தாள்; விழுந்தாள்; பொழிகதிர்த்
திங்கள் முகிலொடுஞ் சேணிலங் கொண்டெனச்,
செங்கண் சிவப்ப அழுதாள்;தன் கேள்வனை
'எங்கணாஅ!' என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்.

'தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்,
செம்மையின் இகந்தகோல்தென்னவன்தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி யழிவலோ?

காணிகா,
வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டீமின்!
ஆய மடமகளிர்எல்லீரும் கேட்டைக்க!
பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி;
காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என்கணவன்?'
'கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூர்'என்ற தொருகுரல்.

3. ஊர் சூழ்வரி.

என்றனன் வெய்யோன்; இலங்கீர் வளைத்தோளி
நின்றிலள்; நின்ற சிலம்பொன்று கையேந்தி,
'கள்வனோ அல்லன் கணவன்;என் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே! யீதொன்றெ'ன்று,
அல்லலுற் றாற்று(து)அழுவாளைக் கண்டேங்கி
மல்லல்மதுரையார் எல்லாருந், தாமயங்கிக்
'களையாத துன்பம்இக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்?'
என்பன சொல்லி யினைந்தேங்கி யாற்றவும்
வன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக்
கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டப்,

'பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறாஉம்
பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!

சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்!
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறாஉம்
சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்!

தெய்வமும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல்!
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்,
தெய்வமும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல்!

என்றிவை சொல்லி யழுவாள், கணவன்றன்
பொன்துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள,
நின்றான் எழுந்து; நிறைமதி வாள்முகங்
கன்றிய தென்(று,)அவள் கண்ணீர்கை யால்மாற்ற,
அழுதேங்கி நிலத்தின்வீழ்ந்து, ஆயிழையாள், தன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
பழிதொழித் தெழுந்திருந்தான், பல்லமரர் குழாத்துளான்,,
'எழுதெழில் மலருண்கண்! இருந்தைக்க!'எனப் போனான்.

‘காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்;
தீவேந்தன் தனைக்கண்டித்திறங்கேட்பல் யான்’என்றாள்.
என்றாள், எழுந்தாள்; இடருற்ற தீக்கனா
நின்றாள், நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்சோர;
நின்றாள், நினைந்தாள், நெடுங்கயற்க ணீர்துடையாச்
சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயின்முன்.

4. வழக்குரை.

‘வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்(று)
அறிவிப் பாயே! அறிவிப் பாயே!’ என,
வாயில் வந்து கோயில் காட்டக்,
கோயின் மன்னனைக் குறுகினள், சென்றுழி,
‘நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்!
யாரை யோநீ? மடக்கொடி யோய்!’ எனத்
‘தேரா மன்னா! செப்புவ துடையேன்
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்ப தென்பெயரே’ எனப், ‘பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று,
வெள்வேற் கொற்றங் காண்’என, ஒள்ளிழை
‘நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே’என
‘யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருக’எனத் தந்து தான்முன் வைப்பக்,
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே; மணிகண்டு,
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
‘பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்’என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே; தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்,
‘கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்’என்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

5. முரசொலி

—மணிமேகலை சீத்தலைச் சாத்தனார்.

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி,
முரசு கடிப்பி கூஉம் முதுக்குடிப் பிறந்தோன்
'திருவிழை மூதூர் வாழ்கெ'ன் றேத்தி,
'வானம் மும்மாரி பொழிக; மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக.
தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்;

பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்;
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
கதலிகைக் கொடியும் காழூன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்;
நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்;

தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்;
பற்று மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்;
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரும் மக்களும் ஒத்துடன் திரிதரும்
நாலேழ் நாளினும் நன்கறிந் தீர்!' என;

ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முர சியம்பிப்
'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கெ'ன வாழ்த்தி,
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்.

5. தனிப்பாடல் II

1. வாணனது வாசலில்

—கம்பர்.

‘தேரு மூப்புரவி வார ணத்தொகுதி
திறைகொ ணர்ந்துவரு மன்ன!நின்
தேச மேதுனது நாமமே துபுகல்?’
‘செங்கையாழ் தடவு பாணரே!

வாரும்; ஒத்தகுடி நீரும் நானும்;மக
தேசன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்;

நீரும் இப்பரிசு பெற்று மீளவ ர
லாகும்; ஏகும்அவன் முன்றில் வாய்.
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்

ஆரு நிற்கும்; ஒரு வேம்பு நிற்கும்; உயர்
பனையும் நிற்கும், அதன் அருகிலே
அரசு நிற்கும்; அர சைச்சு மந்தசில
அத்தி நிற்கும்;அடை யாளமே.

2. சடையவள்ளல்

—பாராகசிங்கன்.

இரவுநண்பகல் ஆகிலென்? பகல்
இருளறுஇர வாகிலென்?
இரவிஎண்திசை மாறிலென்? கடல்
ஏழும் ஏறிலென்? வற்றிலென்?

மரபுதங்கிய முறைமை பேணிய
மன்னர் போகிலென்? ஆகிலென்?
வளமையின்புறு சோழமண்டல
வாழ்க்கை காரண மாகவே

கருதுசெம்பொனின் அம்பலத்திலொர்
கடவுள் நின்று நடிக்குமே!
காவிரித்திரு நதியிலே ஒரு
கருணை மாமுகில் துயிலுமே!

தருவுயர்ந்திடு புதுவையம்பதி
தங்குமானிய சேகரன்
சங்கரன்தரு சடையன்என்றொரு
தரும தேவை வாழவே.

3. புலவன் பாதி புரவலன் பாதி

—கூத்தரும் குலோத்துங்கனும்.

‘ஆடும் கடைமணி நாவசை யாமல், அகிலமெல்லாம்
நீடும் குடையில் தரித்த பிரான்’என்று, நித்தநவம்
பாடும் புலவர் பணிகொண்ட கூத்தன் பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன்என்றேஎனைச்சொல்லுவரே.

4. புகல் இலையே!

—நந்திக் கலம்பகம்.

வானுறு மதியம் அடைந்ததுன் வதனம்;
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி;
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்;
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்;
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்;
செந்தழல் அடைந்ததுன் தேகம்;
நானும்என் கவியும் எவ்விடம் புகுவேம்?
நந்தியே! எந்தைநா யகனே!

5. ‘பழிதீர்த்த தீக்குழி’

—பழம் பாடல்.

எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்,
தொல்லை மனுக்காகத் தோன்றிற்றே; - கொல்லை
வழியிலொரு பேய்நின்று, வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்திக் கொழுந்து.

பிழைத்தாரோ காராளர்? பேய்மகள்சொற் கேட்டுப்
பிழைத்தார்கள் அல்லர் பிழைதீர்ந்தார்; - பிழைத்தார்கள்
எல்லாருங் காண எரியகத்தே மூழ்கினர்
எல்லாரும் இன்றும் உளர்.

6. ‘ஓஒ கிடப்பதே!’

—பத்தினி தேவி கண்ணகி.

கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியின் ஓஒ கிடப்பதே! - கெண்டிக்
கெழுதகை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை.

6. பக்திப்பனுவல்

1. 'அலரு நில்லே'

—திருநாவுக்கரசர்.

நிலேபெறுமா(று) எண்ணுதியேல், நெஞ்சே! நீவா;
நித்தலும்எம் பிரான்உடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலே புனேந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலேயினல் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
'சங்கரா! சயபோற்றி போற்றி' என்றும்,
'அலேபுனல்சேர் செஞ்சடை எம் ஆதி!' என்றும்
'ஆரூரா!' என்றென்றே அலரு நில்லே.

2. 'அலமந்தபோது'

—திருஞானசம்பந்தர்.

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேல் உந்தி
அலமந்த போதாக 'அஞ்சேல்' என்(று)
அருள்செய்வான் அமருங் கோயில்,
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழைஎன் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே.

3. 'என்னே! என்னே!'

—மாணிக்கவாசகர்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி மெய்ம்மறந்து,
போதார் அமளியின்மேல் நின்றும்புரண்(டு)இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே!என்னே!
ஈதே எந்தோழி! பரிசேலோர் எம்பாவாய்!.

4. 'தருதுயரந் தடாயேல்'

—குலசேகரப் பெருமாள்.

செந்தழலே வந்தழலைச் செய்திடினும், செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்;
வெந்துயர்விட் டாவிடினும், விற்றுவக்கோட் டம்மா!உன்
அந்தமில்சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே.

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்,
மெய்த்துயர்விட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா!என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே.

5. 'வம்மின் புலவீர் !'

—நம்மாழ்வார்.

கொள்ளும் பயனில்லை; குப்பை கிளர்ந்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்துநும் வாய்மை யிழக்கும் புலவீர்காள்!
கொள்ளக்குறைவிலன்;வேண்டிற்றெல் லாந்தருங்கோதில்என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக் கவிசொல்ல வம்மினோ.

வம்மின் புலவீர்!நும் மெய்வருத் திக்கைசெய் துய்மினோ;
இம்மன் னுலகினிற் செல்வர்இப் போதில்லை; நோக்கினோம்.
நும்மின் கவிகொண்டு நும்நும்இட் டாதெய்வம் ஏத்தினால்,
செம்மின் சுடர்முடி என்திரு மாலுக்குச் சேருமே.

6. 'ஆரறிவார்?'

—திருமூலர்.

ஆரறி வார் எங்கள் அண்ணல் பெருமையை?
யார்அறி வார்இந்த அகலமும் நிகளமும்?
பேர்அறி யாத பெருஞ்சுடர் ஒன்(று;) அதின்
வேர்அறி யாமை விளம்புகின் றேனே.

7. 'நினைந்துய்மின்'

—திருமூலர்.

ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்;
நன்றே நினைமின். நமனில்லை; நாணுமே
சென்றே புகுங்கதி இல்லை;நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

7. கதம்பம்

2. காலைக்கதிர்

—கம்பராமாயணம்.

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
 இசைபாட, உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
 கரங்குவிப்ப, வேலை என்னும்
மண்ணுமணி முழுவதிர, வானரங்கில்
 நடம்புரிவான் இரவி யான
கண்ணுதல் வா னவன் கனகச் சடைவிரிந்தால்
 எனவிரிந்த கதிர்கள் எல்லாம்.

3. அந்தி மாலை

—சூளாமணி.

விண்ணியல் உருவ வீதி மேனின்றும் இழிந்து, வெய்யோன்
கண்ணியல் விலங்கல் நெற்றி கதிர்என்னுங் கையின்ஊன்றி,
மண்ணியல் மரத்தின் சாகை நுதிபிடித் தவையும் விட்டுப்,
பண்ணியல் பிறிதொன் ருகிப், பையவேமறைந்து போனான்.

வெய்யவன் என்னுஞ் செந்தீச் சுடரினால் வெதும்பப் பட்டு
மையொளி பரந்த போன்று கருகின திசைகள்; மற்று
மொய்யழல் மேலவிந்த தழல் மீள மூள்வ தேபோல்,
செய்யதோர் உருவ மேல்பால் திசைமுகஞ் சிவந்த தன்றே.

4. ஆற்றுவரி

—சிலப்பதிகாரம்.

உழவர்ஓதை மதகோதை உடைநீர் ஓதை தண்பதங் கொள்
விழவர்ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி!
விழவர்ஓதை சிறந்தார்ப்ப நடந்த தெல்லாம், வாய்காவா
மழவர் ஓதை வளவன்தன் வளனே வாழி காவேரி!

பூவார் சோலை மயில்ஆடப், புரிந்து குயில்கள் இசைபாடக்,
காமர் மாலை அருகசைய, நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகசைய நடந்தவெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறம்கண்டே அறிந்தேன் வாழி காவேரி!

5. யானைமறம்

—முத்தொள்ளாயிரம்.

விரிசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால், - தேறுது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை.
மருப்பூசி யாக, மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத், - திருத்தக்க
வையகம் எல்லாம் எமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு.
கொடிமதில் பாய்ந்திற்ற கோடும், அரசர்
முடிஇடறித் தேய்ந்த நகமும், - பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோள் கிள்ளி களிறு.

6. பண்டொரு கடைத்தெரு

—பட்டினப் பாலை.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு.

7. வீரத்தாய்

—புறநானூறு.

கெடுக சிந்தை; கடிதிவள் துணிவே;
மூதின் மகளிர் ஆதல் தகுமே.
மேனுள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே.
நெருநல் உற்ற செருவிற்கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே.
இன்றும்,
செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிது விரித் துடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.

புறத்திரட்டு : பொருட்பால்

1. கல்வி

சொற்ருெறும் சோர்வு படுதலால், சோர்வின்றிக்
கற்ருெறும் 'கல்லாதேன்' என்று வழியிரங்கி
உற்ருென்று சிந்தித் (து)உழந்தொன்று அறியுமேல்
கற்ருெறும்தான் கல்லாத வாறு.

பழமொழி 332

2. கேள்வி

புண்ணுகப் போழ்ந்து புலால்குளிப்பத் தாழ்வளர்த்து
வண்ணப்பொன் செய்வ செவிஅல்ல; நுண்ணூல்
அறவுரை கேட்டுணர்ந்(து) அஞ்ஞானம் நீக்கித்
துறவுரை கேட்ப செவி.

அறநெறிச்சாரம் 194

3. அறிவுடைமை

இளையர் முதியர் எனஇருபால் பற்றி
விளையும் அறிவென்ன வேண்டா; - இளையனுய்த்
தன்தாதை காமம் நுகர்தற்குத் தான் காமம்
ஒன்ருது நீத்தான் உளன்.

பெரும்பொருள்

4. குற்றங்கடிதல்

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும், - முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும், இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

திரிகடுகம் 38

5. பெரியார்துணை

கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஒல்காவே யாகும் உழவர் உழுபடைக்கு;
மெல்லியரே ஆயினும் நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்ருர் சினம்.

நாலடியார் 178

6. சிற்றினம் சேராமை

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை; - பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையை; குலஞ்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.

நான்மணிக்கடிகை 21

7. காலமறிதல்

அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே!
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவானுய்
அம்புவிட் டாக்கறக்கு மாறு.

பழமொழி 77

8. தெரிந்து தெளிதல்

ஒருவன் அறிவானும் எல்லாம்,யா தொன்றும்
ஒருவன் அறியா தவனும், - ஒருவன்
குணனடங்கக் குற்றம் இலானும், ஒருவன்
கணனடங்கக் கற்றுனும் இல்.

நான்மணி- 102

9. சுற்றந்தழால்

அழல்மண்டு போழ்தின், அடைந்தவர்கட் கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப், - பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

நாலடி- 202

10. பொச்சாவாமை

அலைபுனலுள் நிற்பினும் தாமரை ஈன்ற
இலையின்கண் நீர்நிவளா ஆகும்; - நிலையில்
புலங்களுள் நிற்பினும் பொச்சா வானுயின்
மலங்கடி வாளன் அவன்.

அறநெறி- 214

11. கண்ணோட்டம்

ஒன்று நரம்பென்கோ? ஒன்றுத என்பென்கோ?
இன்தசைதான்என்கோ?யாதென்கோ?-மென்தொடையாள்
பண்ணோட்டும்இன்சொல்பணைத்தோளாய்! சேர்ந்தவர்பால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

பாரதம்

12. ஊக்கமுடைமை

எமக்குத் துணையாவார் யாவரென் றெண்ணித்,
தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா.
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ? (மற்று) இல்லைத்
தமக்கு மருத்துவர் தாம்.

பழமொழி. 65

13. தாளாண்மை

நல்ல குலமென்றும், தீய குலமென்றும்,
சொல்லள வல்லால் பொருள் இல்லைத்; தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம் கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்.

நாலடி- 195

14. இடுக்கண் அழியாமை

இடுக்கண்வந் துற்ற காலை எரிகின்ற விளக்குப் போல
நடுக்கம்ஒன் றானு மின்றி நகுக;தான் நக்க போழ்தவ்
விடுக்கணை அரியும் எஃகாம்; இருந்தழுது யாவர் உய்ந்தார்?
வடுப்படுத் தென்னை ஆண்மை? வருபவந் துறுங்கள்அன்றே.

சிந்தாமணி 509

15. சொல்வன்மை

விரைந்துரையார் மேன்மேல் உரையார்பொய் ஆய
பரந்துரையார் பாரித் துரையார் - ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னானே பொருள்அடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து.

ஆசாரக்கோவை. 76·

16. குறிப்பறிதல்

புகைவித்தாப் பொங்கழல் தோன்றும்; சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை; பகை, ஒருவன்
முன்னம்வித் தாக முளைக்கும்; முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

நான்மணி- 31.

17. அவையறிதல்

தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத் (து)
உம்பர் உறைவார் பதி.

நாலடி- 127.

18. நட்பு

பறைநன்று பண்அமையா யாழின்; நிறை நின்ற
பெண் நன்று பீடிலா மாந்தரின்; பண் அழிந்(து)
ஆர்தலின் நன்று பசித்தல்; பசைந்தாரின்
தீர்தலின் தீப்புகுதல் நன்று

நான்மணி- 13.

19. நட்பிற் பிழை பொறுத்தல்

மலைப்பினும் வாரணம் தாங்கும்; குழவி
அலைப்பினும் அன்னேஎன் றோடும்; சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யார்; ஒட்டார்
உடனுறையும் காலமும் இல்.

நான்மணி- 23

20. பேதைமை

இருளாய்க் கழியும் உலோபியும், யாதும்
தெருளா துரைக்கும் வெகுளியும், - பொருள்அல்ல
காதற் படுக்கும் விழைவும், இவைமூன்றும்
பேதைமை வாழும் உயிர்க்கு.

திரிகடுகம் 931

21. பெருமை

பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறக்கலும் ஆமோ? - நிரந்தெழுந்த
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய்! விண்ணியங்கு
ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்.

பழமொழி 34

22. சான்றாண்மை

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழியர் நிலனே.

புறநானூறு 187

23. பண்புடைமை

உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
அஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

புற- 182

வசனமலர்

இளவரசர் துறவு*

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்.

சேர அரசர்களுள் ஒருவனாகிய இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன்என்பவன் வெற்றி மிடுக்கோடு வஞ்சி மாநகரத்தில் தனது சிங்காசனத்தில் வீற்றிருந்தான். கடம்ப அரசர்களை வென்று ஜயங்கொண்டதும், தமிழ்நாடு முழுவதையும் அடிப் படுத்தி வடநாட்டுக்கும் சென்று இமயமலைவரையில்தன்வீரத்தை நிலைநாட்டி, அப்பெருமலை மிசையே தனது விற்கொடியைஏற்றிக் குமரிமுதல் இமயம் வரையில் தன் பெயர் வழங்கச் செய்ததும் ஆகிய பெருஞ் செயல்களை வந்தியர் வாழ்த்திக்கொண்டிருந்தனர். அச்சக்கரவர்த்தி எல்லாவகையிலும் மகிழ்ச்சி நிரம்பி நவமணி பதித்த திருமுடி இலங்கப் பெருமிதத்தோடு இருந்தான்.

தமிழ்ப் புலவர்களும் வடமொழி வித்துவான்களும் எப்பொழுதும் ஆராய்ச்சி மிக்க வாதசபைகளை நடத்துவதற்கு இடமாக இருந்தது வஞ்சிமாநகரம். அரிய கலாவிற்பன்னர்கள் கூடித் தம்முடைய ஆற்றலைக்காட்டி அரசனிடம் பரிசு பெற்றுச் சென்றனர். தன்னுடைய ஆட்சிக்காலத்தில் பெரும்போர்களைச் செய்து வெற்றி மகளை மணந்துகொண்ட அரசன் அப்பொழுது தன் வாழ்வை அமைதியாகக் கழிக்க எண்ணினான். தனக்குப் பின் பட்டத்துக்கு ஏற்றவனாகவும் இளமையிலேயே அருள்வலி ஆண்மை கல்வியென்னும் குணச்சிறப்புடையவனாகவும் விளங்கிய தன் மூத்த மகன் செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் ஈந்து அரசியலிற் பெரும் பகுதியை அவனே கவனிக்கும்படி அமைத்தான். செங்குட்டுவனுக்கு இளையவனாகிய அரசகுமாரன் ஒருவன் இருந்தான். அவன் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவனாகவும் பக்ஷபாதமற்ற நடையுடையவனாகவும் திகழ்ந்தான். அவனையும் அரசியலில் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய அரசன் பெருநம்பி யென்னும் பதவியை அவனுக்கு அளித்தான்.

---

* கலைமகள் '41-ல் பொங்கல் மலரில் வெளியானது.

செங்குட்டுவன் இளவரசனாக இருந்து சேரநாட்டு அரசியலை நெறிவழுவாமல் நடத்தும் திறமையைப் பெறலானான். அவனுக்கு இளைய அரசிளங்குமரனே பெருநம்பிப் பட்டம் பெற்று மந்திரிகளுக்கெல்லாம் தலைவனாகி அரசியலில் தலைமை பெற்ற காரியங்களையெல்லாம் நிர்வகித்து வந்தான்.

இவ்வாறு தன் மக்கள் இருவரும் அரசியல் தேரை இனிது நடத்தி வந்ததைத் தன் கண்ணாற் கண்ட பேரரசனாகிய நெடுஞ் சேரலாதன், 'நம் காலத்திற்குப்பின்னும் இவ்விருவரும் நல்லுறவு பூண்டு இவ்வாறே விளங்குவர்; சேரநாட்டுக்கு இரண்டு கண்மணிகளைப்போல இவர்கள் இருப்பார்கள்' என்று எண்ணி உள்ளம் பூரித்தான்.

ஒருநாள் பொன்னும் மணியும் இழைத்த திருவோலக்க மண்டபத்தில் சிங்கம் சுமந்த பொங்கணைமீமிசை, இருபக்கமும் மகளிர் கவரி வீச அரசன் வீற்றிருந்தபோது அவ்வரச சபைக்கு ஒரு சோதிடன் வந்தான். அவன் சேர அரசனது அவைக் களத்துச் சோதிடனல்லன்; அரசன் கலைவல்லுநர்களைப் பாராட்டிப் பரிசளிப்பவனென்பதைக் கேள்வியுற்று அவனைப் பார்த்துச் செல்ல வந்தவன். அவன் வந்து அரசனைப் பணிந்து அங்கே இருக்கையில் அரசன் அவனதுவரலாற்றைவிசாரித்தான். அவன் ஒரு சோதிடனென்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தான்.

'உமக்கு அந்தக் கலையில் எத்தகைய வன்மை உண்டு?' என்று சேர அரசன் கேட்டான்.

'ஜாதகசக்கரம் இல்லாமலே ஒருவருடைய அங்க அமைப்பைக்கொண்டே அவருடைய எதிர்கால நிகழ்ச்சிகளைச் சொல்லுவேன்' என்றான் அவன்.

'அப்படியாயின் நாம் இவ்வரசாட்சியை இன்னும் எவ்வளவு காலம் தாங்க வேண்டியிருக்கும்?' என்று அரசன் கேட்டான்.

சோதிடன் பெரிய தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டான். அரசன் தன் ஆயுட்காலம் எப்போது முடிவடையுமென்பதையே வேறு வகையாகக் கேட்டான். அதை எப்படிச் சொல்வது? அரசன் ஆயுட்காலம் முடிவதற்குமுன் சோதிடனது ஆயுட்காலம் முடிந்தாலும் முடியலாம். சேர அரசன் அத்தகையவனல்ல னென்பதைச் சோதிடன் அறிவான், ஆனாலும் எப்படித் துணிந்து சொல்வது?

அவனது மனக்கலக்கத்தை அரசன் உணர்ந்தான்; 'தைரியமாகச் சொல்லும். சாஸ்திர விஷயங்களில் பக்ஷபாதமே கூடாது. பொய்யும் சொல்லக்கூடாது. நம்முடைய நாட்டிலே சாஸ்திரத்துக்கு யாவரும் தலைவணங்குவர். நாம் சக்கரவர்த்தி என்ற நினைவை மறந்து உண்மையைச் சொல்லும்' என்று அரசன் வற்புறுத்தினன்.

சோதிடனுக்குத் துணிவு பிறந்தது. 'அறிவாளியாகிய இவ்வரசனிடத்தில் உண்மையைச் சொல்வதால் ஒரு கேடும் வராது; அப்படி ஏதாவது அபாயம் உண்டானல் இவனுக்கே அழியாப் பழி நேர்ந்துவிடும்' என்று எண்ணியவனகி எழுந்து அரசனை அடிமுதல் முடிவரையில் நோக்கினன். பிறகு சொல்லத் தொடங்கினன்.

'மன்னர் பிரானுடைய அங்க அடையாளங்கள் இறைவன் திருவருளைப் பெறுவதில் நெடுங்காலம் காத்திருக்க வேண்டாம் என்பதைத் தெரிவிக்கின்றன' என்ருன் அவன். அரசனுக்கு விஷயம் இன்னதென்று விளங்கிவிட்டது. சோதிடன்பால் அவனுக்கு எள்ளளவும் கோபம் உண்டாகவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு, 'சரி, இதோ இருக்கிருர்களே; இவர்களைப் பார்த்து ஏதேனும் சொல்ல முடிந்தால் சொல்லும்' என்று இரண்டு அரச குமாரர்களையும் சுட்டிக் காட்டியபடியே அரசன் கேட்டான்.

சோதிடனுக்கு உண்மையைக் கூறுவதனால் இந்த ராஜ சபையில் தீங்கு ஒன்றும் நேராது என்ற தைரியம் பலமாக உண்டானதால் உடனே அவ்விருவரையும் உற்று நோக்கினான்; பெருநம்பியாக விளங்கிய இளைய குமாரனைக் கூர்ந்து பார்த்தான்.

'அரசர்க்கரசே, இவ்விளங்குமரன் அந்தமில்லாத இன்பத்தையுடைய அரசை ஆளும் உரிமை பெறுவானென்று இவனது முகக்குறிகள் காட்டுகின்றன.'

இவ்வாறு சோதிடன் சொன்னபோது அங்கிருந்த யாவருடைய முகத்திலும் திடீரென்று மேகம் படர்ந்தாற் போன்ற வேறுபாடு ஒன்று உண்டாயிற்று. அரசன் நிலை கலங்கிப்போனான். இளவரசப் பட்டத்தில் இருந்த செங்குட்டு வனுக்குக் கண்கள் சிவந்தன. அவை அரசனைப் பார்த்தபடியே நின்றன; 'என்ன இது!' என்று கேட்பதுபோல் இருந்தது அவன் பார்த்த பார்வை.

'இந்த விஷயம் உண்மையாகுமா? அரசனுடைய மூத்த குமாரன் அல்லவா அரசாட்சிக்கு உரியவன்? இளைய குமாரனுக்கு எப்படி அவ்வரசுரிமை கிடைக்கும்? ஒருகால் செங்குட்டுவனுக்கு ஆயுட்பலம் போதாதோ!' என்றெல்லாம் சபையிலிருந்த சான்றோர் எண்ணலாயினர்.

இந்தச் சோதிடத்தைச் சொன்ன நிமித்திகன் கருங்கற் சிலைபோல அங்கே இருந்தான். சிறிது நேரம் அலையோய்ந்த கடலைப்போல அந்தச் சபை ஒலியடங்கி இருந்தது.

பெருநம்பியாக இருந்த அரசிளங்குமரன் ஒரு முறை சுற்றிலும் பார்த்தான்; எல்லோருடைய முகங்களும் ஒளி யிழந்திருந்தன. தன் தமையன் கண்கள் தீப்பொறி கக்குவதைக் கண்டான். சிங்கவேறு போலத் திடீரென்று எழுந்தான். சோதிடன்மீது அவன் பார்வை சென்றது.

'சோதிடரே, நீர் உம்முடைய கலையில் வல்லவராக இருந்தாலும், கால தேச வர்த்தமானங்களைத் தெரிந்து

உண்மையை ஆராய வேண்டும். மூத்தமகன் இருக்க இளையவன் பட்டம் பெறுவதென்பது இந்த நாட்டிலே நிகழாத காரியம். நீர் முறைமறந்து சொல்லிவிட்டீர். உம்முடைய சோதிடம் பொய்யாகிவிடுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தர்மத்துக்கு மிஞ்சிய சாஸ்திரம் எது? முந்தையோர் நெறியினின்றும் வழுவுவ தென்பது இந்த மண்ணில் இல்லை. உம்முடைய சோதிடம் பொய்த்துப் போவதை இனிப் பல வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. என் தந்தையார் மனக் கலக்கத்தை நான் உணர்கிறேன். அவர் முதிய பருவத்தில் சோதிடத்தால் அஞ்சி இனி என்னுகுமோ என்று ஏங்க வேண்டாம். என்னுடைய தமையனும் எம் தந்தையாருக்குப் பின் அரசராவதற்குத் தனியுரிமை உள்ளவருமாகிய செங்குட்டுவர் தம்சினத்தை ஒழிவாராக. இங்குள்ள சான்றோர் தர்மம் வழுவி விடுமோ என்று இப்போது அஞ்சுகிறார்களென்று தெரிகிறது. அந்த அச்சமும் அவர்களுக்கு வேண்டாம். இதோ இந்த நிமிஷத்திலே எல்லோருடைய கவலையையும்போக்கிவிடுகிறேன். என் சபதத்தைக் கேளுங்கள்.'

அந்த வீரத் தொனி எல்லோரையும் கனவுலகத்திற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. 'இவர் என்ன சொல்லப் போகிறார்? என்ன சபதம்?' என்ற தீவிரமான ஆவல் எல்லோர் உள்ளத்தையும் பற்றிக்கொண்டது.

'ஆம். நான் சபதம் செய்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் இதற்கு சாக்ஷி. தர்ம தேவதை இதைக் கேட்கட்டும். இங்குள்ள சான்றோர் கேட்டு ஆசீர்வாதம் செய்யட்டும். என் தந்தையார் பொறுமையோடு கேட்டுக் கலக்கமின்றி இருக்கட்டும். என் தமயனும் கேட்டு ஆறுதல் பெறட்டும். தெய்வத்தின்மேல் ஆணையாக நான் இன்றே, இப்பொழுதே துறவு பூண்கின்றேன்.'

அங்குள்ளவர் யாவருடைய உள்ளங்களையும் உயிர்களையும் அவ்வார்த்தைகள் உருக்கிவிட்டன.

வார்த்தைகளோடு அவன் நிற்கவில்லை. தன்மேலுள்ள ஆபரணங்களைக் கழற்றித் தந்தையார் முன் வைத்தான்.

அரசன் கண் கலங்கினன். சான்றோர் அழுதனர். செங்குட்டுவன் ஓடிச்சென்று இளவலைக் கட்டித் தழுவிக் கோவென்று கதறினன்.

'என்னப்பா இது! இந்தச் சபதம் செய்யலாமா?' என்றான் சேரலர் கோமான்.

'எல்லோருக்கும் நலம் தரும் சபதம் இது. இதுவரையில் இவ்வரண்மனை எனக்குரிய வீடாக இருந்தது. இன்று முதல் குணவாயிலிலே இருக்கும் கோயிலே என் இருப்பிடமாகும். இந்தச் சோதிடரே எனக்கு இத்தகைய வைராக்கியம் உண்டாவதற்குக் காரணர் ஆனர். இவர் கூறிய சோதிடம் பொய்படவில்லை. மற்றவர்கள் நினைத்தபடி ஆகாமல் அந்தச் சோதிடம் பொய்த்ததேயன்றி உண்மையாக அது பொய்க்க வில்லை. நான் இதுவரையில் யுவராஜனாக இருந்தேன். இனி நான் தவராஜனாக இருப்பேன். செங்குட்டுவர் சேரநாட்டு அரசுரிமையைப் பெறுவார். நானே சோதிடர் கூறியபடி சிந்தைக்கும் எட்டாததும் அந்தமில்லா இன்பத்தை யுடையதுமாகிய மோக்ஷசாம் ராஜ்யத்தின் அரசுரிமையைப் பெறுவேன். நான் விடை பெறுகிறேன்.'

இளங்கோவாகிய அவர் கம்பீரமாக நடந்துபோனபோது அங்கிருந்தோர் கண்களிலிருந்து பொங்கித் துளித்த நீர்த்துளிகள் அவர் திருவடி மலர்களுக்குப் பாத்திய நீராயின.

இளங்கோவாக இருந்த அப்பெருமான் இளங்கோ அடிகளானர். அருள் நிரம்பிய நெஞ்சுடைய அவர் இயற்றியதே சிலப்பதிகாரம்என்னும் அரும் பெருங் காப்பியம்.

கம்பராமாயணச் சிறப்பு*

ராவ் ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. ஸி.

அரசாட்சி யாக அறைவென் கவியின்பு
அரசாட்சி யின்பின்உயர் வாம்.
அஃதுயர்ந்த காவியமாய் இன்நா டகமுமாம்
அஃது கம்ப ராமா யணம்.
எக்காலும் எந்நாட்டும் எய்கவிகள் தம்முள் எவன்
மிக்கான் அவன்கம்பன் மெய்.

கம்பராமாயணத்தின் பெருமையை அறியாத தமிழர் இல்லை. அதனில் அடங்கியுள்ள மிக்க அருமையும் இனிமையும் வாய்ந்த கருத்துக்களை அறிந்து ஆனந்திக்கும் பயன்பெறவே, தமிழரல்லாதாரும்தமிழைக்கற்கவேண்டுமென்பது,மிகையாகாது.

இவ்வாறு அந்நிய பாஷையில் உள்ள இலக்கியங்கள் தம் பாஷையிலே மொழிபெயர்க்கப்பட்டவற்றைப் படித்தமட்டிலே திருப்தியடையாமல், அவ்விலக்கியங்களை நேராக அறிந்து ஆனந்திக்க விரும்பி, அவைகள் எழுதப்பட்டுள்ளமூலமொழிகளைக் கற்றுத் தேறிய அருங்கலை விநோதர் அநேகர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உளர். நாகரிகமடைந்த மற்றைத் தேசங்களிலும் அத்தகையார் சிலர் இருக்கின்றனர்.

இவ்வுலகத்துச் செல்வமெல்லாவற்றையும் ஒருங்கே அடைந்து சகல போகங்களையும் ஆசைதீர அநுபவிக்கும் ராசபதவியே யன்றி, எல்லா வகையிலும் அந்த இராசபதவியிலும் எற்றமான இந்திர பதவியுமே கம்பராமாயணம் போலக் கற்றோர்க்கு மனக்களிப்பைத் தரமாட்டாது என்னும் கருத்துப் புலப்பட,

இம்பர்நாட்டிற் செல்வமெல்லாம் எய்திஅரசாண் டிருந்தாலும்
உம்பர்நாட்டிற் கற்பகக்கா ஒங்கும்நீழல் இருந்தாலும்
செம்பொன்மேரு அனையபுயத் திறல்சேர்இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயம் களியாதே

என்று கற்றோர் ஒருவர் மனம் கனிந்து கூறியது உபசார மன்று, உண்மையேயாம் எனக் கற்றோரனைவரும் ஒப்புக்கொள்வர்.

---

* வெ. ப. சு. கம்பராமாயண சார முன்னுரையிலொருபகுதி.
† அரன் (—சிவன்)

யாதாயினுமொரு காவியத்திலே பற்றுடையோர், அக் காவியத்தின் சிறப்பைப் புலப்படுத்த, அதை வேறு காவியங்களோடு ஒப்பிடாமல், கம்பராமாயணத்தோடு ஒப்பிட்டு, அது கம்பராமாயணத்திலும் சிறந்ததெனப் பாராட்டி முடிவு கட்டுவது வழக்கம். ஒரு பெண்ணின் அழகைச் சிறப்பாகக் கூறுவோன், அப் பெண் இலக்குமியினும் சிறந்த அழகுடையா ளென்பதனால், இலக்குமியே அழகிற் சிறந்தாளென்னும் உண்மை பாதிக்கப்படாதது போல, கம்பராமாயணம் அதனோ டொப்பிடப்பட்டு உயர்த்திக் கூறப்பட்ட எல்லாக் காவியங் களினும் உயர்ந்ததென்பது உண்மையில் மறுக்கப்படவில்லை யென்பது சொல்லவேண்டியதில்லை.

மலையாள ஜில்லாவில் கோவில்களில் கம்ப ராமாயணத்தைப் பிரசங்கித்தற்கு, மானியங்கள் ஏற்பட்டுத் திருவிழாக் காலங்களில் அயல் மொழியினரான மலையாளிகள், கம்பராமாயணப் பாட்டுப் பாடிப் பொருள் கூறும் திருப்பணி செய்து வருகின்றார்கள். இந்தப் பெருமை வேறெந்தத் தமிழ் நூலுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வழக்கம் மலையாளத்தில், சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழே தாய் மொழியாய் இருந்த காலத்தில் ஏற்பட்டு, வெகு பிரபலமாய் இருந்திருக்கவேண்டு மென்பதும், அந்தப் பிரபலத்தின் ஆற்றல் அவ்வழக்கத்தைத் தமிழராயிருந்த மலையாளிகளின் தாய்மொழி மலையாளமாக மாறிய பின்னும், நிலைத்திருக்கச் செய்திருக்கின்றது என்பதும் ஊகித்தற் பாலனவா யுள்ளன.

தெலுங்கு ஜில்லாக்களில் கம்பராமாயணத்திலுள்ள சுந்தர காண்டம் தெலுங் கெழுத்தில் எழுதப்பட்டுப் பாராயணம் செய்யப்பட்டு வருவதும் கம்பராமாயணச்சிறப்பைவலியுறுத்தும்.

கம்பராமாயணப் பிரசங்கமே தங்கள் ஆயுள் முயற்சியாகக் கொண்டு, கம்பராமாயணப் பிரசங்கிகளென்ற பெயர் வகித்த புலவர் பெருமக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் பலர் பல இடங்களில் இருந்து வந்திருப்பது, வேறெந்த நூலுக்குமில்லாத

தனிச் சிறப்புடையது கம்பராமாயணமென்பதை இறுதியாகவும் உறுதியாகவும் நிலைநாட்டுகின்றது.

உலகத்துப் பல பிரபல மொழிகளில் உள்ள மிகச் சிறந்த காவியங்களுள் ஒன்று வான்மீக ராமாயணமென்பர். வான்மீக முனிவரது 'உரையின்படி நான் தமிழ்ப் பாவினுல் உணர்த்திய,' தென்று கம்பர் வான்மீகத்தின்வழி நூலாக இயற்றியராமாயணம், அழகிலேயன்றி *அளவினும் வான்மீகத்தினும் சிறந்து விளங்குகின்றதென்று இரண்டு நூல்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்தோர் சிலர் கூறுவர். இதனை வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லார் எல்லாரும் ஒப்புக்கொள்ளினும், வான்மீகத்துக்கு இழுக்கு அன்று; பெருமையேயாம்; தந்தையினும் மகன் சிறப்புடையனதல், தந்தையின் சிறப்பைக் குறையாது, (அத்தகைய புத்திரனுக்குப் பிதாவாம் பெருமையால்) அதிகப்படுத்துவதாமாதலால்; தந்தையின்றேல், மகன் இன்மைபோல, வான்மீகமின்றேல், கம்பராமாயணமு மின்றும். தக்கவன் ஒருவன் அடைந்த பிதிரார்ச்சிதச் சொத்து, அவனுல் கழிதற்பாலன கழிக்கப்பட்டும், சீர்திருத்தப்பெற்றும், நூதனமாகச் சேர்க்கத் தக்கன சேர்ப்புண்டும், எல்லா வகைகளினும் மேன்மையுற்று விளங்குவதுபோல, முதல்நூலாகிய வான்மீகத்தினும் வழிநூலாகிய கம்பராமாயணம் சிறந்து விளங்குகின்றது. இவ்வாறு கூட்டவும் குறைக்கவும் மாற்றவும் பெற்ற பகுதிகளிலே, பல, நூலினிமையை அதிக்ப்படுத்துவனவாம்; வேறுபல, வான்மீகர் கால நாகரிகத்துக்கு இயைய அவர் கூறியவைகள் கம்பர் கால நாகரிகத்துக்கு ஏலாதனவானதனுல், பிந்திய காலத்திற்குப் பொருத்தமாக மாற்றப் பெற்றனவாம்.

முதனூலாகிய வான்மீகத்தின் பெருமையின் அளவு, தந்தையாகிய தசரதனது பெருமையின் அளவாமென்றுல், வழி

---

*வான்மீகம் 24000 சுலோகங்களையுடையது; கம்பராமாயணம் 12000 விருத்தங்கள் உள்ளது; ஆயினும் சுலோகங்களின் குறுமையையும் விருத்தங்களின் நெடுமையையும் நோக்கக் கம்பராமாயணமே அளவிற் பெரியதாம்.

நூலாகிய கம்பராமாயணப் பெருமை யளவு, மைந்தனாகிய இராமன் பெருமை யளவா மெனலாம்.

மேலே, வான்மீகம் இன்றேல், கம்பராமாயணமும் இன்றும் என்றேன்; அஃதுண்மையே. ஆயின், அங்ஙனம் கூறியது, வான்மீகம் இல்லாதிருந்தால், கம்பர், தம் ராமாயணம் போல வேறு யாதேனும் பிரபலமான நூல் இயற்றியிரார் என்று கூறியதாகாது. இராமன் கதை தம் காலத்து வழங்கியதை ஆதாரமாகக்கொண்டு வான்மீகி தம் நூலை ஆக்கினர். அதுபோல, தம் காலத்துப் பிரபலமாயிருந்த வான்மீகி நூற்கதையை அடிப்படையாகக்கொண்டு கம்பர் தம் நூலை இயற்றினர். வான்மீகராமாயண கதை இல்லாதிருந்தால், அந்தக் கதாபூமியிற் பிரவகித்து அதை வளமுறச்செய்த கம்பரது கவித்துவப்பேராறு, வேறு யாதாயினும் ஒரு கதாபூமியைச் செழிப்படையச் செய்திருக்கும் என்பது திண்ணம்.

ஒரு நூலுக்கு அதன் கதை, ஒரு மாளிகைக்கு அது கட்டப்பட்டுள்ள இடம் போல்வது. சிற்பியின் திறமையை அளந்து காட்டுவது, அவன் நிருமித்த மாளிகையே அன்றி, அஃதுள்ள இடமன்று. அதுபோல, கம்பர் பெருமையை மதிப்பிடுங்கால், இராம கதை கேவலம் இடமாகவும், கம்பராமாயணம் அதன்மேல் கட்டப்பட்டிருக்கிற மாளிகையாகவும் கொள்ளல்வேண்டும். ஷேக்ஸ்பியர் மகாகவியின் பெருமைக்குக் காரணம் அவர் எடுத்தாண்ட கதைகள் சரித்திரங்கள் அன்று; அக்கதை சரித்திரங்களை உபகரணங்களாகக் கொண்டு அவர் இயற்றிய நூல்களின் கவியினிமையே என்பர் ஆங்கிலவாணர்.

குணம் பரிமாணம் இரண்டினும் பேரளவினதான கம்ப ராமாயணத்தோடு ஒப்பிடத்தக்க பேரளவுடைய நூல் யாதுமில்லை. அதனோடு குணத்தில் ஒருவாறு ஒப்பிடக்கூடிய சிற்றளவு நூல்களில் சிறந்ததாய்ப் பேரின்பமும் பெருவியப்பும் பயக்கும் கலிங்கத்துப்பரணியிலுள்ள கதைச் சிறுமையையும்

பெருமையையும் கண்டார், கவிஞர் பெருமைக்கு உண்மைக் காரணம் அவர்கள் கூறும் கதைகள் அன்று, அக் கதைகளைக் கூறுவதிற் காட்டும்கவித்துவசாதுரியமேஎன்று தெரிந்தவராவர்.

தமிழிலே கம்பராமாயணம் போல, ஆங்கிலத்திலே, சிறந்த பாரகாவியமாகிய சுவர்க்க நீக்கத்தை இயற்றியமிலிட்டனரது சரித்திரத்தை எழுதிய ஓர் ஆங்கில ஆசிரியர், உலக இலக்கியக் காட்சிச்சாலை ஒன்று நியமித்து அச்சாலையில் ஒவ்வொரு மொழியாளரும் தத்தம் மொழியில் இரண்டு இலக்கியப் புத்தகங்களை கொண்டுவந்து வைக்கலாமென நிபந்தனை ஏற்படுத்தினல், ஆங்கிலேயர்கள், அங்கே, ஷேக்ஸ்பீயரது புத்தகத்தையும் மிலிட்டனரது புத்தகத்தையுமே காட்சிப் பொருள்களாக வைப்பரென்று கூறியுள்ளார். அப்படிப்பட்ட காட்சிச்சாலையில், தமிழ் மக்கள் கொண்டு வைத்தற்குரிய இரண்டு நூல்கள், குறளும், கம்பராமாயணமுமே யென்பது தெளிவாம்.

ஒரு பெருமாளிகையை அதன் பல பகுதிகளை நோக்கி மதிப்பதனோடு, முழுமையாகப் பார்த்தும் மதிப்பிடுதல்போல, கம்பராமாயண காவியத்தைப் பகுதிபகுதியாக நோக்கிக் கண்ட வனப்புக்களையும், முழுமையாக நோக்கிக்கண்ட அழகையும் பல மொழிப் புலமையுடைய பாரிஸ்டர் வ. வெ. சு. அய்யர், 'பால பாரதி' என்ற மாதாந்தரப் பத்திரிகையில் மதிப்பிட்டு வித்தரித்தெழுதியுள்ளார். அவர், உலக மகா காவியங்களின் வரிசையில் கம்பராமாயணத்தின் தானத்தை நிர்ணயிக்கப் புகுந்து, பல பாஷா காவியங்களின் மூலத்தையேனும் மொழிபெயர்ப்பையேனும் படித்து ஆராய்ந்து, அவற்றோடு கம்பராமாயணத்தை முழுமையாக ஒப்பிட்டும், அதனில் பல பாகங்களை அவ்வப்பாகங்களின் விஷயங்களை வருணிக்கும் மற்றைக் காவியங்களின் பாகங்களோடு ஒப்பிட்டும் நோக்கி, கம்பராமாயண பாகங்கள் இன்னின்னவை இன்னின்ன பிற காவிய பாகங்களினும் சிறந்தவை, இன்னின்னவை குறைந்தவையென எடுத்துக்காட்டி, கம்பராமாயணம் உயர்ந்த உலக காவியங்களெல்லாவற்றினும் உயர்ந்ததென முடிவு செய்திருக்கின்றார்.

கங்கையாறு தோன்றியபின் வேறுள்ள ஆறெல்லாம் மேம்பாடிழந்ததுபோல, சீதை தோன்றியபின் ஏனைய அழகிய மாதரனைவரும் அழகிழந்தார்கள்* என்று கம்பர் கூறியவாறு, கம்பராமாயணம் பாடப்பெற்றபின் மற்றெல்லா நூல்களும் சிறப்பற்றனவாயின என்னலாம்.

அவர், 'ஒவ்வோ ருறுப்புச்சிறந்த அழகுடையதாகப் பெற்றவர் மற்றைய வனப்புமிக்க மாதர்; அவயவம் அனைத்தும் உத்தம அழகு ஒருங்கு நிரம்பப் பெற்றவள் சீதை யொருத்தியே' † என்றவாறு, ஏனைய நூல்க ளெல்லாவற்றிலும் சில சில பகுதிகளே சிறந்தனவாயிருக்க, எல்லாப் பகுதிகளும் ஏற்றமுடையனவாகவுள்ளது கம்பராமாயண மொன்றேயென்று கூறலும் ஆம்.

எந்தக் காவியம், தன்னைப் படித்து இன்புறப் பெறாராய்த் தான் தோன்றுமுன் இறந்த காவிய ரசிகரைக்காட்டிலும் தன்னை அறிந்து ஆனந்திப்பாராய்த் தான் தோன்றிய பின் வாழப்பெற்ற காவியரசிகர் பாக்கியசாலிகள் என்னும்படி எல்லாவகை வனப்புக்களும் மலிந்து சிறந்து விளங்குகின்றதோ, அந்தக் காவியம் கம்பராமாயணமேயாம்.

---

*கணங்குழையாள் எழுந்ததற்பின் கதிர்வானிற் கங்கையெனும்
அணங்கிழியப்பொலிவிழந்த ஆறொத்தார்வேறுற்றார்.—கார்முகப் படலம்.

†உழைகுலாம் நயனத் தார்மாட் டொன்றொன்றே விரும்பற்கொத்தது
அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்.
—கோலங்காண் படலம்.

நல்லார் இணக்கம்*

ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

தமிழ்நாடு தழைத்தோங்கி யிருந்தகாலத்தில், கோப்பெருஞ் சோழன் என்னும் மன்னவன் சோழநாட்டை ஆண்டுவந்தான். காவிரிக்கரையி லமைந்த உறையூரைத் தலைநகராகக்கொண்டு செங்கோல் ஓச்சிய அவ்வளவன் புலவர்பாடும் புகழுடையவனாய் விளங்கினான்.

அக்காலத்தில் பாண்டி நாட்டிலமைந்த பிசிர் என்னும் சிற்றூரில் புலமைசான்ற ஆந்தையார் ஒருவர் இருந்தார். அவரைப் பிசிராந்தை என்று அன்பர்கள் அழைத்தார்கள். கோப் பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும், வேறு வேறு நாட்டிலும், வேறு வேறு குலத்திலும் பிறந்தவராயினும் ஒத்த உணர்ச்சி யுற்றமையால் உயரிய நண்பராயினர். சோழமன்னன்,உறையூரில் அரசு வீற்றிருந்தான். ஆந்தை, பாண்டிநாட்டுப் பழம்பதியாகிய பிசிர் ஊரில் வாழ்ந்தார். அரசர் கோமான் வளவர் குலத்திற் பிறந்தவன். ஆந்தை ஆதன் குடியிற் பிறந்தவர். சோழன் பெருஞ்செல்வம் படைத்தவன். ஆந்தை அறிஞர்க்கு அணியாய வறுமை பூண்டவர். இங்ஙனம் குலத்தாலும், நலத்தாலும், பிறவற்றாலும் வேறுபட்ட அரசனும் ஆந்தையும் உண்மைக் கேண்மைக்கோர் உயரிய சான்றாக விளங்கினர். இருவர் நண்பராதற்கு ஒருவரோடொருவர் நெருங்கிப் பலகாற் பழகுதல் வேண்டாற் பாலதன்றென்றும், ஒத்த உணர்ச்சியே நட்பென்னும் உரிமையைப் பயக்குமென்றும் தமிழ்மறை அருளிய வாய்மைக்கு அரசனும், ஆந்தையும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தார்கள்.

கோப்பெருஞ்சோழன் தன்பால்வைத்த தலையாய அன்பின் திறமறிந்த ஆந்தையார், ஒருநாள் மாலைப்பொழுதில் ஆகாய வழியே விரைந்துசென்ற ஓர் அன்னத்தை நோக்கிப் பகர்ந்த அழகிய மொழிகள் நேயம் நிறைந்த அவன்நெஞ்சின் நீர்மையை நன்குணர்த்துவனவாம். வளமார்ந்த குமரித்துறையில் அயிரை மீன் அருந்தி மாலைப்பொழுதில் தன்மனை நோக்கிச் சென்ற ஓர்

---

* ஆனந்த குமரனில் வெளியானது.

ஆண் அன்னத்தைக்கண்ட ஆந்தையார், 'அன்னமே! அன்னமே!! வளமார்ந்த குமரித்துறையில் நீ அயிரைமீன் அருந்தி வடமலையிலுள்ள உன் மனையை நோக்கி எகுவாயாயின் ஒன்று சொல்வேன் கேள்! நீ செல்லும் வழியில் சோழநாடு அமைந்திருக்கின்றது. அந்நாட்டின் தலைநகராய கோழி என்னும் உறையூரில் ஓங்கி உயர்ந்த அழகிய மாளிகையில் சோழ மன்னன் வாழ்கின்றான். அவ்வரண்மனையின் வாயில்காப்போனைக் கண்டஞ்சாது நேராக மாளிகையின் உள்ளே நீ சென்றால் கோப்பெருஞ் சோழனென்னும் எனது கோமானைக் காண்பாய். அவன் முன்னே நின்று, வளவனே! நான் பிசிர் என்னும் ஊரிலுள்ள ஆந்தையின் அடியுறை என்று சொல்வாயாயின், மனமகிழ்ந்து அன்பார்ந்த நின்பேடை அணிதற்குரிய நல்லணியை அம்மன்னன் உனக்கு நயந்தளிப்பான்' என்றுரைத்த அருமை சான்ற மொழிகளில் அரசனும், அப்புலவரும் உயிர் நண்பராய் அமைந்திருந்த தன்மை நன்கு விளங்கும்.

நெடுங்காலம் உறந்தையில் வாழ்ந்து மன்னுயிரைக் காத்து வந்த மன்னவன், முதுமை வந்துற்றபொழுது தன்னுயிர்க்கு உறுதுணையாய தவம்புரியக் கருதி நாடும் செல்வமும் துறந்து கானகம் சேர்ந்தான். இவ்வாறு சோழன் அருந்தவம் புரியப் போந்தான் என்று அறிந்த ஆந்தையார் தாமும் உற்றார் உறவினரை நீத்துச் சோழன் இருந்த சூழலை நோக்கி நடந்தார். ஆருயிர் நண்பனாகிய ஆந்தை தம்மைத் தேடிவருதல் ஒருதலையென்றுணர்ந்த அரசன், தன் அருகிருந்த சான்றோரை நோக்கி 'அன்பரே! என் உயிர்க்குயிராய் உள்ளவன், தென்னவன் நாட்டில் அமைந்த பிசிர் என்னும் சிற்றூரிலுள்ளான். செல்வச் செழுமையுற்று நான் வாழுங்காலத்தில் அவன் வாராதிருப்பினும் இவ்வல்லற்காலத்து ஈங்கு வாராது ஆங்கு நில்லான்' என்று அறிவுறுத்தி ஆவி சோர்ந்தான்.

காடும் நாடும் காலினாற் கடந்து ஆந்தையார், சோழன் தங்கியிருந்த சூழலை வந்தடைந்தபொழுது, அவன் ஆவி துறந்தானென்றறிந்தார். அந்நிலையில், அன்பனைப் பிரிந்திருக்க ஆற்றாத ஆந்தையார் உண்ணா நோன்பினை மேற்கொண்டு உயிர் துறந்தார்.

இவ்வாறு ஒத்த உணர்ச்சியுடையார் உயரிய நண்பராய் வாழும் உண்மைக்கு ஒருசான்று காட்டினர் கவியரசராய கம்பர். வானர நாட்டு வேந்தனாகிய சுக்கிரீவனும், இலங்கை வேந்தன் தம்பியான விபீஷணனும் பலவகையில் வேற்றுமையுற்றவர். முன்னவன் வானர நாட்டிற் பிறந்தவன். பின்னவன் இலங்கை நாட்டிற் பிறந்தவன். முன்னவன் அரிக்குலத்தினன். பின்னவன் அரக்கர் குலத்தினன். முன்னவன் வெண்ணிறம் வாய்ந்தவன். பின்னவன் கருநிறம் வாய்ந்தவன்; எனினும் இருவரும் ஒத்த உணர்வுடையராய் இருந்தமையால் உள்ளம் ஒன்றி உயரிய நண்பராயினர்.

'தொல்லருங் காலமெல்லாம் பழகினும், தூயரல்லார்
புல்லலர்; உள்ளந்தூயார் பொருந்துவர் எதிர்ந்தஞான்றே.
ஒல்லைவந் துணர்வும்ஒன்ற இருவரும், ஒருநாளுற்ற
எல்லியும் பகலும்போலத் தழுவினர் எழுவிற்றோளார்'

என்றார் கவியரசர்.

முன்பு ஒருவரை ஒருவர்கண்டு அறியாத அரிக்குல வேந்தனும், அரக்கர்குல அறிஞனும் அறம் நிரம்பிய மனத்தினர் ஆதலானும், தம் பிறப்பினால் வந்த புன்மை தீருமாறு அறநெறியாக நின்ற அஞ்சன வண்ணனோ டுறவுபூண்டமையானும், இருவர் உணர்வும் ஒன்றுபட்டதென்றும், அந்நிலையில் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டமையால், பலநாட் பழகிய பான்மையாளர்போல் இருவரும் ஒருவரையொருவர் தழுவினரென்றும் இனிதெடுத் துரைக்கும் கம்பர் கவியில் நட்பின்பான்மை நன்கிலங்குவதாகும்.

இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்க்கையில் இன்பத்தை நிறைப்பதற்கும் துன்பத்தைக் குறைப்பதற்கும் இனிய துணைவர் வேண்டும் என்று அறிந்தோர் கூறுவர். இன்ப நிகழ்ச்சிகளைக் குறித்து நண்பருடன் நாம் கலந்து பேசுங்கால் நம் மனத்தில் மகிழ்ச்சி பெருகுகின்றது. துன்ப நிகழ்ச்சிகளை நண்பரிடம்சொல்லி ஆறுதலால் நம் மனத்துயர்மெல்ல மெல்லத் தேய்ந்து ஒழிகின்றது. இதனாலேயே இறைவனால் மாந்தர்க்கு அருளப்பெற்ற சிறந்த நலங்களுள் நட்பும் ஒன்றென்று உயர்ந்தோர் கருதுகின்றனர்.

இத்தகைய நண்பரைத் தேர்ந்துகொள்ளுதல் எளிதாகத் தோன்றினும் உண்மையில் அது மிக அரிது. பொருளாளரது கேண்மையால் ஒன்றும் பெறுதல் இலரெனினும், அன்னார் நண்பரென அயலார் தம்மை மதிப்பரென்றெண்ணி அவரைச் சூழ்ந்திருப்பர் பலர். இப் புன்மக்கள் போலிப் பெருமையாற் பொலிவெய்தக் கருதித் தம் உடலையும் உயிரைம் பொருளுடையார்க்கு அடியுறையாக்குவர். நட்பினலாய நற்பயனை ஒருவன் பெறல்வேண்டுமாயின் உணர்ச்சி யொத்தவரோடு நேசம் கொள்ளுதல் அடுக்குமேயன்றிச் செல்வச் செருக்குற்றோரை நண்பரெனக் கருதுதல் சீரழிவிற்கே ஏதுவாகும். உணர்ச்சியால் ஒருமைப்பட்டோர் உலகில் ஒரு சிலரேயாவர் என்னும் உண்மை 'ஊரில் ஒருவனே தோழன்' என்னும் முதுமொழியால் உணரப்படும்.

இவ்வுலகில் வாழும் மக்களின் மனப்பான்மையை நன்குணர்ந்த கவிஞர், நண்பராகக் கொள்ளத்தக்கார் இன்னார் என வரையறுத்து வழி காட்டியுள்ளனர். வேழம்போல் உயர்ந்தாரது கேண்மையை விரும்பாது, நாயனைய நல்லாரது நேசத்தைப் பெறல் வேண்டும் என்று நாலடியார் உணர்த்துகின்றது.

'யானை யனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்; - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்'

என்ற நாலடியின் கருத்து அறியத்தக்கதாகும்.

மாநிலத்தில் வாழும் விலங்குகளுள் வேழமே உருவத்தில் உயர்ந்ததாகும். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்,இறந்தாலும் ஆயிரம் பொன்' என்னும் பழமொழியே அதன் அருமையை இனிதுணர்த்துகின்றது. இன்னோரன்ன நலங்களெல்லாம் அமைந்திருப்பினும், வேழத்தோடு பழகலாகாதென்று அறிந்தோர் கூறுவர். அவ்விலங்கினிடம் உருவும் திருவும் அமைந்திருப்பினும் குணநலம் காண்டல் அரிதாகும். சிற்றமும்

மயக்கமும் அதன்பால் இயல்பாக அமைந்த சிறுமைகளாகும். காட்டில் வாழும் யானையை நாட்டிற் கொணர்ந்து கவளம்ஊட்டி ஏற்றவகையிற் போற்றினும், அவ் விலங்கின் தன்மை சிறிதும் மாறுபடுமாறில்லை. பசியறிந்து யானைக்கு உணவருத்திப் பேணும் பாகன் என்றேனும் அதன் வெம்மைக்கே இரையாவான். பன்னாட் பழகிய பாகன் என்றும் பாராது, நல்லுணவளித்த நண்பன் என்றும் கருதாது, சீற்றமுற்றபோது பாகனைச் சிதைக்கும் சிறுமை வேழத்தின் இயல்பாதலால் அவ்விலங்கின் தன்மை வாய்ந்த மாந்தரோடு பழகுதல் ஆகாதென்று ஆன்றோர் அருளிப்போந்தார். இவ்வுலகில் ஏற்றமும் தோற்றமும் வாய்ந்து இறுமாந்து வாழும் செல்வருடன் அல்லும் பகலும் பழகினும், அவர் குறிப்பறிந்து குற்றேவல் செய்தாலும், இடையறாது இச்சகம் பேசி இன்புறுத்தினும், அன்னார் வெகுளுங்கால் பன்னாட் பழகிய பான்மையரைச் சிதைக்கச் சிறிதும் தயங்கார். பிறன் செய்த சிறு நன்மையைப் பெருநன்மையாகக் கருதி அவன் புரியுந் தீமை அனைத்தும் பொறுத்தல் பண்புடையோர் செயலாகும். அவ்வாறன்றிப் பிறன் ஆற்றிய நன்மையனைத்தும் மறந்து ஒரு சிறு தவறு கண்ட விடத்து ஒறுத்தல் இழிந்தோர் இயல்பாகும். செல்வச் செருக்குற்றோர் பிறர் தமக்குச்செய்யும் நன்மையை மறந்து தீமையையே நினைந்து சீற்றமுறும் தன்மையராதலின், அன்னார் இணக்கம் ஆகாதென்று ஆன்றோர் அறிவுறுத்தினர்.

வேழத்தை உயர்ந்த பொருளெனக் கருதி மதிக்கும் உலகம் நாயை மிக இழிந்த பொருளெனக் கருதி இகழ்கின்றது. தம் நிலையின் இழிந்த மாந்தரை நாய்கள் என்று பழிக்கும் பழக்கம் இந்நாட்டில் உண்டு. ஆயினும், அவ்விலங்கினிடம் ஓர் உயர்ந்த குணம் அமைந்திருக்கக்காணலாம். செய்ந்நன்றி அறிதல் என்னும் சீரிய அறத்தை உயிரினும் உயர்வாகப் போற்றும் பெருமை விலங்கினங்களுள் நாய்க்கே சிறப்பாக உரியதாகும். தெருக்களில் குறுக்கு மறுக்காகத் திரியும் நாய் பெரும்பாலும் மக்கள் தம் வீட்டினின்று கழித்தெறிந்த மிச்சிலையே உண்டு மகிழ்கின்றது.

இங்ஙனம் கழித்த உணவை உண்டு களிக்கும் நாய், மிச்சிலிட்டாரைக் கண்டபொழுது உச்சி குளிர்ந்து, வால் குழைத்துத் தலை தாழ்த்து இன்முகங்காட்டி ஆர்ப்பரிக்கக் காணலாம். பகைவராலேனும் கள்வராலேனும் பிறவாற்றலேனும் தனக்குணவிட்ட தலைவனுக்குத் தீங்கு நேருங்கால் அதனைத் தடுக்கும் முயற்சியில் தன்னுயிரையும் கொடுக்கும் உயரிய சீலம் நாயினிடம் உண்டு. ஆழநீரில் தவறி விழுந்த தம்தலைவரைக் கவ்வியெடுத்துக் கரைசேர்த்துக் காத்த நாய்களின் கதை இந்நாநிலத்திற் பலவாகும். தனக்கினிய தலைவன் நோய்வாய்ப் பட்டு வருந்துங்கால் நன்றிமறவாத நாய் வெருட்டினும்போகாது அவனருகே கிடந்து ஊணுறக்கங் கொள்ளாது, கடைக்கண்ணால் அவனை நோக்கி நோக்கிக் கண்ணீருகுத்தலை நாம் கண்டிருக் கின்றோம். இவ்வாறு தினைத்துணை நன்மை செய்யினும் பனைத் துணையாகக்கொள்ளும் பான்மை வாய்ந்த நாய், தலைவன் காரண மின்றித் தன்னைத் துன்புறுத்தியபோதிலும் அவனருள் நினைந்து அகங்குழையும்தன்மைவாய்ந்ததென்று அறிஞர்கருதுகின்றார்கள். சிற்றமுற்ற தலைவன் தன் கரத்திலமைந்த கூரிய வேற்படையை யெறிந்து வெந்துயர் விளைப்பினும், அவ்விலங்கு அவனை நோக்கி இன்முகங் காட்டி வால் குழைத்து நிற்கும். உடல் புண்ணுற்று எரியும்பொழுதும் உள்ளம் நன்றியறிந்து மகிழ்தலை நாயினிடம் நன்கு காணலாம். 'கொன்றன்ன இன்னசெயினும் அவர்செய்த ஒன்றுநன் றுள்ளக் கெடும்' என்னும் பொய்யாமொழியின் வழி நின்று, புரவலன் செய்த பெருந்தீமையை அறவே மறந்து, அவன் ஆற்றிய நன்மையை நினைந்து இன்புறும் சால்பு ஏற்ற முடையதன்றோ! ஆகவே ஏற்றமும் தோற்றமும் இன்றி எளியராய் இவ்வுலகில் வாழும் மக்களுள் நாயின் நற்குணம் வாய்ந்தோர் உண்டென்றும், அன்னார் ஒரு நன்றி செய்தாரை உள்ளத்தில் வைத்து அவரிழைக்கும் தீமையெல்லாம் பொறுத்து நலமே புரிவாரென்றும், அத்தகைய எளியார் கேண்மையே கொள்ளத்தக்கதென்றும் ஆன்றோர்அருளியஉண்மையை அறிந்து ஒழுகுவோர் நலமார்ந்த நட்பின் சுவையுணர்ந்து இன்புற்று வாழ்வர்.

கவித்துவசத்தி*

மஹாவித்வான், பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்கார்.

கற்றவரெல்லாங் கவிகளாகார்ஆதலான், ஒருவர்க்குக் கவித்துவம், கேவலம் கல்விமாத்திரையான் எய்தலாவ தன்று. கவியாவான்,குற்றமில் இலக்கணம்முற்றப்பெற்ற சிந்தைக்கினிய,செவிக்கினிய,வாய்க்கினியவளமிக்கசெய்யுளில்,உலகுக்குஉறுதிபயக்கும் விழுமிய பொருளை, இனிதமைத்துத் தருபவனே என்ப. செய்யுள், இலக்கணம் நிரம்பிய பலவகை உறுப்புக்களாலும், கண்டார்க்கு விழைவுறுத்தும் அழகுடைச் சரீரமாகுமென்றும், அதன்கண் நிறைந்து விளங்கும் விழுமிய பொருள், உத்தமகுணங்கள் மலிந்த சீவனுகுமென்றும் துணியலாம். இதனல் விழுமிய பொருளாகிய உத்தமாபிப்பிராயம்இல்லாதசெய்யுளின்அழகுஉயிரில்பிணத்தழகு போல்வதென்று கொள்க.

கூன், குருடு, செவிடு, மூங்கை முதலாகிய குறையுடற்கண் ஆன்மசக்தி நிறைந்திருந்தபோதும், அச்சத்தியின் நிகழ்ச்சிக்கு உற்றவாயில்கள்இல்லாமையால், குன்றி, உலகிற்குப் பயன்படாதவாறுபோல, இலக்கணங்களாற்குறைபட்டஉறுப்புக்களையுடைய செய்யுளின்கண் உள்ள அபிப்பிராயமும், தன்னை இனிது புலப்படுத்தும் வாயில்கள் ஏற்ற பெற்றியான் அமையப்பெருமையால், பயன்படாதென்று தெரியலாம்.

இவற்றுல்மக்கட்குஉறுதிபயக்கும்நல்லதோரபிப்பிராயத்தை, அவர்க்கு விழைவூட்டும் நல்லதோர் செய்யுளில், அழகுபெற அமைக்கும் ஆற்றலே கவித்துவ சக்தி எனத் தெளியலாகும், இதனையே ஆசிரியர் தொல்காப்பியனர், 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்' என்பதனல் நன்கு புலப்படுத்தியருளினர் இதன்கண் உலக நிகழ்ச்சிக்கு நல்லுடலும் நல்லுயிருமாகிய இவ்விரண்டன் கூட்டம்போல, இன்றியமையாது என்று, இழுமென்மொழியும் விழுமியதும் ஆகிய இரண்டன் கூட்டமும் வேண்டுதல் காண்க.

---

* அகலிகைவெண்பா முகவுரையிலொரு பகுதி.

இவ்வரியகவித்துவசத்தி, உத்தமகுணங்கட்கு இருப்பிடனுகிய நல்ல மனோபாவத்தா லுண்டாவதொன்று. இது, ஒருவன் பிரயாசையான் மட்டும் உண்டாவதின்று என்பது அறிஞர்க் குடன்பாடு. 'பாவருங் கிழமைத்தொன்மைப் பருணிதர்' என்று, கல்வியிற் பெரியார் கூறினர். இதன்கட் பாவருங் கிழமை என்றது, பாடல் இயல்பாகவே வரும் உரிமை என்றவாறும்.

இப் பாவருங் கிழமை, பண்டைக்காலத்து இத்தமிழ்நாட்டு உத்தம மனோபாவத்தால் ஆண்மக்கள் மட்டில்லாமல், பெண் மக்கள்பாலும் மலிந்துநிலவியது என்பது, வான்றேய் நல்லிசைச் சான்றேராகிய சங்கப்புலவருள் எத்துணையோ பலர் பெண் பாலராதலால் தெரிந்தது. பெண்பாலார் செய்யுள்திறம், 'கந்துக வரி', 'அம்மானை வரி', 'ஊசல் வரி', 'குரவைப் பாட்டு' முதலிய விளையாடற் பாடல்களாலும் 'பிணக்கானம்' முதலிய இரங்கற் பாடல்களாலும் நன்கறிந்துகொள்ளலாம்.

'இன்று வரின் என்னுயிரை நீ பெறுவை; இன்றைக்கு
நின்றுவரின் அனைதவம் நீயறிவை'.

என்ற விழுமிய அடிகள் முனையர்கோன் காதற்பரத்தை பாடியன.

'மாப்படைக்குங் கோயிலிலே மண்ணைப் படைத்தேமோ
பூப்படைக்குங் கோயிற் புழுதி படைத்தேமோ'.

என்பது பிணக்கானம்.

இவை யல்லாமல்,

ஏற்றப் பாட்டும் இறைவைப் பாட்டும்
காவடிப் பாட்டுங் கப்பற் பாட்டும்
படையி னெழுச்சியும் பள்ளி யெழுச்சியும்
சிந்தமுஞ் சந்தமுந் திருத்தா லாட்டும்
கல்லுளிப் பாட்டுங் கவணெறி பாட்டும்
பாவைப் பாட்டும் பலகறைப் பாட்டும்
மறத்தியர் பாட்டுங் குறத்தியர் பாட்டும்
பள்ளுப் பாட்டும் பலகடை திறப்பும்
வள்ளைப் பாட்டும் பிள்ளைப் பாட்டும்

கறத்தற் காயர் திறத்துரை பாட்டும்
பொருத வேந்தர் விருதுப் பாட்டும்
களைப் பாட்டுங் காதற் பாட்டும்
என்றிவை முதலா வெத்துணை யோபல,

இக் காலத்தும் ஆங்காங்கு வழங்குதல் கொண்டு, பண்டைக் காலத்து இத் தமிழ் நாட்டுச் செய்யுட் சுவை, யாண்டும் மலிந்து விளங்கியது, ஊகித்துக் கொள்ளலாம். இங்ஙனமே,

அழுகையுந் தொழுகையு மசதி யாடலும்
எத்தும் இழிப்பும் இரத்தலு மெல்லாம்
பாட்டாய் வரலிந் நாட்டின் வழக்கெனக்

கண்டுகொள்க. இவ்வன்றி, உலகிய லறிவுறுக்கும் அளவிறந்த பழமொழிக ளெல்லாம், செய்யுட் கதியைத் தழுவி, மோனையோ எதுகையோ முற்றப் பெற்று, உரைப்பாட்டுக்களாக இந்நாட்டு நெடுங்காலமாக வழங்குதலும் ஆராய்ந்து கொள்க.

இவ்வாறு, பஃறொழின் மாந்தரும் இனிய ஓசையும் பொருளும் நிறைந்த பாடல்களையே தமக்கு இளைப்பாறி மகிழும் வாயிலாகக் கொண்டு, உத்சாகத்துடன் போற்றி வளர்க்கும்படி, உத்தம மநோபாவத்தையும் அதற்கேற்ற இன்சொற் றொடையையும் ஊட்டி, இக்கவித்துவசக்தியை, இந்நாட்டுப் பலவகை நிலத்தும் பரவச்செய்த மகோபகாரிகள், பண்டை நல்லிசைப் புலவரும் அவரை அன்புடனாதரித்த மூவேந்தரும் பெருவள்ளல்களும் ஆவர். மநோபாவத்தின் சிறப்பானன்றே 'தேவரனையர் புலவர்' என்பது. 'தேவர் தமரனைய ரோரூ ருறைவார்' என்பது, அப்புலவர் சொல்லுடனும் பொருளுடனும் பயிலுகின்ற சிறப்பினால், அவ்வூராரும் அப்புலவர் தமரோடொப்பர் என்று, தெளிவித்தவாறும்.

இத்தகைப் புலவர்கள் இக்காலத்து மிகவுங் குறைதற்குக் காரணம், 'பெற்ற-தாயிருக்க மணைவெந்நீ ராட்டுதிரோ மாட்டாத தகவற்றீரே' என்று கலிகன்றியார் அருளிச்செய்தபடி, தமிழ் நிலத்துப் பிறந்த பலரும், தம்முயிர்க் குறுதிபயக்குந் தந் தாய்மொழியை விட்டு வேற்றுமொழியையே ஆளப்புக்கதே யாகும்.

* * * *

கல்யாணத் தரகர்*

(ஒரு பாட்டுக்கு உரை)

ராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி. ஏ., பி. எல்.,

வெள்ளையர்களுக்குள்ளே மணம் பேசவும் பிடிக்கவும் தரகர்கள் வேண்டியதில்லை. ஒரு யௌவன புருஷன் ஒரு யுவதியை நாடகசாலையிலோ, விளையாட்டிடத்திலோ, பாடசாலையிலோ, அல்லது இரயில் வண்டியிலோ சந்திப்பான். இருவருடைய பார்வையும் ஒன்றுசேர வசிகரம் அடைவார்கள். அடிக்கடி சந்திக்கக் காதல் முற்றி மணம் ஏற்படும். பின்னர் நடக்கும் பிரிவினைக் கோலங்களை நாம் இங்கே கவனிக்க வேண்டியதில்லை. ஆனல் இவ்வித மணத்திற்குத் தரகன் என்னும் தூதன் வேண்டியதில்லை.

நமது நாட்டிலே மணமகன் பெண்ணைப் பார்க்க லஜ்ஜைப் படுவான்; இது சிறிது மாறிக்கொண்டு வருகிறது. பெண்ணே மணமகனைக் காண்பதே இல்லை. இருதிறத்தாரையும் ஒன்று சேர்க்கப் பெற்றோர் மாத்திரமன்று, தரகர் ஒருவர் அத்தியா வசியமாக ஏற்படுகிறார்.

நமது நாட்டு விவாகம் தெய்விகம் பொருந்தியது, மத சம்பந்தமானது, பெருமை வாய்ந்தது என்போம். முகம்மதிய ருடையதோ தெய்விகம் இல்லாமல் ஒரு லௌகிக ஒப்பந்தத்தின்பால் பட்டது என்று இகழ்கிறோம். அவ்விதமே மேல் நாட்டு மணங்களையும், தற்கால நூதன சட்ட சம்பந்த மணங்களையும் தாழ்த்திப் பேசுகிறோம். ஒப்பந்தம் இல்லாத தெய்விக மணமாயின் தரகர்கள் மத்தியில் எதற்கோ தெரியவில்லை.

ஆனல் முற்காலத்தில் நமது நாட்டில் தரகர் இல்லாத மணங்கள்தாம் நடைபெற்றன. ஒரு தலைவன் ஒரு நாள் உல்லாசமாகக் காட்டில் வேட்டை ஆடச் செல்வான். அங்கே

---

* கலைமகள் 3-ம் தொகுதியில் வெளியானது

தினைப் புனத்தைக் காத்துக்கொண்டு கிளிகளை ஓட்டிக் கொண்டு ஓர் அழகிய பெண் இருப்பாள். தலைமகன் அவள் அழகைக்கண்டு மயங்கிப் பேசுவான். பெண்ணே தானும் காதல் பூண்டு பேச நாணுவாள்; அப்போது ஒரு யானை எதிரிடும். பெண் நடுங்கி ஓடித் தலைவனிடம் அடைக்கலம் புகுவாள். தலைவன் யானையை அம்பால் எய்து வீழ்த்தி அவளைக் காப்பாற்றுவான். பின்னர் நீர்ச்சுனையில் அவள் குளிக்கையில் வெள்ளத்தில் விழுந்து கதறுவாள். உடனே தலைவன் சுனையில் விழுந்து நீந்தி அவளை எடுப்பான். காதல் முற்றி ஊர் சேர்ந்து மணம் நடக்கும்.

இதுதான் ஆதியிலே தமிழில் நடந்த இயற்கைப் புணர்ச்சி என்ற விவாக முறை. வட நாட்டிலும் துஷ்யந்தன் சகுந்தலையை மணந்தது இதுமாதிரியே. இதற்கு வடநூலார்காந்தருவவிவாகம் என்பார்கள். இவ்விவாகங்களில் தரகர் இல்லை. விவாக ரத்தும் இல்லை. வியாபாரமும் இல்லை.

ஆனால் இப்போது பாருங்கள். கலியாணத் தரகர் இல்லாவிட்டால் விவாகம் நடக்குமா? பிரதிப் பிரயோசனம் இல்லாமல் மணம் நிறைவேறுமா? விவாகச் சந்தைகள் (மார்க்கட்டுகள்) தினமும் அதிகமாகிக்கொண்டு வருவதைக் காண்கிறோமில்லையா? விவாகத்தரகர்களுடைய மதிப்பும் அதிகரித்துவருவதை நாம் தினந்தோறும்காண்கிறோம். இவர்கள் முன் சாரதாச் சட்டம் பஞ்சாய்ப் பறப்பதில்லையோ? இத்தகைய தரகர்கள் தாம் தமிழர்களுடைய இயற்கை மணத்தை ஒப்பந்த வியாபார மணம் ஆக்கினார்கள்.

* * * *

வியாபார ஒப்பந்தங்களில் உள்ள மோசடி, தவறுதல், பொருள் மாறுபாடு, ஆள்மாறாட்டம், பிரதிப்பிரயோசனமின்மை முதலிய குற்றங்கள் இங்கேயும் உண்டு. தற்காலத்தில் இவை அதிகமாகிக்கொண்டு வருகின்றன. பெரும்பாலும் பெரிய நிலைமையில் இருப்பவர்கள் விவாக நுட்பங்களை அறிய மாட்டார்கள். அன்னார்களுக்குத் தரகர்கள் அவசியம்.

அவர்களே அதிகமாக மோசம் போகிறவர்கள். மோசத்தை வெளியில் காட்ட வெட்கப்பட்டு விட்டுக்குள்ளே அவர்கள் அடங்கி இருப்பது சகஜம். ரோஷமுள்ளவர்கள் வெளியிட்டு வேடிக்கைக்காளாவதும் சகஜம்.

தற்காலத்தில் தரகர்களுடைய தொழில் மிகவும் சிறந்து கொண்டு வருகின்றது. நாட்டில் செல்வாக்கும் தற்கால இந்திய நாகரிகமும் அதிகமாக, அதிகமாகத் தரகர்களுக்குக் கொள்ளைதான். அதிகம் படித்த பிள்ளைகளுக்குப் பண ஆசை அதிகம். பெண்ணைப் பெற்ற பெற்றோர்களுக்குப் படித்த மருமகன் வேண்டும். அவன் சம்பாதித்தாலும் இல்லாவிட்டாலும் அதில் அக்கரை இல்லை. ஆகவே தேடிப் பிடிக்கத் தரகர் அவசியமே. அதிலும் வைதிகம் முற்ற முற்றச் சாரதாச் சட்டமும் அமுலுக்கு வரவே தரகருடைய மதிப்புக்கு அளவில்லை.

தரகனுடைய சாமர்த்தியம் யாரால் அளவிடமுடியும்? கைதேர்ந்த பம்பாய் மார்வாரித் தரகனும் நம் தென்னாட்டு வைதிகக் கலியாணத் தரகனுக்குத் தோற்றுவிடுவான். ஆளுக்குத் தகுந்த நூதன ஜாதகம்; நினைத்தபடி ஜனன தினம்; எண்ணுகிறபடி பொருத்தம்; பணத்துக்குத் தகுந்த அழகு, வயது, படிப்பு முதலியன ஏற்படும். இப்படிப்பட்ட இந்திர ஜாலங்கள் எந்தச் சித்தராலும் செய்ய முடியா. நாலு நாள் கலியாணம் ஒரு நாளிலும் ஆகும்; நூறு ரூபாய்க் கலியாணத்துக்குப் பதினாயிரம் ஆனாலும் ஆகும். ஒரே நாளில் குபேரனையும் பிச்சையாண்டி ஆக்கி விடுவார்கள். பிச்சையாண்டி குபேரனும் ஆகலாம்.

* * * *

ஆனால் தரகர்கள் படும்பாடு வெகு கஷ்டமே. எவ்வளவு பேரிடம் செல்ல வேண்டும். எத்தனை துப்பறிவு நடத்த வேண்டும். எவ்வாறு சாகசம் செய்ய வேண்டும். எத்தனை வசவுகள் சகிக்கவேண்டும். இவைகளையெல்லாம் மீறியன்றோ ஒரு மணம் நிறைவேறும். தன்னைவிடக் கைதேர்ந்த மனிதனிடம்

அகப்பட்டுக்கொண்டால் இத்தரகன் திண்டாடும் திண்டாட்டத்தை நாம் கண்ணால் காணமுடியாது. இவ்விதம் ஒரு தரகன் திண்டாடின கதையை 300 ஆண்டுகளுக்கு முந்தியிருந்த ஒரு கவி வெகு அழகாக வருணித்திருக்கிறார்.

ஒரு அரசனுக்குப் பெண் வேண்டியிருந்தது. அக்காலத்தில் அரசர்கள் இதர வகுப்பாரிலும் மணம் செய்துகொள்வார்கள். வேடர்குலத்தில் ஒரு அழகிய பெண் இருந்தாள். அவளை மணம் பேச அரசன் தூதனை அனுப்பினான். தரகனுக்குத் தூதன் என்று கண்ணியமான பெயர் உண்டு. அத்தூதன் ஒரு சிறந்த படிப்பாளி. வேடர் ஊருக்குச்சென்று அப்பெண்ணின் பெற்றோரிடம் சொன்னான். அரசனுடைய திருமுக ஓலையும் எடுத்துச் சென்றான்.

தூதன் வேடனைக் கண்டு அரசர்களுடைய குலம் கோத்திரம் பிரபாவம் எல்லாம் வெகு அழகாகக்கூறித் தன் காரியத்தை எடுத்துரைத்தான். 'சந்திரமதி சக்கரவர்த்தியாகிய அரிச்சந்திரனைப் பெறவில்லையா? தமயந்தி நளச்சக்கரவர்த்தியைப் பெறவில்லையா? சீதை இராமபிரானைப் பெறவில்லையா? துரோபதை பாண்டவர்களைப் பெறவில்லையா? அவர்களைப்போல் உன் மகளும் மன்னர் மன்னனாகிய எம்மரசனை மணந்து அரண்மனையில் இருக்கலாமே. நளனையும் தமயந்தியையும் பிணைத்த அன்னத்தைப் போன்றே நானும் வந்திருக்கிறேன். இவ் பாக்கியம் எவ்விதம் உமது சிறுகுடியாகிய வேடர்களுக்குக் கிடைக்கும்? தவறாதேயுங்கள்' என்று பன்னிப்பன்னிப்பேசினான்.

இதையெல்லாம் சிறிது நேரம் நன்றாய்க் கேட்டுக் கொண்டிருந்த வேடன், தன் இயற்கைக் கவுரவத்தை முன்னிட்டுத் தூதனை விளித்து 'மன்னர்கள் மனைவிகளை விரும்பிக்கேட்க வந்த தூதரே, உங்கள் மன்னர்கள் தங்கள்மனைவிகளைவைத்துக்கொண்டு வாழத்தகுதியுள்ளவர்களா?' எனக் கேட்கத் தூதன், ஆச்சரியப்பட்டு 'ஏன் இல்லை? அவர்கள் மிகுந்த செல்வம் படைத்தவர்கள் அல்லவா? என்றான்.

'ஆமாம், செல்வத்திற்கு என்ன குறைவு? 'நீ எடுத்துக் காட்டின அரசர்களின் செய்கைகளையே எடுத்துப் பேசுவோம்; அவர்கள் தங்கள் மனைவிகளை வைத்துக்கொண்டு செவ்வனே வாழ்ந்தவர்களா?'

தூதன், 'இவன் என்ன, நம் பேச்சினாலே நம்மையே அடக்கிவிடுவான்போல இருக்கிறது' என்றெண்ணி, 'எப்படி? சொல்லும் பார்ப்போம்' என்றான்.

வேடன்—'ஒரு அரசன் தன் மனைவியை வைத்துக்கொண்டு வாழத்தெரியாமலே கடன்கட்டுவதற்காக அவளை விற்றுவிட்டான் அல்லவா?'

'ஆமாம்;'

'ஒரு மன்னன் நடுக்காட்டில் தன் மனைவியின் 'சீலை'யைப் பாதி அறுத்துத் தான்உடுத்திக்கொண்டு அவளை அனாதியாகத் துஷ்டமிருகங்களிடை விட்டுவிட்டு ஓடிவிட்டானல்லவா?'

'ஆம்; இனியென்ன?'

'மற்றொரு அரசன் தன் அழகிய கற்புக்கரசியை வேறு ஒருவன் தூக்கிக்கொண்டுபோய்ப் பதினொன்கு வருடம் சிறையில் வைத்திருக்கவும் அழுதுகொண்டு திரிந்துகொண்டிருந்தானல்லவா?'

'சரி, இனியுமுண்டோ?'

'பல அரசர்கள் சபையிலே தம்மனைவியை இழுத்து மானபங்கம் செய்யவும், வாய்பேசாமல் ஆண்மை இன்றி மதிமயங்கி நின்றார்கள் அல்லவோ ஐந்து மன்னர்கள்!'

'அடடா, இவனிடம் நமது ஜெபம் சாயாதுபோல் இருக்கிறது' என்று தூதன் நினைக்குமளவில் வேடன்,

'இக்குணமும் அதற்கேற்ற செயலும் கொண்டவர்கள் அல்லரோ உமது மன்னர்கள்! ஆகவே மணம் என்ற பேச்சை எடுத்துவந்த வாயை உமியும், நீர் கொண்டுவந்த ஓலையைக் கிழித்துவிட்டு ஓடி விடும்' என்றான்.

மேலும் தூதன் விடாமல் 'வேடரே எங்கள் மன்னர் குலத்தை இவ்வளவு இழிவாகப் பேசும் உம் குலத்தைப்பற்றிச் சிறிது யோசியும். உங்கள் தாழ்ந்த குலத்திற்கு மேல்

குலத்தாராகிய அரசர்கள் உறவு கிடைக்குமா?' என்ருன். அதற்கு வேடன் மிகுந்த இறுமாப்புடன் 'ஓய் தூதரே! எங்கள் குலம் எப்படிப்பட்டதென்று எண்ணுகிறீர்கள்? எங்கள் குலத்தான் ஒருவன், தான் சாப்பிட்டு ருசிபார்த்த எச்சிலைப் பரமசிவன் உண்டார் என்பது அறியீரோ? அந்த ஒரு பிரீதிக்காக அப் பரமசிவனுடைய மகன் முருகவேளுக்கு நாங்கள் வளர்த்த ஒரு பெண்ணைக் கொடுத்தோம்.'

'அப்படியா'

'ஆமாம், அப்படியாயின், நாங்கள் அருமையாகப் பெற்று எடுத்த பெண்ணை உங்கள் மன்னர்களுக்குக் கொடுப்போமோ? வேறு பேச்சென்ன, பைத்தியமோ, ஓடிவிடும்' என்று பேசினுன்.

இதனைக் கேட்ட தூதன் படிப்பும் சாதுர்யமும் இவர்களிடம் செல்லாது என்று திரும்பி விட்டான்.

இவ்விதம் ருசி வாய்ந்த கதையை அக்காலத்துக் கவி வருணித்ததை இனிப் பார்ப்போம்.

விற்ற தார்?கலை பாதி யோடு
வனத்தி லே அழ விட்டதார்?
வெஞ்சி றைப்புக விட்ட தார்?துகில்
உரிய விட்டு விழித்ததார்?
உற்ற தாரமும் வேண்டும் என்றினி
மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ?
உமிய டா மணம் என்ற வாய்;கிழித்(து)
ஓலை காற்றில் உருட்டடா.
வெற்றி யாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம்;
விமல ரானவர் எமை அடுத்தினிது
எங்கள் மிச்சில் மிசைந்தபின்,
பெற்ற வேலர் தமக்கு யாம்ஒரு
பெண் வ ளர்ப்பினில் ஈந்தனம்
பெற்ற பிள்ளை கொடுப்ப ரோ?இ(து)என்?
பேய் பி டித்திடு தூதரோ!

இவ்விதம் முன் காலத்தில் தரகர்கள் பட்டபாடு இப்போதிருக்கும் தரகர்கள் படுகிருர்களா?

சந்தம்

எஸ். வி. தாமஸ், எம். ஏ.

எதுகை அமைந்தி கவிதைகளுக்கு, விசேஷமாய் பெருங்காப்பியங்களுக்கு இன்றியமையாது அவசியமான அலங்காரமல்ல; அது கயவர் மிகுந்த கலிகாலத்தில், பொருள் வழுக்கும் இசை இழுக்கும் உள்ள ஒலித்திரளை ஒப்படைக்கும்படி, கன்னபின்னக் கவிராயர்கள் கண்டு முடித்த கட்டுப்பாடே அன்றி மற்றொன்றல்ல. இந்தக் கட்டுக்கு உள்ளடங்கி, பல பொய்ப்புலவரே அன்றி சிலமெய்ப்புலவரும் எதுகைகளை உபயோகித்திருப்பதுண்டு. ஆகிலும் பாட்டுக்களிலேபாண்டியன் தமிழ் பட்டிருக்கிற இழுப்பையும் பறிப்பையும் பார்த்தால், 'ஐயோ எதுகைக்கு அடிமைப்பட்டு, என்ன பாடுபட்டுப்பாட்டுப் பாடியும், பாடின பாட்டு சொல்லும் பொருளுமற்ற கூச்சலாய் முடிந்ததே' என்று இரக்கப்படும் வண்ணமாகத், தப்பும் தவறுமாய்க் கவி முடைந்து, ஊமையன்கண்ட கனவு போல உள்ளிருப்பதை வெளியிட மதியிலாமல் திண்டாடுவதைக் காணலாம். ஆகவே சமஸ்கிருத கவிகள் சிறிய சுலோகங்களிலும் பெரிய காவியங்களிலும் எதுகையை நல்ல யுத்தி பண்ணி நீக்கி விட்டார்கள். ஏனென்றால் நாவுக்கும் பாவுக்கும் ருசிபிறக்க, செவிக்கும் தீஞ்சுவை சுரக்க, இன்பம் பயக்கும் செய்யுட் சிறப்பு, எதுகையில்நின்று ஆடாமல்,சிரிய கூரிய தீஞ்சொற்கள் செறிந்த பல்லலங்காரப் பண்களிலும், அசை ஓசை அளந்து, அளபெடைகண்டு கூட்டும் தன்மையிலும், அடிமுடிந்த இடத்தில் பொருள் முடியாமல், அடிக்கு ஊடு அடியுருவி ஓடும் இசை விசையிலும் நிற்கிறதே ஒழிய, அடிதோறும் டடம் டடம் என்று ஒலி விழுகிற ஒரோசை மொழி இசைப்பில்அல்ல. ஆகவே எதுகை நீக்கிய சந்தத்தைப் பாமரர் குற்றமெனக், கொள்வரேனும், பண்டிதர் குணமென்றேகொண்டு எதுகைக் கட்டைக் கண்டித்து, கவிப்பிணிப்பைச் சிறைவிடுப்பார் என்பது திண்ணம்.

தமிழ் மொழியின் தற்காலப் போக்கு*

கு. அ.

காலத்துக்கேற்ற நடை, காலத்துக்கேற்ற உடை, காலத்துக்கேற்ற அணியில், செல்வம் மிகுந்த தமிழ் சிறக்கவேண்டும்; மாருக, சீரழிகிறது. ஒரு புதிய நோக்கம்ஒரு புதிய போக்கில் பழந்தமிழ் உயிர்த்தன்மையுடன் ஒளிரவேண்டும்; ஆனால், முடங்கிக் கிடக்கிறது. 'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்துஇருப்பிலே இருந்து வைகைஏட்டிலே தவழ்ந்த' அந்நாள் தமிழ்த் தாய் 'தாரணி எங்கும் புகழந்திட வாழ்ந்தாள்'. தமிழ் இலக்கியம் சாயலும் சாதுரியமுங் கொண்டு மலர்ந்து மணம்வீசியது; தத்துவ ஆராய்ச்சி தழைத்தது. அறிவொளி எங்கும் பரவியது. வாழ்க்கையும் பெருகிச் செயல் நிறைந்து 'தேசம் பலவும் சென்று இசை கொண்டது;புலவரானோர், பழமையையும் புதுமையையும் பாடிக் கவிஉலகை வளம்படுத்தினர்; கவிகளின் பொருளை இணைத்துக் காட்டியும், இனிது, விளக்கியும், மறைந்த நுணுக்கங்களை வெளிக் கொணர்ந்ததன்றிச், சிறுகதை, தொடர்கதை எழுதி உரை நடைக்கும் வழிகாட்டினர்.

ஆனல், தற்போது 'கடவுள் தந்த தமிழில்' வளவிய வளர்ச்சிக்கு இசைந்த மாறுதல் இல்லை; மலர்ச்சி இல்லை. தேய்ந்து மாய்வதற்கு ஏதுவாய வறட்சியே காணப்படுகிறது. தமிழ்ப் பயிற்சியும் தளர்ந்து சுருங்குகிறது. தமிழறிவு உரம்பெறும் வகையில் கல்வித்திட்டம் வகுக்கப்படவில்லை; பழங் காவியங்ளிலும் சங்கநூல்களிலும் பொருள் உணர்ச்சி இன்றியே புகுந்துழன்று, இலக்கணக் கடலின் கரைகாணமாட்டாது தடுமாறும் தமிழ் மாணவர்நிலை இரங்கத்தக்கதே. பள்ளிப் பிள்ளைகளும் கல்லூரி மாணவர்களும், மற்றப் பாடங்களின் சுமை பளுவாய்ப் போகவே, தாய்மொழி என்ற தன்மையில் தமிழைப் புறக்கணிக்கின்றனர். தெரிந்த சிறு தமிழும் பிழையின்றிப் பேசுதற்கும் எழுதுதற்கும் பயன்படுவதில்லை.

---

* ம. தி. தா. இந்துகல்லூரி மலரில் 1940-ல் வெளியானது.

பேச்சிலே சோர்வு; சொல்லோட்டம் இல்லை; எழுத்திலே தளர்வு; எழுச்சி இல்லை. வெறும் வக்கணையே எழுதும் கடிதங்களும், 'பத்திரிகைத்' தமிழ்பாழ்மட்டும் அல்ல; பசப்புங்கூட; கருத்தை மொழிக்குமாற்றும் 'சிரமத்' துடன் சிந்தனைச் சிதர்களையெல்லாந் திரட்டித் தெளிந்த உருவாக்கி உரைக்கும் தொல்லை பெரிதே. ஆனால் முடியாத இடங்களைக்குழப்பிமறைக்க முயல்வதுகூடாது. இயற்றமிழ் ஆசிரியர் உரைகளும் 'பல்அலங்காரப் பண்பு' டன் நடைபெறுகிறதே அன்றி, அவை உயிர்த்தன்மையோடு உலவுதல் சிலரிடந்தான். தனக்கு உரிய பொருளையும் பொலிவையும் உதிர்த்துவிட்டு ஒதுங்கிய சொல்லையும் தொடரையும் மீண்டும் வழங்கவிடுதல் ஈங்கே. பொருளை நேராகப் புலப்படுத்துவதில்லை. நடந்த சிறுநிகழ்ச்சிகளை நவிலும்போதும், வளைந்து சுழன்று வட்டமிடுகின்றனர். தெளிவும் உண்மையும் இன்றியே படாடோபமாகப் பகர்கின்றனர்; மயங்கவைக்கின்றனர்; மாறுகொள்ளக் கூறுகின்றனர்.

இலக்கண வரம்பு இகந்தும் எழுதத்துணிகிறோம். 'எனது கை-என கைகள்' எனவே வரம்பாய் இருக்கவும் அதனை மீறி எழுதும் 'எனது கைகள்'. இதுபோன்ற தொடர்களை அறிஞர்களே எழுதத்தொடங்கத் தற்போது இலக்கணம் விலக்குமரக்கனி ஆகிவிட்டது எனலாம். 'எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச்செப்புதல் மரபு;' இதனையும் மறந்தோம். மொழியினின்றே நல்ல சொற்கள் பல நழுவின; புதியவை பல புகுந்தன. பல தமக்குரிய பொருளை இழந்தன. வேறு சில பிழைபட வழங்குவன. இந்நிலையில் தாய்மொழி இழிந்து மாறுதலை எண்ணிக் 'கவல்கின்றார்' இலர்; 'களிக்கின்றார்' சிலர். இவர், அதனை வளர்ச்சியின் அறிகுறி என்று வாதிப்பர். மொழி வளர்ச்சி என்றால் என்ன? பயன்மரம் போலவே மொழியும் வளர்ந்து பின் படுதலை அவர் விரும்புகின்றனரா? அதனை வளர்க்கும் சொல்லேர் உழவர் தாம் யாவர்? ஒட்டம் இன்றிப் பண்டைய நிலையில் ஒருமொழி தேங்கி நிற்குமானால் அது

வழக்கு வீழும்; செத்து ஒழியும்; உண்மையே. ஆனால், தமிழறியாப் பத்திரிகை ஒரு பால், பழம்பெரும் புலமை மற்றோர்பால், இன்று தமிழை வளர்க்கமுற்படுகின்றன.

தமிழ்ப் 'பத்திரிகை' முன்னேற்றத்தால் ஆங்கிலங் கற்றறியாத தமிழனுக்கு மிகுந்த நன்மைகள் விளைந்திருக்கின்றன; மெய்யே. உலகநிகழ்ச்சி உள்நாட்டரசியல் சமுதாய நெறி சமயப் பொது நிலைகளைத் தெரிதற்குத் தமிழ்த் தினசரிகளும் வாரம் மாத வெளியீடுகளும் பேருதவி புரிகின்றன; ஒப்புக் கொள்கிறோம். ஆனால் இவ்வுதவி ஒன்றனையே நினைந்து அதனுடன் வளர்ந்தோங்கிவரும் தீமையை மறைத்தல்கடன் அன்று. பத்திரிகை, மொழியைப், புறக்கணிக்கின்றது; போற்றுவதில்லை. செழிப்பதற்கு மாறாக அதனால் தமிழ் சீரழிகிறது. 'சிந்தனையின் வெளியீடே மொழி: அதற்கேன் இந்தப் பூசனை? கருத்துக்களைப் பரிமாறுவதற்கு உதவும் அகப்பைக்கேன் ஆராதனை' என்ற நினைவுபோலும்! ஒரு நாட்டினர்க்கு மொழியே உயிர்நாடி. அது வாழ்க்கையுடன் அருத்தொடர்பு கொண்டது. உயிர் அடங்கி நாட்டின் தனிநலம் அழிதற்கும், நமக்குரிய செந்நெறியும் தனிநடையும் மாய்தற்கும் தமிழைப் புறக்கணித்தல்போன்ற உபாயம் பிறிதொன்றும் இல்லை.

'பத்திரிகைத்' தமிழிலேயே பழகித், தமிழ் இலக்கியத்தைப் பயிலாமலேயே ஒன்றுக்கும் உதவாதது என்று அதனை ஒதுக்குகின்றனர். களவியல் உரைமீதும் விரைந்த கண்ணோட்டத்தைச் செலுத்தி, அவர் தமக்கு அது விளங்காமையின் அதனையே வெறுக்கத் தலைப்படுகின்றனர். இவர்கள் செவியும் மனமும், வனப்பும் வன்மையும் வாய்ந்த பாடலினும் உரையினும் அல்ல, பத்திரிகையின் பிதற்றல் பசப்புத் தமிழ்களில் பழக்கப்பட்டிருத்தலே அதற்கு ஏதுவாம். ஆழ்ந்த சிந்தனையும் ஆராய்ச்சியும் இன்றி, அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமாகத் தமிழ்ப் பயிற்சியே பெறாத பலரால் சமைவது அப்பத்திரிகைத் தமிழ். 'நுண்மாண் நுழைபுலம்' இன்றி, ஏற்றத் தாழ்வை ஆராய்ந்து இலக்கிய இன்பை

நுகர ஏலாது. நமது உயர்மொழியையும், அதில் அமைந்த உலகப் பொதுநூல்களையும், இவை வளர்த்த நாகரிகத்தையும், பயிற்சிக் குறைவால் வாளா கூளம் என நாமே தவிர்த்தல் நலமோ?

மேலும், அவர்கள் எளிமை எளிமை என்ற கூக்குரல் எழுப்புகின்றனர். 'மாங்காய் புளிக்கும்' 'ஸ்ரீராமருக்குச் சிடை பிடிக்குமா' 'பூனைக்குட்டி மியாவ், என்றுதான் கத்தும்' என்பன போன்ற தொடர்களால், ஆன்ற கருத்துக்களை உருவாக்கவும் சிக்கலான முடிவுகளைத்தீர்க்கவும் முயல்கின்றனர். சிலகோட்டால்சித்திரம்எழுப்புவாரைப்போல்'அந்திஆத்தங்கரை' என்று உரை ஓவியம் தீட்ட விரைகின்றனர். வழக்கு உலகியல் என்றோதி, இவர்கள் இலக்கிய மரபுகளை மீறுதலே குறிக் கோளாகக் கொண்டுளார் போலும்! பேசுகின்றபடி எழுதும் முயற்சியால் மொழிக்கு இழிவே அன்றி ஏற்றம் இல்லை. பேச்சில் வழங்கும் சொற்கள் பல உருக்குலைந்து சிதைந்தவை; திருத்தம் பெறாதவை; கொச்சை வழக்கால் வடிவம் இழந்து நிறம் மங்கியவை; இவை, பொருளைப் புலப்படுத்துவதற்கு ஒரு குறுக்குவழியே அன்றி, ஆழ்ந்த கவிதைக்கோ அகன்ற கட்டுரைக்கோ அடுக்கா. தமிழ் சிதைந்து தன் சிறப்புக்குன்றி, இழிவழக்கு என இகழ்ந்து ஒதுக்கப்படுமாயின், அதனால் நமக்குக் கேடும் வசையும் அன்றிக் கீர்த்தி என்? அயல் மொழிக்கு உரிய மரபும் நடையும் மிகப் பயின்றுவரும் இக் காலத்தில், அவை தலையெடுத்துத் தமிழின் பண்பைக் கெடுத்து விடாதபடி காத்தல் நமது கடமை.

புதியதொரு சொல்லைச் சொற்பொழிவுகளில் கேட்கும் போதும், பத்திரிகையில் பார்க்கும்போதும், அது 'சங்கமுகத் தமிழா', வேறு ஒரு குழூஉக்குறியா, அன்றி அயல்மொழியா என்று சொல்வோரும் அறியார்; கேட்போரும் அறியார். வெளித் தோன்றிய உடனே அது விரைந்து ஏற்றுக்கொள்ளப் படுகிறது; விளங்கவில்லை என்று யாரும் ஒருசொல்லைத் தள்ளுவ தில்லை. பொருளுடையதாக அதைப் போற்றுவிடில் 'அவருக்குத் தெரிந்தது தமக்குத் தெரியவில்லை எனும்' குறைவு நேரும் என்ற

நினைப்பே, ஒருமொழியில் போலிச்சொற்கள் பல புகுந்துலவக் காரணம். அபேதவாதம் சமதர்மம் பொதுஉடைமை சமஉரிமை பொதுஉரிமை: இவை பெரும்பாலும்ஒரேபொருளில் அதுவும் இன்னது என்ற தெளிவில்லாமல் இன்று வழங்கக் காணலாம். முற்காலத்திலே தமிழில் வந்து கலந்த 'திசை மொழியெல்லாம் என்னென்னவோ பெயருண்டு'. ஒவ்வொரு காலத்தும், பிறமொழிகளிலிருந்து பல காரணங்களால் சொற்கள் வந்து புகுதல் இயற்கையே. ஆனால் தமிழில் அயல் மொழிச் சொல்லை-அதற்குரியபொருளில்அல்ல-ஒவ்வாப்பொருளில்-அதனை உணர்த்தும் இயற்சொல் இருக்கவும், வழங்கவிடல் கூடாது. இவ்வழக்கு, தொல்லை தருவது, சுமையானது, பழக்கமற்றது; இன்றியமையும் இவை நடையை உயர்த்தும் என்ற தப்பு உணர்வால் வலிந்து புகுத்தப்படுகின்றன. அதனால் பொருட் குழப்பமே குடிகொள்கிறது. ஆற்றல் அழகு தெளிவு பயப்பதில் நமது முன்னோர் வழங்கிய தமிழச் சிறு சொற்களை ஒத்தன பிற இல்லை. * * *

நமது முன்னோர் 'பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த செம்மொழியே 'இப் பசுந் தமிழ்;' பேச்சிலே நடமாடிவரும் உயிர்மொழி; ஆதலின் இதற்கு அகற்சியும் வன்மையும் வருதல் சிரமம் அன்று. 'சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் திட்டேது தட்டேதுகாண்' என்ற புலவருக்குத் தமிழின் இயக்க வன்மையில் ஐயம் இல்லை.

ஒவ்வொரு நாட்டு மக்கட்கும் பரம்பரையின் பயனாய்ப் 'பிறநாட்டவர்க்கு இல்லாத சிறப்பியல்புகள் சில' வழி வழி வருகின்றன. நம்மக்கட்குரிய பாவங்களும் பண்புகளும் பழக்க வழக்கங்களும், நமது தாய்மொழியில் எழுந்த இலக்கியத்தில் முன்னோரால்இழைக்கப்பெற்றிருக்கின்றன.அவற்றுக்குஇணங்க, நாமும் மரபுவழாது மேலும் புனைந்தால், நமக்குரிய வழியில் அறவளர்ச்சியும்நாகரிகக்கிளர்ச்சியும்அடைவோம். இதற்காம்மன எழுச்சி தமிழனிடம் என்று காணும்? அன்று 'சூழ்கலி நீங்கு'ம்; 'தமிழ் மொழி ஓங்கு'ம்; ஆதலின் நமது 'உள்ளமாம் வீணை தனில் உள்ள வீடத்தனையும் மெள்ள எழுந்து மிழற்று'மா?

பூச்சியின்மேல் மோகங்கொண்ட சிறுவன்*

பி. என். அப்புஸ்வாமி பி. ஏ., பி. எல்.

[குறிப்பு:— இது ஹென்ரி பாபர் என்னும் பெரும்புகழ்பெற்ற இயற்கை நூல் விற்பன்னரின் சுயசரிதை. மகாகவியாகிய மேடெர்லிங்க் என்பவர் இவருக்கு, 'பூச்சிகளின் ஹோமர்' என்ற பட்டத்தை அளித்திருக்கிறார். இவர் மிகவும் அற்புதமான ஆராய்ச்சிகளை நிகழ்த்தியிருக்கிறார். அவற்றின் சாராம்சத்தைப் பாமரரும் அறியும்படியான எளிய நடையில் மிகவும் அழகாக வருணித்து அநேக நூல்கள் இயற்றியிருக்கிறார். பிற ஆராய்ச்சிக்காரர்களின் நூல்களிற் காணுவதுபோல இவருடைய நூலிலே பல்லை உடைக்கும் கடினமானபதம் ஒன்றும் இராது; பொருள் விளங்காமல், மயங்கச் செய்யும், டாம்பீகமான வாக்கியமும் இராது. இவர் பிரான்ஸ் நாட்டினர்.]

இந்தக் காலத்திலே எல்லாப் பாரத்தையும் வமிசபரம்பரையின்மேல் போட்டுவிடுகிறார்கள். ஒரு மனுஷ்யனிடத்திலே ஏதாவதொரு விசேஷமான குணமோ அல்லது தோஷமோ காணப்பட்டாலும் சரி, அல்லது ஒரு பிராணியினிடத்திலே ஏதாவது அசாதாரணமான குணதோஷங்கள் காணப்பட்டாலும் சரி, 'இந்த விசேஷத்தன்மைகள் எல்லாம் முன்னோர்களிடமிருந்து வமிசக்கிரமத்தில் பெறப்பட்ட தன்மைகள். அந்தப் பரம்பரையானது இத்தகைய தன்மைகளைப் பல தலைமுறைகளாக வளர்த்துப் பெருக்கி வந்திருக்கவேண்டும். அதனால்தான் இத்தன்மைகள் இந்த அளவில் தோன்றுகின்றன' என்று சிலர் சொல்லிவருகிறார்கள். இது ஓரளவு உண்மையாயினும், முற்றிலும் உண்மையென்று நான் ஒப்புக்கொள்ளவில்லை. என்னுடைய சொந்தக் கதையைச் சொல்லுகிறேன். சொன்னால், எனக்குப் பூச்சிகளின் மேலுள்ள மோகத்தில் ஒரு லவலேசமேனும் என்னுடைய முன்னோர்களிடமிருந்து நான் பெறவில்லை என்பது உங்களுக்கே தெரியவரும்.

என்னுடைய தாய்வழியில் என் பாட்டனுக்காவது பாட்டிக்காவது பூச்சிகளைப்பற்றித் துளிகூடச் சிரத்தை

* கலைமகள் 6-ம் தொகுதியில் வெளியானது.

கிடையாது. என்னுடைய பாட்டனரை நான் நேரில் பார்த்ததில்லை. ஆயினும் அவரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவருக்குப் பிழைப்பே திண்டாட்டத் திலிருந்தது. அப்படியிருக்கும்போது அவர் பூச்சிகளைக் கவனிப்பதெங்கே? அவர் பூச்சியைப்பற்றிக் கவனித்துவந்த தெல்லாம் எந்த மாதிரி என்றால், எப்பொழுதாவது ஏதாவது ஒரு பூச்சியைக் கண்டால் அதைத் தன் ஜோட்டுக்காலால் மிதித்து நசுக்கிவிடுவார். இதைத்தவிர அவர் வேறுமாதிரியில் பூச்சிகளைக் கவனித்தது இல்லை. என் பாட்டிக்கு எழுத்துவாசனை என்பதே கிடையாது; விஞ்ஞான சாஸ்திரம் என்னவானல் என்ன? பூச்சிகள் என்னவானல்தான் என்ன? அவைகளைப்பற்றி யாதொரு விதமான கவலையும் அவளுக்குக் கிடையாது. எப்பொழுதாவது சமைப்பதற்காகக் கீரையைக்கழுவும்போதோ அல்லது நறுக்கும்போதோ அதில் ஏதாவது புழுவாவது கம்பளிப் பூச்சியாவது ஒட்டிக்கொண்டிருக்கக் கண்டுவிட்டால், அவள் பயந்து நடுநடுங்கி, மிகவும் அருவருப்புடன் அதை ஒரே வீச்சாகத் தூரத்தில் எறிந்துவிடுவாள்.

என்தகப்பனைப்பெற்ற பாட்டனர் பாட்டியாரைஎனக்கு நன்றாகத் தெரியும். என் தாய்தகப்பன்மார் மிகவும் ஏழைகளாக இருந்தார்கள். என்னைச் சரியாகப் பேணிப் பாதுகாத்து வரமுடியாதவர்களாக அவர்கள் இருந்தபடியால், எனக்கு ஐந்து அல்லது ஆறுவயதாக இருக்கும்போது நான் அவர்களை விட்டுப் பிரிந்துவிட்டேன். பிறகு என் பாட்டன் பாட்டிகளோடு அவர்கள் வீட்டிலேயே வளர்ந்து வந்தேன். அவர்கள் பரம ஏழைகள்தான். ஆனாலும் அவர்கள் நாட்டுப்புரத்திலே கொஞ்சம் பூமியைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு ஏழைக் குடித்தனம் செய்துவந்தார்கள். அவர்களுக்கு ஓர் எழுத்துக்கூடப் படிக்கத் தெரியாது. அவர்கள் ஆயுளில் புத்தகம் என்பதையே அவர்கள் திறந்து பார்த்தது கிடையாது. என் பாட்டனருக்கு ஆடுகளைப்பற்றியும் மாடுகளைப்பற்றியும் எவ்வளவோ விஷயங்கள் தெரியும். வேறெந்த விஷயத்தைப்பற்றியும் அவருக்கு யாதொன்றும் தெரியாது. ‘உன்னுடைய வமிசத்தில் பிறந்தவன்

கண்டு களித்தான். ஒவ்வொரு கோட்டிலும், வளைவிலும், புள்ளியிலும் இருக்கும் உயிர்த் தத்துவத்தையும், அந்தரங்க மர்மத்தையும் ஆராய்ந்து அறிந்த பின்புதான் 'டேவிட்லோ' 'மாலி' முதலியோர் படங்களைப்போல் சித்தரிக்க முடியும்.

ஆகவே, ஒரு நாட்டிலுள்ள ஹாஸ்ய உணர்ச்சியானது அந் நாட்டின் கலைஞானத்திலிருந்தும், அறிவுத்தெளிவின் மேம்பாட்டிலிருந்தும், முகிழ்க்கும் அரும்பு என்பது தெளிவாகும். அரும்பின் மணமும் அழகும், கலைச் செழிப்பையும் நாட்டின் நாகரிகத்தையும் பொறுத்தவை. கலைச்செல்வமும், நாட்டு வளமும் ஒருங்கே படைத்த தமிழ் மக்கள் ஹாஸ்யத்தை ஒரு கலையாகவே பாராட்டி ஆர்வத்தோடு வளர்த்து வந்தனர். வறுமையால் தளர்ச்சியுற்ற தற்காலத்திலேயும், நம் நாட்டில் சிரிப்புணர்ச்சி அறவே வறண்டுவிடவில்லை. 'நாடோடி'த் தமிழில் ஹாஸ்ய உணர்ச்சி ததும்பும் பாடல்களும் பல இருக்கின்றன. 'அக்காளைக்கட்டின அத்தானை' இலக்காகவைத்து நாடோடி மக்கள் இயற்றிய 'போனமச்சான் திரும்பிவந்தான் பூமணத்தோடே' என்பது போன்ற பாட்டுகள் பல. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுகிற 'அழிப்பாங் கதை'கள் பல. தொன்று தொட்டுத் தமிழ்ப் பாட்டி பேரனுக்குச் சொல்லிவரும் வேடிக்கைக் கதைகளும் பலப்பல.

கணவன் விருந்தாளியோடு உணவருந்திக் கொண்டிருக்கிறான்; அப்பொழுது தன்னுடைய முரண்பாட்டை வெளிப் படையாகக் காட்ட விரும்பிய மனைவி, குழம்புச் சட்டியைக் கணவன் தலைமேல் போட்டு உடைக்கிறாள். சட்டியின் தூர் மாத்திரம் உடைந்ததே யொழிய, சட்டியின் வாய் கணவன் கழுத்தில் ஆரமாக அமைந்தது. இந்த விநோதக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த விருந்தாளி பாடுகிறார்;

'விளைப் உடைந்த சட்டி வேணதண்டு என்தலை மேல்;
பூணாரம் பூண்ட புதுமைதனைக்கண்டதில்லை.' என்று.

பத்ரகாளிபோல் முழங்கிக்கொண்டு சட்டியை உடைத்த மனைவியின் செய்கையாவது, விருந்தாளிமுன் சட்டியோடு

மானமும் உடைபட்டு வெட்கித் தலைகுனிந்த கணவனுடைய நிலைமையாவது விருந்தாளியான கவிஞனுக்குப் பரபரப்பைக் கொடுக்கவில்லை; ஆனால், தன் மனைவி தன் தலைமேல் கலைத் திறமையில்லாமல் 'வினைய்' உடைத்த சட்டிகளையும், தன் நண்பனின் மனைவி அவனுக்குக் கைத்திறமையோடு பூணாரம் பூட்டிய புதுமையினையும் ரஸித்துப் பாடுகிறார். அசம்பாவிதக் காட்சியிலிருந்து முளைத்தெழுந்த ஹாஸ்ய ரத்னம் என்றே இந்தக் கவியைப் பாராட்ட வேண்டும்.

கம்பர் போன்ற மகாகவிகளுடைய ஹாஸ்யம், கேவலம் வார்த்தை விளையாட்டுகளையும் அசம்பாவிதக் காட்சிகளையும் அடிப்படையாகக் கொண்டதன்று. மனிதனுடைய குண குணங்களையும், வாழ்க்கைத் தத்துவத்தையுமே பொருளாகக் கொண்டது. உண்மையில் சோகத்தின் எல்லையைக் கண்ட பின்னரே ஹாஸ்ய ஞானம் பரிபூரண நிலைமையை அடைகிறது. கண்ணீரை வடித்து எடுத்து ஹாஸ்யத்தைத் தயார் செய்யும் ரஸ வாதத்தில் கம்பர் கைதேர்ந்தவர். மனிதனுடைய காதல்,சோகம், வீரம், இறுமாப்பு இவைகளெல்லாம் ஊடுருவி மறைந்துகிடக்கும் ஹாஸ்யதத்துவத்தைக் கம்பர் ஷேக்ஸ்பீயர்போன்ற மகாகவிகள் தங்கள் கதாபாத்திரங்களின் வாயிலாக வற்புறுத்தியிருக்கிறார்கள். வாழ்க்கையே ஒரு வேடிக்கை நாடகம்; மனிதன் ஒரு கூத்தாடி. வாழ்கையையும் மனிதனையும் படைத்து, அழிக்கும் கடவுள் ஒரு பெரிய ரஸிகர் என்ற சித்தாந்தத்திலேதான் உயர்தர ஹாஸ்யம் பிறக்கிறது.

வாழ்க்கையிலுள்ள உல்லாச ரஸத்தை யிழந்து, போர்வாய்ப் பட்டு அல்லலுறும் மனித சமுதாயத்திற்கு அமைதியும் சாந்தமும் ஏற்படவேண்டுமானால், அண்டபகிரண்டங்களெல்லாம் குலுங்கும்படியாக மனிதன் சிரிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

> சீராரூர் மேவும் சிவனே! சிரிப்பன்றோ
> நேராரூர் அட்ட நிலை?

என்றவாறு, கவலை, நோய், டாம்பீகம், தோரணை முதலிய தீய சக்திகளை யெல்லாம் நமது கம்பீரச் சிரிப்பினால் நாம் வெல்ல வேண்டும். இன்றேல்,

> நகல் வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
> பகலும்பால் பட்டன்று இருள்.

நகைச் சுவை

எஸ். மகாராஜன். பி எஸ் சி; பி. எல்.

இலக்கியம், சங்கீதம், அபிநயம் சொல்லிவைக்கப் பாடசாலைகளிருக்கின்றன. ஏன், குட்டையாய் இருப்பவர்களை நெட்டையாக்குவதற்கு உபாயங்கள் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. மல் யுத்தம், முஷ்டி யுத்தம் சொல்லிவைக்கக் கல்லூரிகள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் ஹாஸ்யம் சொல்லிக் கொடுப்பதற்கோ ஆசிரியர்களில்லை; கல்லூரிகள் இல்லை. இந்த நிலைமைக்குக்காரணம் நம்மவர்களுக்கு ஹாஸ்யத்தைப் பற்றியுள்ள தப்பான கொள்கைதான். ஒருவன் பிறவியிலேயே விகடனாய்ப் பிறக்கலாமேயொழிய, கல்வியினால் அவனை ஹாஸ்யக்கலைஞன் ஆக்கமுடியாது என்று நினைக்கிறார்கள். ஆகையால், வேடிக்கை யென்றால் என்ன? அது எப்படி மனிதனுக்குச் சிரிப்பூட்டுகிறது? சிரிப்பின் ரகஸ்ய மென்ன? தத்துவமென்ன?என்பதையெல்லாம்ஆராய்ச்சிசெய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

மனிதன் மலைகளிலும் வனங்களிலும் காட்டு மிராண்டியாகத்திரிந்து கொண்டிருக்கும்பொழுதே அவனுக்கு ஹாஸ்ய உணர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். பேசக் கற்பதற்கு முன்னமேயே ஆதிமனிதன் சிரிக்கக் கற்றுக்கொண்டான். காட்டு மிருகங்களோடு சண்டை செய்து ஜெயிக்கும்போது. அவனுக்கு உண்டான உற்சாகத்தை,அவன் வார்த்தைமூலமாகக் காண்பிக்கமுடியாமல், இடிமுழக்கம்போன்ற சிரிப்பிலே காண்பித்தான். புலிமேல் குறி வைத்து எய்த அம்பு, குறி தப்பி மற்றொருவன் மார்பிலே பாய்ந்து அவன் துடிக்கும்போது, எய்தவன்வயிறு குலுங்கும்படியாகச் சிரிப்பான்.ஹூணஅரசன் ஒருவன் மலைச்சிகரங்களிலிருந்து யானைகளை உருட்டிவிட்டு, அவைகள் வீறிட்டுக்கொண்டு அலறி விழுந்துஇறப்பதைக்கண்டு, மனங்களிப்பான். ஆகவே, அநாகரிக மனிதனுடைய ஹாஸ்ய உணர்ச்சி குரூரமானது.

நாகரீகம் முதிரமுதிரநாம்மற்ருெருவனுடைய அவஸ்தையை ரஸிக்கும் இயல்பைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறோம். ஒருமனிதனுடையகால்துண்டிக்கப்படவே அவன் நொண்டி நொண்டி நடக்கும்போது நமக்கு அவ்வளவு வேடிக்கையாகத் தோன்றுவதில்லை. ஆனால், ஒருவன் கல் தடுக்கி, கீழே விழுந்து விட்டால் நாம் அவனைப் பார்த்துச் சிரிக்கத்தான் செய்கிறோம். அவஸ்தையில் இல்லை; ஆனால் * அவஸ்தையின் சாயலிலேயும், அவஸ்தையின் பாவனையிலேயும் நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இது மாத்திரமன்று, அசம்பாவிதமான காட்சி ஒவ்வொன்றிலேயும் நமக்கு நகைச் சுவை தட்டுகிறது. கோமாளி தலைகீழே நடந்து செல்வதைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது; தண்ணீர்க்குடம் கீழே விழுந்து 'சப்பழிந்து' போனால் நமக்கு வேடிக்கை தோன்றுகிறது; வேட்டி யுடுத்தினவன் குல்லா இன்றி, தொப்பி வைத்துக் கொண்டு சென்றால் விநோதமாயிருக்கிறது.

செய்கையில் மாத்திரமன்று, வார்த்தையிலும் படம் எழுதுவதிலும் விநோதமிருப்பதை மனிதன் படிப்படியாக உணர ஆரம்பித்தான். வார்த்தைக்குச் சிரிக்க வைக்கும் வன்மையுண்டு என்று கண்டுபிடிக்கப் பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் கழிந்தன. ஒவ்வொரு வார்த்தையின் முழுப் பொருளையும், அழகையும் உணர்ந்தபின்தான், அதை அசந்தர்ப்பமாக உபயோகிக்கும்போது உண்டாகும் வேடிக்கையை நாம் அறிய ஆரம்பிக்கிறோம். தமிழ் மொழியை அறைகுறையாகத் தெரிந்த அந்நியன் 'கொஞ்சக் குதிரைக்குச் சின்னப் புல் போடு என்று சொன்னான். 'சின்னக் குதிரையையும்' 'கொஞ்சப்' புல்லையும்' அனுபவித்த நாம்தான் அந்த அந்நியனைக் கண்டு சிரிக்க முடியும். மேற் சொல்லிய விதமே '† நையாண்டி'ப் படம் எழுதும் கலை வளர நெடுங் காலம் சென்றது. மனிதனுடைய உருவத்தை இயற்கையிலுள்ளவாறு உண்மையோடு வரையக்கற்றபின்னரே, கலைஞன் காதுமூக்குகளை நீட்டி நிமிர்த்து அவனுடைய கோணல் பார்வையிலே ஏற்படும் விநோதத்தைக்

*Shadow & Feighning in Pain †caricature.

ஒருவன் ஒன்றுக்கும் உதவாத சின்னஞ்சிறு பூச்சிகளைக் கவனிப்பதில் பொழுது போக்குவான்' என்று யாராவது அவரிடம் சொல்லியிருந்தால் அவர் மிகவும் ஆச்சரியமுற்று அப்படியே பேச நாவெழாமல் ஸ்தம்பித்துப் போயிருப்பார். அப்பேர்ப்பட்ட பயித்தியக்காரன் நான்தான் என்ற சந்தேகம் அப்போது அவருக்குத் தோன்றியிருக்குமானால், நன்றாக எனக்குக் கன்னத்தில் அடி கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'ஏண்டா! மடப்பயலே! அப்படி முட்டாள்தனமாகவா பொழுது போக்கலாமென்று எண்ணுகிறாய்? மடையா யோசனையைப்பார், யோசனையை!' என்று ஒரே பெருங்கூச்சல் போட்டிருப்பார். என்பாட்டி — அவள் பரம சாது, மிகவும் அப்பாவி. அவள் அழுக்குத் துணிகளைத் துவைப்பாளா, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுவாளா, வீட்டுச் சமையல் வேலையைச் செய்வாளா, நூல் நூற்பாளா ஆடு மாடு கோழிகளைக் கவனிப்பாளா, மோர், பால், தயிர், நெய், வெண்ணெய் முதலிய பண்டங்களைப் பத்திரப்படுத்திவைப்பாளா, ஊறுகாய்ச் சாடிகளைத் துடைத்துக்காற்றாட வைத்து மூடியெடுத்து வைப்பாளா, அவள் என்னதான் செய்வாள் பாவம்? இந்தக் காரியங்களுக்கே அவளுக்கு நேரம் அகப்படாமலிருக்கும்பொழுது, வேறு சங்கதிகளைப் பற்றி நினைப்பதற்கு அவளுக்கு நேரமேது? சிற்சில நாட்களில், சாயங்கால நேரத்தில், வீட்டு வேலைகளெல்லாம் முடிந்தபிறகு, நாங்கள் எல்லாருமாக நெருப்பின்முன் உட்கார்ந்து கொண்டு குளிர் காய்ந்து கொண்டிருக்கும் பொழுது, மனமிருந்தால் ஏதாவது எங்களுக்குக் கதை சொல்லுவாள்; பக்கத்திலே நாணல் காட்டில்உள்ள ஓநாயைப்பற்றி எத்தனையோ கதைகள் சொல்லியிருக்கிறாள். அந்தக் கதைகள் கேட்பதற்கு மிகவும் பயமாயிருக்கும். எங்களுக்கு பயிர்க் கூச்செறியும்; நாங்கள் பயத்தால் ஒருவரையொருவர் கட்டிக்கொள்வோம். அந்த ஓநாயை நேராகக் கண்ணால் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு நிரம்ப இருந்தது.

ஆனால் அதைப் பார்க்கும் அதிர்ஷ்டம் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. 'பாட்டியம்மா! நீ எனக்கு எவ்வளவு செய்திருக்கிறாய்! நான் உனக்குக் கடன்பட்டிருப்பது அல்ப சொல்பமான அளவில் அல்லவே. என் குழந்தை வயதிலே நான் மிகப் பெரிய துக்கமென்று எண்ணிப் பாராட்டிய துக்கத்தை யெல்லாம் உன் மடியில் தலைவைத்து அல்லவோ ஆற்றியிருக்கிறேன்! எத்தனை தடவை நீ என்னைத் தேற்றிச் சமாதானம் செய்திருக்கிறாய்! உன்னிடமிருந்து உன் உடலின் இயற்கையில் சிறிது எனக்குக் கிடைத்திருக்கலாம். ஊக்கத்துடன் வேலை செய்வதில் உனக்குள்ள ஆசையையும் நீ எனக்குச் சிறிது கொடுத்திருக்கலாம்; ஆனால் எனக்குப் பூச்சிகளின் மேலுள்ள மோகத்தை நீ எனக்குத் தரவில்லை என்பது திண்ணம். உன்னிடம் இருந்தாலல்லவோ எனக்கு நீ தருவதற்கு?'

இந்த மோகத்தை எனக்கு அளித்தவர்கள் என் தாய் தந்தையர்களுமில்லை. தாய் எழுதப் படிக்கத் தெரியாதவள். என் தகப்பனார் தம்முடைய சிறு வயதில் ஏதோ ஒரு பள்ளிக்கூடத்துக்குப்போய் வந்துகொண்டிருந்தாராம். அதனால் அவருக்கு கொஞ்சம் எழுத்து வாசனை உண்டு. கொஞ்சம் படிக்கத் தெரியும்; கொஞ்சம் எழுதவும் தெரியும். அவருக்கு வீட்டுக் கவலையே பெருங்கவலையாகிவிட்டது. குடித்தனத்தை நடத்துவதிலேயே தம் முழுக்கருத்தையும் அவர் செலுத்தவேண்டிவந்துவிட்டதால், மற்றப் பூலோக விஷயங்களைக் கவனிப்பதற்கு அவருக்கு ஒழிவுமில்லை, மனமுமில்லை. குடும்பக் கவலையே அவர் முழுமனத்தையும் கவர்ந்து கொண்டது. பூச்சிகளைப் பிடித்து, நானாகத் தனியே கவனித்துவரும் போதாவது என்னிடம் ஏதாவது ஒன்றிரண்டு உற்சாக வார்த்தைகளைச் சொல்லி எனக்கு ஊக்கம் அளித்தாவது வந்தாரா? அதுவும் கிடையாது. நான் ஏதாவது ஒரு பூச்சியைப் பிடித்து அட்டையில் குத்திவைத்துக் கொண்டிருக்கும்போது பார்த்து விட்டாரானால் செம்மையாக ஒன்றிரண்டு அறை கிடைக்கும். அவரிடமிருந்து எனக்குக் கிடைத்த தூண்டுதல் எல்லாம் இந்தமட்டே தவிர வேறல்ல.

இப்படியிருந்தும்கூட, நான் மிகச் சின்னஞ் சிறுவயது முதலே 'இது என்?', 'அது எப்படி?' என்று விசாரிக்கத் தொடங்கிவிட்டேன். இந்த மாதிரியாக நான் முதன் முதலில் செய்து வந்த ஆராய்ச்சி ஒன்று என் நினைவிற்கு வருகிறது. அதைக் கேட்டால் உங்களுக்கு வேடிக்கையாயிருக்கும். எனக்கு ஐந்தாறு வயதிருக்கும். அப்பொழுது ஒரு நாள் காலையில் எங்கள் வீட்டு வாயிலில் ஓர் அழுக்குச் சட்டையைப் போட்டுக்கொண்டு நின்று கொண்டிருந்தேன். காற்று வலவலவென்று அடித்துக் கொண்டிருந்தது. சூரியன் மிகவும் ஜாஜ்வல்லியமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதனுடைய காந்தியானது என் மனத்தைக் கொள்ளைகொண்டுவிட்டது. விளக்கைக்கண்டு மயங்கி உயிரைவிடும் விட்டிலுங்கூட நான் அன்று இளஞ் சூரியனைக் கண்டு மயங்கியதைப்போல் மயங்காது. நான்அங்கே நின்று, ஆநந்தத்தைப் பருகிக்கொண்டிருக்கும்போதே என் மனமானது என்னைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தது; 'இந்தப் பெரும் பிரகாசத்தை, இந்தச் செக்கச் சிவந்த சோதியை, இவ்வழகிய ஒளியை, இவ்வினிய காந்தியை, இந்த ஆனந்த ஒளியின் வெள்ளத்தை நீ எதன் வழியாக அநுபவிக்கிறாய்? உன்வாயின் வழியாகவா?' என்பதுதான் அந்தக் கேள்வி. இதைப் படிக்கும் நண்பனே, இதைப் பார்த்துச் சிரியாதே. இது உண்மையான ஆராய்ச்சிக் குறு குறுப்பே தவிர, வேறல்ல. நான் என் வாயை நன்றாகப் பிளந்து கொண்டேன். என் கண்களை மூடினேன். என் எதிரில் தோன்றிய சோதி மறைந்துவிட்டது. என் கண்களைத் திறந்தேன். வாயைக் கெட்டியாக மூடினேன். அச்சோதியானது என் கண்ணெதிரே நின்று தாண்டவமாடிக் கொண்டிருந்தது! இந்தச் சோதனையை நான் அப்பொழுதே பலமுறை செய்து பார்த்தேன். ஒவ்வொரு முறையும் பயன் ஒரே விதமாகத்தான் இருந்தது. சூரியனைக் கண்ணால் தான் பார்க்கிறோம் என்பதை அறிந்து கொண்டேன். ஆகா! என்ன அருமையான ஆராய்ச்சி! அன்று சாயங்காலம் இந்த ஆராய்ச்சியைப்பற்றி வீட்டிலுள்ளோர் அனைவரோடும் பெருமையடித்துக் கொண்டு பேசினேன்.

என்னுடைய அப்பாவித்தனத்தைக்கண்ட என் பாட்டி, அன்பு ததும்பும் கண்களோடு என்னைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டாள். மற்றவர் அனைவரும் சிறிதேனும் இரக்கமின்றிப் பரிகாசமாய்ச் சிரித்தார்கள்.

வேறோர் ஆராய்ச்சி: சாயங்காலம், அஸ்தமிக்கும் தருவாயில் மாலைப்பொழுதில் எங்கும் நிச்சப்தமாயிருந்தது. அப்பொழுது, அதனிடத்தே மெதுவான மெல்லிய ஓசை ஒன்று இடை யிடையே உண்டாகிக் கொண்டிருந்தது. அவ்வினிய மெல்லிய பாட்டோசை என்காதுக்கு வந்து எட்டியதை நான் பல நாட்களாகக் கவனித்து வந்தேன். ‘இந்த ஓசை இனிமையாயிருக்கிறது. இந்த ஓசைக்குக் காரணம் என்ன? இதை உண்டாகச் செய்கிறது எது? பகல் முழுதும் சிறகு விரித்துப் பறந்தோடி, மாலை நேரத்தில் தன் கூட்டில் வந்து தங்கிக் களைப்பாறும் சிறு குருவியா இப்படிக் கத்துகிறது? இல்லையானால், வேறு எது? இதன் உண்மை என்னவென்று பார்க்கவேண்டும்; தாமதிக்கலாகாது’ என்று எண்ணினேன். ‘இந்த மாலை வேளையில் காட்டுக்குள்ளிருந்து கொடிய ஓநாய் ஒன்று அங்கேவந்து உலாவிவருகிறதுஎன்று சொல்லுகிறார்களே. போகலாமா? அதனால் என்ன? போவோம். ஆனால் அதிக தூரம் போகவேண்டாம். அதோ இருக்கிறதே அந்த இருண்ட புதர்; அதற்கு அப்புறம் இருக்கிறதே ஓர் இருட்டிடம் அதுவரை போய்ப்பார்ப்போம். அதற்கப்புறம் ஒரு அடிகூட எடுத்து வைக்க வேண்டாம்!’ என்று பலவாறாக யோசித்தேன்.

நான் அங்கே போய் நின்று கொண்டு வெகுநேரம் கவனித்துப் பார்த்தேன். ஓசை ஒரு புறமிருந்து கேட்கும். கிட்டப்போகலாமென்று அசைவேன். என் காலடிபட்டுப் புதர் சிறிது சலசலக்கும். ஓசை உடனே நின்றுவிடும். சிறிது நேரம் கழித்து மற்றொருதிக்கிலிருந்து அவ்வோசை கேட்கும். இப்படி இரண்டு மூன்று நாட்கள் கவனித்துப் பார்த்தும் ஒன்றும் பயனில்லை. நானும் விடுவதில்லை என்று கவனித்து

வந்தேன். மறுநாளே எனக்குப் பயன் கிடைத்தது. நான் புதரிடையில் பதுங்கி நின்று கொண்டிருந்தேன். என் பக்கத்தில் ஓசை; என் கையை வீசி ஒரு பிடி; அகப்பட்டுக் கொண்டார் விட்டிலாப்பட்டர்! அது என்னவென்று வெகு சாக்கிரதையாய்க் கவனித்தேன். அது ஒரு பக்ஷி அல்ல என்பதை உடனே தெரிந்து கொண்டேன். அது நான் முன்னமே மிகவும் நன்றாக அறிந்துள்ள ஒரு அல்பப்பிராணி. அதன் பின்கால்கள் சுவையாயிருக்கும் என்று என் நண்பர்கள் சொல்லக்கேட்டு, நான் அது போன்ற எத்தனையோ பிராணிகளைப் பிடித்து, அதன் பின் கால்களைப் பிய்த்துச் சுட்டுத்தின்றிருக்கிறேன். அது ஒரு சாமானியமான தத்துக்கிளி; வேறொன்றுமில்லை. இருந்திருந்து இதைத்தானா கண்டுபிடித்தேன் என்ற அவமானம் எனக்கு ஏற்பட்டபோதிலும், 'நான் இதுவரை அறியாத புதிய விஷயம் ஒன்றை, அதாவது இந்தத் தத்துக்கிளிதான் அந்த இனிமையான பாட்டைப் பாடிற்று என்பதை நான் அறிந்துகொண்டேனல்லவா?' என்று எண்ணி மகிழ்ந்தேன். இந்த ஆராய்ச்சியைப்பற்றி நான்வீட்டில் ஒருவருக்கும் சொல்லவில்லை. ஏனென்றால், என் முதல் ஆராய்ச்சியை அவர்களிடம் தெரிவித்தபோது அவர்கள் மிகவும் பரிகாசமாகச் சிரித்ததை எண்ணி எண்ணி என்மனமானது இன்னும் புண்பட்டுக் கொண்டுதானிருந்தது.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வயலில் என்ன அழகழகான புஷ்பங்கள்! கொத்துக்கொத்தாய் அவைபூத்திருக்கும் அழகைக் கண்டு என் மனமானது ஆநந்தத்தை அடைந்து கொண்டேயிருந்தது. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் அவை தங்களுடைய கருநீல விழிகளைத் திறந்து என்னைப்பார்த்து முகமலர்ந்து புன்சிரிப்புக் கொள்வதுபோல் எனக்குத் தோன்றிற்று. அவற்றின் அழகை நான் சிலகாலம் பருகினேன். சிலகாலத்துக்குப் பின்பு, அந்தப் பூக்கள் இருந்த இடத்தில் அவைகளைக் காணவில்லை. அவற்றுக்குப் பதிலாகக் கொத்துக் கொத்தாகச் சிறு பழங்கள் இருப்பதைக் கண்டேன். அந்தப்

பழம் ஒன்றைப் பறித்துத் தின்று பார்த்தேன். நன்றாகவே இல்லை. அவற்றுக்குள்ளே கொட்டையோ விதையோ ஒன்றும் காணப்படவில்லை. அவை என்ன பழங்களாயிருக்கலாமென்று தெரியவில்லை. திகைத்துக்கொண்டிருந்தேன். கோடைக்காலம் முடிந்த சமயம். என் பாட்டனுர் ஒரு மண்வெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு வந்தார். என்னுடைய வயலை வெட்டி வெட்டித் தலை கீழாகப் புரட்டினுர். பூமிக்கு அடியிலிருந்து கூடை கூடையாக, சாக்குச் சாக்காக, ஒருவகை உருண்டைக் கிழங்கு அகப்பட்டது 'ஆகா! இதுவா? இந்தக் கிழங்கை நாம் பார்த்திருக்கிருேமே. வீட்டில் நிறைய இந்தக் கிழங்கு இருக்கிறதே; நானே இதை வேகவைத்தும் சுட்டும் தின்றிருக்கிறேனே. இது உருளைக் கிழங்கல்லவோ?' என்று எண்ணினேன். அதன் கருநீல நிறமுள்ள பூக்களும், சிவப்பு நிறமுள்ள பழங்களும் என்றைக்கும் மாருமல் என்மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன.

இவ்வாறுகக் குரங்குச் சுபாவமுள்ள நான் எனது ஆருவது வயதிலேயே, என்னையறியாமல் பலவிதமான ஆராய்ச்சிகளைச் செய்துவந்தேன். செடிகளையும், கொடிகளையும், புஷ்பங்களையும், பூச்சிகளையும், பிராணிகளையும் நான் மிகவும் கூர்மையாகக் கவனிக்கும் பழக்கத்தை அடைந்து வந்தேன். வெண்ணிறமான வண்ணுத்திப்பூச்சி முட்டைக்கோசுச் செடிகளையே எப்படித் தேடிச்செல்லுகிறதோ, செந்நிறமான வண்ணுத்திப்பூச்சி முட்செடிகளையே எப்படித் தேடிப்போகிறதோ, அதைப் போலவே என்னுடைய மனமும் பூவையும் பூச்சியையுமே நாடிச்சென்றது. நான் அவற்றை நுணுகிநுணுகிநோக்கினேன்; துருவித்துருவி ஆராய்ந்தேன். அதனுல் சிருஷ்டிதத்துவமென்னும் பெருங்கடலின் ஓரத்தில் சிறிது அறிந்து கொண்டேன். எனக்கு இந்தக் குறுகுறுப்பும் ஆராய்ச்சிக்குணமும், கூரிய கவனமும் எங்கிருந்து வந்தன? யாருக்குத் தெரியும்? என்னுடைய வமிசபரம்பரையைக் கேட்டுப் பார்த்தேன்! அதற்கே சொல்லத் தெரியவில்லை.

தமிழரும் யவனரும்

புரொபஸர் க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம்; ஏ.

'யவனர்' என்னும் சொல் தமிழில் காலத்துக்கேற்பப் பொருள் வேறுபட்டுவந்ததாகத் தெரிகிறது. 'ஐயோனியா' என்பது கிரேக்கர் குடியேறின நாடுகளின் ஒரு பகுதி. 'யவனர்' என்னும் சொல் முதல் முதல் வடமொழியில் கிரேக்கரையே குறித்தது; இது பதஞ்சலி பகவானுடைய மகாபாஷியத்தால் வெளியாகிறது. நாளடைவில் இந்தச்சொல் மேல் நாட்டிலிருந்து வந்த மிலேச்ச ஜாதியார் அனைவரையும் குறிக்க உபயோகப் படுத்தப்பட்டது. பாரஸிகர்களும் துலுக்கரும்கூட யவனரென்று அழைக்கப்பட்டார்கள். தமிழில் முதல்முதல் யவனரெனப் பட்டவர் ரோமாபுரியின் சாம்ராஜ்யத்தின் கீழ்ப்பட்டு எகிப்து முதலிய தேசங்களில் வாசம் செய்து கொண்டு தென்னிந்தியா வுடன் கப்பல் வியாபாரம் நடத்திவந்த கிரேக்கரையே குறித்ததாகக் கொள்ளலாம். சில அராபியரும் வந்து வியாபாரம் செய்து வந்தமையால் இவர்களுக்கும் யவனர் என்ற பெயர் வழங்கியிருத்தல் வேண்டும். இந்த அயல் நாட்டு வியாபாரிகள் அனைவரையும் நம் முன்னோர் யவனரென்றே கூறினர். சோனகர் என்பது 'யவனர்' என்னும் சொல்லின் திரிபேயொழிய வேறில்லை.

வியாபாரத்திற்காக வணிகர்களும் மாலுமிகளும் முதல்முதல் வந்தால், பிறகு அவர்களைப் பின்பற்றி வேறு தொழிலாளிகளும், மற்றும் ஊழியம் செய்தோ போர் புரிந்தோ ஜீவனம் தேடும் ஜனங்களும் வருவது சகஜம்; நம்நாட்களில் 'தத்துவஞான'த்தைப் பரவச்செய்ய வரும் மிஷனரிகள் அதேமாதிரிதான் வியாபாரத் திற்கு வருபவர்களுக்குச் சற்று முன்பின்னாக வருகிறார்கள் என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். முன்னாட்களில் இந்தியாவானது செல்வமும் கலைகளும் மிகுந்து நாகரிகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளதாகப் பலராலும் கருதப்பட்டது. ஆகையால் அந்நிய நாட்டார் பலர் இந்தியாவுடன் வியாபார முறைகளைத்தவிரக் கலைகள், கைத்தொழில், அரசாங்க ஏற்பாடுகள்

மூலமாயும் தங்களுக்கு ஏற்படும் சம்பந்தங்களை விருத்தி செய்ய ஆவலுள்ளவர்களாக இருந்தார்கள். இந்திய அரசர்களுக்கு வருஷாவருஷம் சங்கீதப் பயிற்சியில் வல்ல சில பையன்களையும் அழகான பெண்களையும் யவன நாட்டினின்றும் கொண்டுவந்து யவன வர்த்தகர்கள் உயர்ந்த விலைக்கு விற்று லாபமடைந்ததாக ஒரு யவன நூல் கூறுகிறது. இதன் காலம் சுமார் 50 கி. பி.

பாண்டிய நாட்டுக்குத் தலைநகரான மதுரையின் அருகாமையில் ஒரு யவனச்சேரி இருந்ததாக நினைக்க இடமுண்டு. பாண்டிய அரசன் கோயில்வாயிலில் யவனர் காவலாளராக நியமிக்கப் பட்டிருந்தார்களென்பதைச் சிலப்பதிகாரத்தினின்று நாம் அறியலாம்.

கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க் கயிராது புக்கு.

மதுரையின் சமீபத்தில் இப்போதும் கிடைக்கும் சிறு செப்புக் காசுகளின் மீது பொறிக்கப்பட்டிருக்கும் யவன அரசர்களின் உருவங்களிலிருந்தும் பெயர்களிலிருந்தும் ஒரு சிறு யவனச் சேரியும் அதற்காக ஏற்பட்ட ஒரு கம்பட்டமும், அதாவது நாணயசாலையும், மதுரையில் இருந்ததாக ஊகிக்கலாம். தவிரவும், புகார்ப்பட்டணத்தில் யவனச்சேரி ஒன்று உண்டென்பதையும் சிலப்பதிகாரம் கூறும்.

கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்.

இங்கே யவனருக்குக் கொடுத்திருக்கும் 'காண்போர்த்தடுக்கும்' என்னும் அடைமொழி கவனிக்கத்தக்கது. அவர்களது வடிவம் மொழி, நடைஉடை பாவனைகள் எல்லாம் தமிழ் நாட்டாருக்கு விந்தையாயிருந்ததைக் குறிக்க, 'தம்மைக் காண்போர் கண்களை மேற்போகவிடா மற்றடுக்கும் யவனிருக்கை' என்றார் இளங்கோவடிகள். 'பயனறவறியா' என்ற மற்ற அடைத்தொடர் யவனரின் செழிப்பையும் அவர்களுடைய வர்த்தகத்தின் மேன்மையையும் குறிக்கும். பாண்டிநாட்டிலிருந்தும் இலங்கைத் தீவினின்றும்

ரோமக சாம்ராஜ்யத்துக்கு முதற் சக்கரவர்த்தியான அகஸ்டஸ் என்னும் பேரரசன்பால் இரண்டு அல்லது மூன்றுமுறைதூதர்கள் அனுப்பப்பட்டார்கள் என்றும், இத்தூதர்கள் அவ்வரசனால் சுமார் கி. மு. 26 முதல் 20 வரை பலமுறை நேராக வரவேற்கப் பட்டார்களென்றும், இப்போது கிடைக்கும் சில யவன நூல்களால் நாம் அறிகிறோம். * * *

இனி யவனருக்கும் சேரன் இமைய வரம்பன் நெடுஞ் சேரலாதனுக்கும் போர் நிகழ்ந்ததென்று பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் பதிகத்தால் அறிகிறோம்:

> நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
> நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
> அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு

இந்தப்போர் எங்கே எந்த சமயத்தில் நிகழ்ந்ததென்று துணிந்து கூறமுடியாது. அக்காலத்துத் தோற்றார் தலையில் நெய்பெய்து கையைப் பின்கட்டாகப் பிணிப்பது வழக்கமென்று ஒரு பழைய உரையாசிரியர் குறிப்பிடுகிறார். இம்மாதிரி யவனரைச் சிறை யாக்கி அவர்களிடமிருந்த அருவிலை நன்கலங்களையும் வயிரங்களையும் தண்டமாகச் சேரவரசன் கைப்பற்றிக் கொண்டது அக்காலத்தில் ஒரு முக்கியமான செய்தியா யிருந்திருக்க வேண்டும். இச்செய்தியைத்தான் சிலப்பதிகாரத்து ஊசல் வரியிலுள்ள சில தொடர்களும் குறிப்பனபோலும். அதாவது:

> வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
> தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்.

என்று சேரன் இங்கே புகழப்படுகிறான்; அதாவது யவனர் வளநாட்டையும் தென்குமரியையும் ஆண்ட சேரன் என்றவாறு. இங்கு யவனர் வளநாடு என்று குறிக்கப்பட்ட நாடு அராபி யாவிலோ அல்லது ஆப்பிரிக்காவின் கீழ்கரையிலோ உள்ள ஒரு சிறு நாடாக இருந்திருக்கலாம். அவ்விடங்களில் இந்தியர் குடியேறியிருந்ததைக் காட்டும் சிற்சில அழிந்த கோயில்களும் முத்திரைகளும் அங்கே அகப்படுகின்றன. இவ்வாறு

குடியேறப்போனவர்கள்மலையாளத்துக்கடற்கரையினின்றுதான் போயிருக்கவேண்டும். அவர்கள் போன இடங்களில் அவர் களுக்கும் அந்நாட்டுஜனங்களுக்கும் ஏதோ சச்சரவுகள் ஏற்பட, அதையறிந்த சேரன் அந்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொடுத்த செய்தியே சிலப்பதிகாரத்திலும் பதிற்றுப்பத்திலும் ஒரே மாதிரி யாகக் கூறப்பட்டிருத்தல் கூடும். இது எப்படியாயினும், வன்சொல் யவனர் வளநாடென்பது அக்காலத்தில் வெகு மேன்மையுடன் சிறந்து விளங்கிய ரோமக சாம்ராஜ்யம் ஆகாதென்பது திண்ணம்.

யவனர்கள் சிற்ப வேலைகளில் மிக தேர்ந்தவர்கள் என்பது மணிமேகலையில் யவனத் தச்சரை விதந்து கூறியிருப்பதால் அறியலாம். 'யவனர்' என்னும் சொல்லுக்குக் 'கண்ணாளர்' என்று திவாகரம் முதலிய நிகண்டுகளில் பொருள் கூறப்படுவதும் இதையே வற்புறுத்துகிறது.

தமிழ் நாட்டில் வந்திருந்த யவனர்களின் தோற்றம் இவ் வாறிருந்த தென்பதும், அவர்கள் பாஷை தமிழருக்குப் பொருள் புலப்படாதிருந்த தென்பதும், அவர்கள் பாசறைகளிற் செய்த வேலைகள் இன்னின்னவென்பதும் முல்லைப் பாட்டுப் பகுதியி னல் அறியக் கிடக்கின்றன. * * *

இனி, யவனர்கள் விசித்திரமான விளக்குகள் செய்வதில் கைதேர்ந்தவர்கள் என்பது பலவிதமாக வெளியாகின்றது.

யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக னிறைய நெய்சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி.

என்பது நெடுநல்வாடை. 'பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல்'என்னும் முல்லைப்பாட்டு வரியும் இதேமாதிரி விளக்கையே குறிப்பது போதும்.

யவனர்கள் நல்ல மதுக்களை இந்திய அரசர்களுக்கும் தன வான்களுக்கும் ஏராளமாக அயல்நாடுகளினின்று கொண்டுவந்து

விலைக்குக் கொடுத்தார்கள் என்பது பின்வரும் புறப்பாட்டின் பகுதியால் புலப்படும்.

> யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
> பொன் செய் புனைகலத் தேந்தி நாளும்
> ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து.

அதாவது, 'யவனரால் நல்ல குப்பியிற் கொண்டு வரப்பட்ட குளிர்ந்த நறு நாற்றத்தையுடைய தேறலைப் பொன்னாற் செய்யப் பட்ட புனைந்த கலத்தின்கண்ணே ஏந்தி நாடோறும் ஒள்ளிய வளையையுடைய மகளிரூட்ட மகிழ்ச்சி மிக்கு' என்றபடி. இது பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனைநக்கீரனர் பாடிய பாட்டிலுள்ளது. அக்காலத்து இந்திய அரண்மனை களிற் பருகப்பட்டு வந்த மதுக்கள் அராபியா, இத்தாலி, ஸிரியா என்ற இம் மூன்று தேசங்களினின்று யவன வணிகர்களால் கொண்டு வரப்பட்டன என்று கி. பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு யவன நூல் வெளிப்படையாகக்கூறுகின்றது.

கடைசியாக, யவனர்கள் தங்கள் மரக்கலங்களில் பொன்னைக் கொண்டுவந்து நம் நாட்டு வியாபாரிகளிடம் கொடுத்து அதற்குப் பதில் மிளகை ஏராளமாக வாங்கிச் சென் றார்களென்பது தமிழ் இலக்கியங்களாலும் தமிழ் நாட்டில் அகப் படும் பழைய நாணயங்களாலும், சில யவன நூல்களாலும் வெளியாகிறது. அகநானூற்றின் 149-ம் பாட்டில் முசிறி யென்னும் மலையாளத் துறைமுகப் பட்டினம் பின்வருமாறு சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

> சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
> யவனர் தந்த வினைமாண்நன்கலம்
> பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
> வளங்கெழு முசிறி

இங்கே பொன்னென்றது பொற் காசுகளையும், வெள்ளி நாணயங்களையும் குறிக்கும் பொது மொழி. தென்னிந்தியாவில் அநேக ஊர்களில் ரோமக சக்கரவர்த்திகளுடைய காசுகள் ஏராளமாகத் தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு வருஷங்களுக்கு முன் கந்தியால் என்னும் ஊரில் ஒரு பெரிய ரோமக நாணயக் குவியல் கிடைத்தது. இக்குவியல் முழுதும் தங்க நாணயங்களே. இந்தக் காசுகள் எல்லாம் கி. பி. முதல்

நூற்றுண்டிலோ அல்லது இரண்டாம் நூற்றுண்டிலோ ஆண்ட சக்கரவர்த்திகளின் நாணயங்களாகும். ரோமக சாம்ராஜ்யத்திலிருந்து அக்காலத்தில் மிளகும், துணியும், பட்டும், அகிலும் இன்னும் பலவகையான போக பதார்த்தங்களும் வாங்குவதற்காக வருஷா வருஷம் ஐம்பது லட்சம் சவரன்கள் பெறுமான தங்கமும்வெள்ளியும்ஏற்றுமதி செய்யப்பட்டதாகப்ளினிஎன்னும் யவன ஆசிரியர் கி. பி. 75-ல் எழுதியிருக்கிருர். அதே சமயத்தில் இன்னும் சில ரோமக கவிகளும் ஆசிரியர்களும் அளவிறந்த பொருளைக் கொடுத்து மெல்லிய பரதேசத் துகில்களை வாங்கி உடுத்துத் தங்கள் அழகிய வடிவங்களை மறைப்பதிலும் பிறர்க்குக் காட்டுவதே மேன்மையென்று ஒழுகி வந்த ரோமக மாதர்களின் அபசாரங்களைப்பற்றி அவர்கள் நூல்களில் முறையிடுகிருர்கள். ரோமகர்கள் இறக்குமதி செய்து அவர்கள் சமையல்களில் உபயோகப்படுத்தின மிளகும் ப்ளினிக்கு மிக்க எரிச்சலை உண்டாக்கியது. அவர் இதைக் குறித்து எழுதுவது பின் வருமாறு: 'மிளகு இவ்வளவு அதிகமாக உபயோகத்துக்கு வந்திருப்பது மிகவும் வியப்பே. இதர சாமான்களை நாம் உபயோகப் படுத்துவதெல்லாம் அவைகளின் ருசிக்காகவோ, அல்லது அழகான தோற்றத்துக்காகவோ உபயோகிக்கிருேம். மிளகோ பார்வைக்கும் அழகில்லை, ருசியோ ஒரே எரிச்சல் தான். இந்த எரிச்சலுக்காகஇதைவெகுதூரத்துக்கப்பாலுள்ள இந்தியாவினின்றும் வரவழைக்கிருேம்! இதை ஆகாரத்தில் கலக்கவேண்டுமென்ற எண்ணம் எந்த புத்திமானுக்கு முதலில் உதித்ததோ! திருப்தியாகச் சாப்பிடுவதற்கு நல்ல பசி ஒன்றே போதாமல் இந்த மிளகும் வேண்டுமென்பது யாருக்குத்தான் தோன்றியதோ அறியோம்.'

ஆகவே, சங்ககாலத்துத் தமிழிலக்கியங்களும், யவன நூல்களும், மற்றும் ஆர்க்கியாலஜியினின்று கிடைக்கும் சான்றுகளும் நெருங்கி ஒத்திருப்பதை நோக்குமிடத்து, சங்க நூல்களின் காலம் மேலே குறிப்பிட்டபடி கிறிஸ்துவப்தத்தின் முதல் நூற்றுண்டுகளாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்பதை அறிஞர்கள் எளிதில் உய்த்துணரக்கூடும்.

கூட்டுறவு*

டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி,

ஒரு தேசத்தின் முன்னேற்றம் அதன் பொருளாதாரநிலையை ஒட்டி இருக்கிறது. பொதுப்பட ஜனங்கள் வயிறு நிறைய உண்டு உடுத்து நல்ல வீடுகளில் வசித்துச் சுகமாகவும் ஸந்தோஷமாகவும் இருக்கவேண்டுமென்பது ஒவ்வொரு தேசத்தின் முக்கிய லக்ஷ்யமுமாகும். அதற்கு, இன்றியமையாத பொருள் வருவாய் இருக்கவேண்டும்; அது ஜனங்களுக்குள்ளே பரவிப் பொது ஜனங்கள் ஸௌக்கியமாக இருக்க உதவவேண்டும் சென்ற சில நூற்றாண்டுகளாக யந்திரங்கள் வரவர அதிகமாக உபயோகப்படுகின்றன; அதிகமாகப் பொருள் உற்பத்தியாகின்றன. அவ்வுற்பத்திச்சாலைகளினால் அதிகலாபம் கிடைக்கக்கூடிய ஏற்பாடு இருந்தால், அவைகளை வைத்து நடத்தக்கூடிய பொருள் உள்ளவர்க்கு அதிக லாபமும் அதிகாரமும் உண்டாகஇடமுண்டு. அவர்கள் தங்கள் நிலயங்களில் வேலை செய்யும் ஜனங்களுக்கு அரை வயிற்றுக் கஞ்சி கொடுத்து அதிக வேலைவாங்கி லாபம் சம்பாதித்து வந்தார்கள். அதனால் தேசத்தில் அதிகமான பொருள் உற்பத்தியானாலும் அதிலிருந்து உண்டாகும் லாபம் சிலபேர் கையிலே நின்றுபோய்ப் பொதுஜனங்கள் நன்மை யடைய முடியாமற் போய்விட்டது.

இது தெரிந்த வேலையாட்கள் இதற்கு விரோதமான மார்க்கங்களைத் தேட ஆரம்பித்தார்கள். சில இடங்களில் இவர்கள் செய்த கிளர்ச்சி, இவர்களது பலக்குறைவினால்கெடுதல் செய்ய முடிந்ததேயொழிய நன்மையைச் செய்ய முடியவில்லை. சில இடங்களில் வேலையாட்கள் ‘டிரேட் யூனியன்’களாகச் சேர்ந்து ஒன்றுகூடி முதலாளிகளிடம் கொஞ்சம் அதிகமாகக் கூலியும்சௌகரியமும்பெற்றார்கள். ஆனால் பொருள் இல்லாததால் அதிகமான நன்மையை அடையமுடியவில்லை. அதனாலே பெரிய நிலங்களைக் கவர்ன்மெண்டாரே பொதுச் சொத்தாக எடுத்துக்கொள்ளவேண்டும், வேலை யாட்களுக்குக் கூலி முதலிய

---

*கலைமகள் '40 பொங்கல் மலரில் வெளியானது.

விஷயங்களில் சௌகரியம் செய்யவேண்டுமென்று முயற்சி செய்ய ஆரம்பித்தார்கள். இதன் மூலம் 'ஸ்டேட் ஸோஷலிஸம்,' 'கம்யூனிஸம்' முதலிய பல புது இயக்கங்கள் தோன்றின.

அவைகளெல்லாவற்றிலுமே வேலையாட்களைக் கட்டாயப் படுத்தி வேலை வாங்கவும், அவர்கள் இஷ்டம்போலல்லாமல் கவர்ன்மெண்டாரோமற்றஅதிகாரமுள்ளவர்களோநிர்மானிக்கும் வேலையை அவர்கள் செய்யவும், பொருள் உற்பத்தியினால் லாபம் வந்தால் அதைப் பிரித்துக் கொடுப்பதில் வேலை செய்தவனுக்கும் செய்யாதவனுக்கும், புத்திசாலிக்கும் புத்தியில்லாதவனுக்கும், சாதாரண வேலை செய்பவனுக்கும் விசேஷமான வேலை செய்ப வனுக்கும், வித்தியாசம் இல்லாமல் கொடுக்கவும் நேர்ந்தது. ஒருவகையில் நன்மை இருந்தது; அதாவது வேலையாட்கள் சாப்பிட்டுச் சுகமாக வாழ்ந்துவந்தனர். என்றாலும் மனிதனுக்கு இயற்கையாக வேண்டியிருக்கும் யதேச்சையும் உரிமையும் இல்லாமற் போனதோடு சக்தியுள்ளவர்களைக்கொண்டு பொருள் உற்பத்தியை அதிகப்படுத்த வகையும் இல்லாமற் போய்விட்டது. ஒருவிதமான கஷ்டத்திலிருந்து தப்பினாலும் மற்றொருவிதமான கஷ்டத்திற்கு ஆளாக நேர்ந்தது. ஆகையால் ஜனங்கள் எம் மாதிரியான அமைப்பினால் பொருளபிவிருத்தியையும் சுக சந்தோஷங்களையும் யதேச்சைக்கும் சுதந்தரத்துக்கும் பாதகம் விளையாமல் அடைவதென்ற யோசனை ஏற்பட்டிருக்கிறது. தற்காலத்தில் மேலே சொன்னவைகளில் 'கேபிடலிஸம்' அல்லது முதலாளித்துவம்,'கம்யூனிஸம்'என்னும்இரண்டையும்வெவ்வேறு கட்சியார் புகழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குள் பெருத்த வாதம் இருந்து வருகிறது. ஆனால் பொதுவாக இரண்டிலும் இருக்கும் கெடுதலை அகற்றி நன்மைகளை ஒருங்கே அடையவேண்டுமென்ற அவாத்தான் பரவி இருக்கிறது. அதற்குரிய வழி என்னவென்று தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

பலதேச அநுபவத்தையும்பலபேர்களுடைய அநுபவத்தையும் பார்த்தால் அதற்குச் சரியான வழி கூட்டுறவு என்று தெரிகின்றது. கூட்டுறவு இயக்கத்திலே பலஹீனர்களாக உள்ள

தனி நபர்கள் ஒன்று சேர்ந்து, பெருத்த தனவான்களைப்போன்ற பூரண செல்வாக்கும் பெற்றுப், பெரிய நிலயங்களை ஸ்தாபித்து எல்லாரும் லாபத்தையும் சௌகரியங்களையும் அடையக்கூடும் பொதுப்படக் கூட்டுறவு இயக்கமானது எல்லாநாடுகளிலும் பயன்தரக்கூடியதாக இருந்தாலும் நம், இந்தியா தேசத்திலே ஜனங்கள் வெகு ஏழைகளாகக் கல்வியும் மனோதைரியமும் இன்றி வருந்துகிற இக்காலத்திலே, கூட்டுறவு இயக்கம் ஒன்றுதான் அவர்களுக்கு உதவியாக இருந்து அவர்களை இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியிற் கைதூக்கிவிடும்.

முதலில், கூட்டுறவு இயக்கமென்றால் என்னவென்பதைச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிப் பலவிதமான தப்பபிப்பிராயங்கள்நடமாடிக் கொண்டிருக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்பவர்களுக்குள் கூட அது என்ன என்பதைப்பற்றிச் சரியான அபிப்பிராயம் இல்லை. கூட்டுறவு இயக்கமானது ஜனங்கள் பொருளாதார விஷயமாகத் தங்களுக்குள் இஷ்டப் பட்டு ஒன்று கூடி லாபமடையச் செய்வது. பொருளாதார விஷயமல்லாமல் மற்ற விஷயங்களுக்காக ஜனங்கள் கூடுவது கூட்டுறவு இயக்கம் ஆகாது. அதுபோலவே ஜனங்கள் தங்கள் தங்களுக்குள் இஷ்டப்பட்டு ஒருமித்துச் சேர்ந்தாலல்லாமல் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டுச் சேர்வார்களானால் அதுவும் கூட்டுறவு இயக்கமாகாது. கூட்டுறவு இயக்கத்தில் முதல் கொள்கை ஸமத்துவம். அதில் சேர்ந்திருக்கிறவர்களுக்குள் வித்தியாசமிருந்தால் அதுமுறையான கூட்டுறவு இயக்கத்தின் இலக்கணம் உடையதாக இராது. ஒருவன் எஜமானனாகவும் மற்றவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிபவர்களாகவும் இருந்தால் அதுவும் கூட்டுறவு இயக்கமாகாது.

கூட்டுறவு இயக்கம் பொருளாதார ஸம்பந்தமானது என்று சொல்வதனாலே பொருள் உற்பத்தியும், பொருள் மாற்றுதலும், பொருளின் விநியோகமும் ஆகிய எல்லாம் அதனுள் அடங்கும். அதுமட்டும் அல்ல; அவைகளில்

ஒவ்வொன்றிற்கும் உரிய ஒவ்வொரு முயற்சியும் அதில் சேர்ந்ததே ஆகும். உதாரணமாக வியவசாய அபிவிருத்தியில் அதற்குவேண்டிய பணஉதவியும், கடன்வாங்குதலும், விதை உரம் முதலியவை வாங்குதலும், வேலையாட்களுக்குக் கூலி கொடுப்பதும், குடியானவர்களின் சாப்பாடும், தேக நிலையும் அடங்கும். அம்மாதிரியே மற்ற ஒவ்வொன்றிலும் அதன் அதன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அடங்கும். இவற்றால் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு விரிவானது என்பது விளங்கும்.

நம் நாட்டிலே பல வருஷகாலமாகக் கிராமங்களிலும் மற்ற இடங்களிலும் ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பரஸ்பர உதவியும் இருந்தாலும், இப்போது நாம் வேண்டுகிறபடி ஓர் இயக்கமாக, தக்க ஏற்பாடுகளுடன் இருந்ததில்லை. மற்றத் தேசங்களிலும்இந்த இயக்கமானது கொஞ்ச காலத்துக்கு முன்னேதான் அநுபவத் துக்கு வந்தது. கூட்டுறவு இயக்கம் பொருள்பற்றிய எல்லா விஷயங்களிலும் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விஷயத்தில் மாத்திரம் ஆளப்பட்டு வருகின்றது. எந்த எந்தத்தேசத்தில் தனிமனிதர்கள் தங்கள் தொழிலைச் செய்து சரியான ஊதியம் பெறமுடியவில்லையோ அந்த அந்த இடத்தில் அவர்கள் ஒன்று சேர்ந்து நன்மை அடையப் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். ஆகையால் தேசநிலைமைக்குத் தக்கபடி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வழியில் கூட்டுறவுஇயக்கம் விருத்தி அடைந்திருக்கிறது. இங்கிலாந்து தேசத்தில் பொருள் வினியோகத்துக்காகப் பண்டசாலைகள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் பொதுப்படச் சாமான்களைப் பெரு வாரியாக வாங்கி அங்கத்தினர்களுக்கு விற்றுச் சௌகரியம் செய்கிறார்கள். சில பண்டசாலைகள் ஒவ் வொரு வருஷமும் பலகோடிப்பவுன்வரைவியாபாரம் செய்கின்றன. டென்மார்க்கு தேசத்தில் வியவசாயிகள் ஒன்று சேர்ந்து வியவசாயத்திற்கு வேண்டிய சரக்குக்களை ஒருங்கே வாங்கிப் பகிர்ந்து கொண்டு வியவசாய விளைபொருள்களை ஒன்று சேர்த்து வெளிநாடுகளுக்கு அனுப்பி அதிக லாபம் சம்பாதித்து வருகிறார் கள். இத்தலி தேசத்திலே தொழிலாளிகள் ஒருங்கு சேர்ந்து

பெரிய வேலைகளைக் 'கண்டிராக்டு' எடுத்து வேலை செய்து லாபத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.

நம் தேசத்திலோ வென்றால் வியவசாயம் இருந்த நிலைமையினாலும், நமக்குள்ளிருந்த அநுஷ்டானங்களினாலும், ஜனங்கள் அதிக வறுமையுடையவர்களாகிக் கடன்பட்டு அக்கடன் பளுவைப்பொறுக்கமுடியாமல்திண்டாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பெரும்பாகம் வட்டிகட்டவே போதாமல் இருந்தது. நிலங்களும் அடிக்கடி விற்கப்பட்டுக் கைமாறிக்கொண்டிருந்தன. குடியானவர்களுக்குள்ளே பூமிதான் அதிகமாக எண்ணப்பட்ட சொத்து. அது போவதென்றால் அதைவிட அதிகமாக வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சி வேறு ஒன்றுமில்லை. ஆகையால் ஆங்கிலேயர்கள் நம் தேசத்தைக் கைப்பற்றியவுடன் அவர்களுக்கு வியவசாயிகளின் கடன்பளுவைப் பற்றிய அறிவும் அதைச் சீக்கிரம் போக்க வேண்டுமென்ற உணர்ச்சியும் விரைவாகவே ஏற்பட்டன. சென்றநூற்றாண்டின் மத்தியிலிருந்தே இந்தக்கடன் பளுவைப்போக்கஎன்னவழியென்றுயோசிக்கத் தலைப்பட்டனர். இந்த விஷயமாக அவர்கள்செய்த பிரயத்தனங்களின் பயனாகவே கூட்டுறவுஇயக்கம் நம்இந்தியா தேசத்தில்முதலில் உதயமாயிற்று. ஆகையினாலேதான் நம் தேசத்தில் இவ்வியக்கம் கடன் கொடுப்பதைப் பெரிய காரியமாக வைத்துக்கொண்டு, அதையே முக்கியமான கூட்டுறவு வேலையாகச் செய்து வருகிறது.கடன்பளுவைத் தீர்க்கக் கூட்டுறவு இயக்கத்தை உபயோகப் படுத்துவதனால் தனித்தனியாகக் கடன்பெறச் சக்தியற்றவர்கள், ஒன்று சேர்ந்து, தங்கள் சேர்க்கையின் மூலம் பெருத்ததொகை கடன்வாங்கவும் அதனால் தங்கள் பழைய கடனைத் தீர்க்கவும், வியவசாயத்தை மேலும் மேலும் அபிவிருத்தி செய்யவும் வழி ஏற்பட்டது.

மணியொலி*

அ. ஸ்ரீநிவாஸராகவன், எம்; ஏ.

மனித வுள்ளமெனும் யாழிருந் தெழும் ஸ்வரங்கள் இன்ன தன்மையன எனவும், அவை ஒன்ருெடொன்று தம்முட் பொருந்திச் சமைக்கும் இசைகளும், முரண்பட்டிழைக்கும் ஓலமும், கலந்து வயங்கும் வாழ்வின்மருமம் யாதென்பதும், கவிதையானது விளக்குகின்றது. இவ்விளக்கத்தைத் தனது கருமமாகக்கொண்ட கவிஞன், மனிதவுள்ளத்தின் தன்மையும், வாழ்வின் உட்பொருளும் தானறிந்தவரையில் இவையே என்று சொல்வதோடுமட்டும் நில்லாது, அவ்வுளத்தின் திண்மையையும் வாழ்வின் பயனையும் வளர்ப்பது சாத்தியமென்றும், அவ்வாறு வளர்க்கின், உலகம் கடைத்தேறிப் பொலிவ தெவ்வாறென்றும் கனவு காண்பான். கனவுக ளிவையெலாம் கவிதைக்கே நனவென்று உலகம் சொல்லும்; மதியாது நிற்கும்; பழிச்சொல் பகரும். கவிஞனே, இதனல் மனக்குழப்பம் எய்துபவனல்லன். தனது பாவின் இசையிலும் காணும் பெருங் கனவிலும் அவன் அளவிலா நம்பிக்கை பேணுவான். கேவலம் இசை வலவன், கனவு வாணிகன், என்ற சொற்களை இகழ்ச்சிகளாக நினையாது தனது, புகழை அளவிடுங் கட்டிய மொழிகளாகவே கருதி, ஓஷானஸி என்ற ஆங்கில கவியைப்போல், பெருமிதந் ததும்ப மனமகிழ்வான். சொல்வன் ஓஷானஸி :-

'தனியே அலைகின்ற தரங்கத் தயலிலே அலைந்தும், மனித சஞ்சாரமற்ற சிற்ருறுகளின் பக்கத் தமர்ந்தும், இசை யெழுப்புவோர் யாமே; அன்றி, கனவுகள் காண்போரும் யாமே. உலகம் இழிந்தோம், உலகந் துறந்தோம். எம்மேல் வீசுவது மங்கிய நிலவே. ஆயினும் என்றென்றும் உலகையசைப்போரும் ஆட்டுவோரும் யாமே யாவோம்'

மேலெழுந்தவாருக நோக்கினல், இவ்வார்த்தைகள், தனது தொழிலைப்புகழுந் தொழிலாளியின் பிதற்றலாகத் தோன்றலாம்; ஊன்றிப்பார்த்தாலோ, அவைகள் உண்மைத் தத்துவமென்பது

* கலா நிலையம், 1928-ல் வெளியானது.

விளக்கும். நகர்களை யெழுப்புவதும், ஏக சக்ராதிபத்யம் இயக்குவதும், அரசியலொன்று புதிதாகப் பிறப்பதும், அரசியலொன்று அழிந்து பழங்கதை யாவதும், மனிதனுடைய செய்கைகள். ஆனால், மனிதன் சாதித்துள்ள பெருஞ்செயல் ஒவ்வொன்றும் முதன்முதலில் அவன் மனதிலேயே உருவம் பெறுகிறது; பின்பு, ஆவல் என்ற தூண்டுகோலின் பலத்தால், வெளிப்படையான செயலாகிறது. கனவுகள் காண்பதும், அவைகளை நம்புவதும், நனவுகளாக அவைகளை மாற்ற முயல்வதும் மனித சமூகம் ஈடுபடுகின்ற தீராத பெருந்தொழில் காலச்சக்கரஞ் சுழலச் சுழலப் புதிய கனவுகளும், புது நம்பிக்கைகளும், புதிய செய்கைகளுந் தோன்றித் தோன்றி மறைவன. ஒஷானஸி சொல்வதுபோல் 'ஒவ்வொருதலைமுறையும் அழியுங்கனவோ அன்றிப் பிறக்குங் கனவோ, இவ்விரண்டனு ளொன்றே'.

எனவே, ஒவ்வொரு தலைமுறையிலும், மனிதசமூகமியற்றும் செயல்களின் பெருமையும், வன்மையும், நன்மையும், அச்செயல்களின் மூலாதாரமான கனவின் அழகையும் தெளிவையும் பொறுத்துள்ளன. தூய்மையான ஆன்ம பலத்தை அக்கனவு தனது அடிப்படையாகக் கொண்டதாயின், அதை நம்பும் மனிதர்குழாம், அதை நனவாக்க முயலும்போதும், முயற்சியிலொரு சிறிதேனும், வெற்றி பெறும்போதும், அடைகின்ற பெரும்பயன்அளவிடற் பாலதோ? அன்றி, வெறுப்பிலும் பொறாமையிலும் மடமையிலும் பிறந்த தீயதொரு கனவாயின் அதன்மேல் நம்பிக்கைவைத்துச் செய்கையிலிறங்கும் மனிதன் இழிகின்ற ஏழ்மை சொல்லவும் படுமோ? உண்மைக் கவியினுடைய கனவுகள் யாவும் உறவாடத் தகுந்தன. ஏனெனில் மனிதவுள்ளத் தழுகிலிருந்தும் அவைகள் பிழியப்பட்டுள்ளன. இதனால், மனிதனுடையகுறைகளையும், மனித சமூகத்துள்ள தீமையையும், கவிஞன்அறியான்என்று சொல்ல வொண்ணாது. மனிதனுடைய பெருமையைப் பாராட்டுவதால் அவனுடைய குற்றங்களை யறிய முடியாமற்போகாது; இயற்கை வனப்பை மாந்துவதால் மனித சமூகத்துள்ள தீமைகள்

புலனுகாமலிரா. நன்மையை அறிந்துள்ளதுபோல் தீமையையும் கவிஞன் அறிவான். அறிந்து, அத்தீமையைக் களைந்தெறியவே தனதழகிய கனவுகளை யெழுப்புவன்; நம்மை நம்பி நலம்பெற வேண்டுவன்; மற்றவை வேண்டிலன், உலகமிழப்பன், உலகந் துறப்பன்; ஆனுல், உலகமுய்வதே கருதுவன்.

இத்தகைய கனவுகள் பல ஒவ்வொரு இலக்கியத்திலுங் காணலாம். கம்பன தயோத்திமாநகர் ஓர் அழகிய கனவு. சிலப்பதிகாரப் பூம்புகார் மற்ருெரு கனவு. பரஞ்சோதிமுனிவரின் மதுரையும், வில்லிபுத்தூரார் இந்திரப் பிரத்தமும் வேறு சில கனவுகள். புகழேந்தியின் நிடதநாடும், மாவிந்தமும், நளனுந் தமயந்தியும் கனவுகள், கனவுகளே.

இக்கனவுகள் பெரிதாயினும் சிறிதாயினும் கவிஞனுக்குத் தோன்ற, அவனைச் சுற்றியுள்ள உலகில் நடக்கும் சம்பவம் எதுவாயினும் போதுமானது. மேல் வானத்திலே, உதிர வெள்ளம் பெருக்கிப் பகற்பொழுது மாய்வதோ, அன்றி, சாலையருகிலே காற்றினுல் விழ்ந்துலர்ந்துள்ள சிறு மலரோ,தேயங்கள் ஒன்ருேடொன்று பொருது மக்கள் வெள்ளம் வற்றச்செய் தழிவதோ, அன்றி, களிமண் பொம்மை உடைந்துவிட்டதே என்று கவலை கொண்டழுங் குழந்தையின் குரலோ, வாழ்வின் பொருள் முழுதுந் தெறித்து உலகங் கலக்கும் பேரமளியோ, அன்றி, கோயிலுள்ளேஎழும் மணியோசையோ, எதுவாயினுங் கவிஞனுணர்வினுள் ஆழ்ந்தால், மனிதவாழ்வு நலம்பெற உதவுங் கனவாகவே வெளிவரும்.

மழைக்காலம், கிறிஸ்து பிறந்த நாள் கழிந்து ஐந்து தினங்களே ஆகியுள்ளன; ஆனுல் 'மனிதருள்ளே அமைதியும், அன்பும்' என்ற தத்துவத்தை அவருபதேசித்துப் பன்னூறு வருடங்களாகிவிட்டன. எனினும், அன்பையும், அமைதியையும் மனித சமூகமடையவில்லை என்பது தெளிவு. பழைய வருடங் கழிகிறது. இரவிலே, நடுயாமத்தில், கோயில் மணிகள் ஒலிக் கின்றன. மழையிருளிலும், பனிமூட்டத்திலும், மாரிக் குளிரிலும், புது வருடம் பிறக்கிறது. பழயவருடங் கழிவதையும் புதியது வருவதையும், மனித சமூகம் படும்பாட்டையும்,

ஆங்கிலக் கவியொருவன் நினைக்கிறான்; மனிதனடைய வேண்டிய ஆன்ம நிறைவைப்பற்றிக் கனவு காண்கிறான்; கோயில் மணிகளினொலி அவனது சிந்தனையூடே கலந்து கொள்கிறது.

ஒலிமின்! மணிகாள், ஒலிமின்!
மழையும், முகிலும், பனிமூட் டொளியும்
ஒழிந்திட வானில், ஒலிமின்!
கலங்கி மூதாண்டு கழிகிறான் இரவில்;
கலங்கலிர் ஒலிமின்! ஒலிமின்!

பழையன கழியவும் புதியன புகவும்
சூழ்பனி யூடே ஒலிமின்!
மெலிந்ததா லாண்டு மேவின னயினென்?
ஒலிமின், சலியா தொலிமின்!

பொய்யெலாம் அறவும், மெய்யுயிர் பெறவும்
ஐயமி லாமலே யிசைமின்.
நிசையெலாம் நரர்க்குச் சீர்பொங் கியதென
இசைமின்! மணிகாள், இசைமின்!

வாழும் வகைகள் நலம்பெற் றுயர்ந்து
வரித்தன சிலமென் றசைமின்!
இனியநல் லொழுக்கமும் புனிதமா நீதியும்
ஈந்தன அவையென் றசைமின்!

வீட்டுச் செருக்குயர் சாதிச் செருக்கும்
வன்மமுந் தூறும் மாய்ந்தன.
வாய்மையும், நேர்மையும், மக்களின் நலமும்
வளர்பெற இன்னிசை யொலிமின்!

அழுநோய்ப் பேய்கள் அழிந்தன; ஒடுக்குறு
பைம்பொன் னுசை ஒய்த்தது.
பண்டைநாட் போரெலாம் அயரவே, சாந்தப்
பல்லாண் டோங்குமென் றொலிமின்!

குறிப்புரை.

பேரெண் பக்களெண்; சிற்றெண் பாட்டெண்

1. இராமலிங்கசுவாமிகள். கி. பி. 1823-1874. கடவுள் பக்தி அடியாக எழுந்த கவிதா சக்தியால் முன்னோர் முறைகளைத் தழுவிப் புதிய போக்கில் அளப்பருங் கவிகளைப் பாடிக் குவித்தவர். இவருடைய பாடல்கள் எளிமையும், இனிமையும் வாய்ந்து கல்லாற்கும் கற்றார்க்கும் களிப்பூட்டுந் தன்மையன.

6. இப்பகுதி அகலிகை வெண்பாவினின்றும் எடுக்கப்பட்டது.

8. எச். ஏ. கிருஷ்ணபிள்ளை. 1827-1900; இது இரட்சண்ய யாத்ரீகத்திலிருந்து எடுக்கப்பட்டது. அதை இயற்றியவர் பாளையங் கோட்டை எச். ஏ. கிருஷ்ணபிள்ளை. இவர் வீரவைணவராய்ப் பிறந்து முப்பதாண்டுகள் வரை வளர்ந்து, கிறிஸ்தவ சமயத்தின் புதிய நெறியிற் சென்று கீர்த்தி வாய்ந்த தமிழ்க்கவியாக விளங்கினர். கவிகளைச் செம்பாகமாகவும் விதவிதமாகவும் இயற்றுவதில் திறமை மிக்கவர்.

9. அருணாசலக்கவிராயர். 1712-1779. இவர் தரங்கம்பாடியைச் சேர்ந்த தில்லையாடியிலே பிறந்து, இளமைப் பருவத்தே தாய் தந்தையரை இழந்தும் வடமொழி தெலுங்கு தென்மொழிகளில் பயிற்சி மிக்கவராய், சிதம்பரம்பிள்ளை ஆதரவில் சீர்காழியில் வாழ்ந்தவர். மணலி முத்துக் கிருஷ்ண முதலியார் முன்னிலையில் இவர் பாடி அரங்கேற்றிய இராம நாடகம் தமிழ் நாடக மேடைகளில் பெரும் பிரசித்தி வாய்ந்தது. கவிராயர் கம்பனைக் கற்றுத்துய்த்த முறை இந்நாடக நூலால் நன்கு விளங்கும்.

மதுரகவி. நூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன்னர் அமரம்பேடு என்னும் ஊரில் வாழ்ந்தவர். புதுச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளை மீது இவர் பாடிய கவிகள் இனிமை மிக்கவை.

ஒப்பிலாமணிப்புலவர். கவிக்களஞ்சியத்தில் ஒப்பில்லாமணிகளாக விளங்கும் பாடல்களைத் தந்தருளிய இப்பாவலர் வரலாறு பற்றி ஒன்றும் தெரிந்திலது. சிலர் கருதுவதைப்போல இவரைக் குமணன் காலத்தவராகச்

சொல்வதற்கிடமில்லை. தஞ்சைச் சரபோசி சபையில் அரங்கேறிய 'சியாகசியம்' செய்த ஒப்பிலாமணிப்புலவர் இவரினும் வேறானவரோ? அறியக்கூடவில்லை.

10. சேகவீரன். திருநெல்வேலி பாஞ்சாலங்குறிச்சி அதிபதியாயிருந்து கும்பனி சர்க்காரை அலைத்து வந்த கட்டப்பொம்மு மீது பாடப்பெற்ற பாஞ்சைக்கோவையிற் பயில்வது இப்பாட்டு. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

நமச்சிவாயப்புலவர். 18-ம் நூற்றாண்டில் இராமநாதபுரம் சமஸ்தான மந்திரியாயிருந்த முத்திருளப்பபிள்ளை பேரில் சில பிரபந்தங்களை இவர் செய்திருக்கிறார் என்பதுவே அன்றி இவரைப்பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

கழைக்கூத்தி. பொருத்தி பாண்டியன் முன் 'விச்சளிப்பாய்ச்சல்' என்னும் அரிய கூத்தை ஆடிக்காட்டியபோது பராமுகமாயிருந்த அவன், மறுமுறை அவளை ஆடச்சொல்ல, அரசன் ஆணைக்கஞ்சி ஆடுபவள் தன்னுயிர்க்கு அழிவு வருமென்று அறிந்து இதனைக் கூறினள் என்பர். புழற்கோட்டம், தொண்டைமண்டலத்தொரு கோட்டம் (-சில்லா)

11. அந்தகக்கவி வீரராகவ முதலியார். 'எடாயிரங்கோடி எழுதாது, தன்மனத்தெழுதிப் படித்த விரகர்' என்று புலவர்களால் போற்றப்படும் இவர் செங்கற்பட்டு பூதூரில் பிறந்தவர் பிறவிக்குருடர்; 'இனிது இனிது' எனச் சேர சோழ பாண்டியர் 'மெச்சி இச்சித்த மதுர வாக்கி'. விழுப்புரத்தருகில் உள்ள அனந்தபுரச் சிற்றரசன் சந்திரவாணன் மீது இவர் கோவை யொன்றை மூன்றுமாதம் முயன்று பாடி, பாடி முடிந்து நாலுமாதமாயும் அதை அவன் கேட்கவில்லை என்றபோது இவர் பாடியது நமக்குப்பாடம்.

படிக்காசன். 1674-1710. சந்தப்பா சொல்லுவதில் மிகவும் வல்லவரான இவர் இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்வானாக விளங்கினவர். தொண்டைநாடு பொற்களந்தை இவரது ஊர். சீதக்காதி மீது இவர் பாடிய பாடல்கள் நயமும் சுவையும் மிக்கவை. சீதக்காதி. ஓர் சிறந்த முஸ்லீம் வள்ளல். இயற் பெயர் சையத்காதிர். பெருவணிகர்; அருட் செல்வமும் பொருட் செல்வமும் அமைந்த

இல்லையென்று இரப்பார்க்கு இல்லையென்னுது ஈயும் இயல்பு வாய்ந்தவர். பல தமிழ்ப்புலவர்களை ஆரித்தவர். மொகலாய மன்னன் ஔரங்கசீபின் பிரதிநிதியாகத் தென்னுட்டில் திகழ்ந்தவர் என்பர். இவரைக் குறித்துச் 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்ற பழமொழி வழங்குகிறது.

அதிவீர ராமபாண்டியன் தாய். தென்காசி நகரிலிருந்து பாண்டியர் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தியவரும் நைடதம் பாடியவருமான அதிவீராாமபாண்டியன் அன்னையாரும் தமிழ்ப்புலமை வாய்ந்தவரே. ஒருகால் இவ்வம்மையாரின் புத்திரர்களாகிய அதிவீராாமரும் வாதுங்க ராமரும்(?) எதிலராகிப் போரெதிர்ந்தாராக அம்மையார் ஓர் செய்யுள் கூறி அதன் மூலம் இருவரையும் சந்து செய்வித்தனர் என்ப.

12. பராக்கிரமபாண்டியன். 1422-62. இவன் தென்காசி நகரை அமைத்து, விசுவநாதருக்குப் பெரிய கோயில் எடுத்து, அங்கிருந்தே தென் பாண்டிச் சீமையை ஆட்சிபுரிந்தவன். 1445ல் இவன் கட்டத்தொடங்கிய கோயில் முடிவடைதற்குப் பதினேழு ஆண்டுகள் சென்றன. இவனுல் பாடப்பட்டனவாகக் கோபுரநிலைக் கற்களிலே பொறிக்கப்பட்டிலங்கும் கவிகளால், இவனுடைய தமிழ்புலமை, அரியசெயல், சிவபக்தி முதலிய தெரியவரும். இவன் சிவபதம் அடைந்தபோது முன்னேர் புலம்பிக் கூறிய கவிகள் கற்போர் நெஞ்சை உருக்கும்.

13. குற்றுலக்குறவஞ்சி. கி. பி. 1718. குறத்தி ஒருத்தி குறி கூறுவதாகக், குறத்தியே அன்றி வேறு பலர் கூற்றுக்களும் விரவநாடகத் தமிழில் இயங்குவது இந்நூல். இதனை இயற்றியவர் குற்றுலத்தைச் சேர்ந்த மேலகரம் திரிகூடராசப்ப கவிராசர் ஆவார். இவர் தமிழ்ப்பெரும் புலமையும் அருங்கவித்திறமையும் நிரம்பப்படைத்தவர். முத்துவிஜயரங்க சொக்கநாத நாயக்கர் (1706-32) தம்முன் அரங்கேறிய இக்குறவஞ்சிக்கு உவந்து, குற்றுலப்பக்கத்தே வேண்டும் நிலங்களைப் பரிசளித்தார். குறவஞ்சி நூல்களுள் நமது கவிராசர் பாடியதே உயர்வுடையது.

1. மூக்கெழுந்த முத்து (-மூக்குத்தி) உடையார் (ஆகிய) அணி (-மன்மதன் சேனையை) வகுக்கும் (-பிரித்து சிறுத்தப்பெறும்) (வீதியில்); (நமது) வக்கால் (இமயத்தைவிட்டு)எழுர்(நவர்)த; மறி (-மான்)எழுந்த கரங்காட்டும் என்றது அகஸ்தியருக்காக, திருமாலாயிருந்தவர் சிவபெருமானுகக் காட்சியளித்ததைக் குறித்தது; தேக்கு-நிறைவு; விடை (-இடபமாகிய) சிலம்பு (-மலை).

2. ஒருமான் - தாருகவனத்தார் விடுத்தமான்; தனிச் சங்கம் - ஒப்பிலாத சங்கக்குழை; விழியின்மேல்விழி - நெற்றிக்கண்; முடியின் மேல் முடி - தலைமேற்சடை.

3, 4. பாவனை - சமானம், முனி - அகஸ்தியர்: பனகம் - பாம்பு.

5. பெண் - இலக்குமி; விண்ணிலே பிறந்ததனால்தான் சுடுகிறாய் போலும்; மண்ணிலே பிறந்திருந்தால் சுடாதிருப்பாய். எருவிட்டிறைஞ்சல் - இளம்பிறையைக் கன்னியர் எருப்பொடி தூவி வணங்குதல் பண்டையநாள் மரபு.

6. சைவமுத்திரை - குலக்குறி; பசப்பு - நயம், சாரம்.

7. அம்புலி - சந்திரன்; விந்தை - வியப்பு; நாறும் மணக்கும்.

8. எல் - ஒளி; செல் - மேகம்.

10. சதுர், ஆகுபெயராய்ச் சபையை உணர்த்தியது; முட்ட - நிறைய; இலை - வெற்றிலை; பிளவு - பாக்கு; கப்பலிலிருந்துவந்த சீன தேசத்துச் சரக்கு என்றது புகையிலையை; தக்கிணி என்பது சிற்றளவு.

16. மதுரைப்பதிற்றுப் பத்தந்தாதி. இதைப்பாடியவர் முனிவர் பரஞ்சோதியார். இவர் வேதாரணியத்தில், வேளாண் மரபில் அபிஷிக்தர் குலத்தில் முன்னூறாண்டுகளுக்கு முன்னர்ப் பிறந்தவர். இவரது பாடல் சொற்சுவை பொருட்சுவை செறிந்து விளங்குவது. திருவிளையாடல் புராணம் இவர் பாடியதே.

கலம்பகம். பலவகை மலர்கள் கலந்தமைந்த கதம்பம்போலப், பலவகைப்பொருளும் யாப்புகளும் விரவியபிரபந்தம். மறக்குடியிற்பிறந்து வளர்ந்த மகள் ஒருத்தியை மணம்பேச மன்னவன் தூதுவிடுக்க, செய்தியைத் தெரிவிக்கும் திருமுகம் கொணர்ந்த தூதுவனை மறவன் சினந்து கூறுவது இப்பாடல். இதனைப்பாடியவர் பிள்ளைப்பெருமாளையங்கார். இவர் திவ்யகவி எனப்படுவார். எட்டு நூல்களை இவர் இயற்றியிருக்கிறார் சிவப்பிரகாசர். (பக்கம் 75) இவர் பெருங்கவிஞராகவும் வீரசைவ முனிவராகவும் விளங்கினவர். துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியாராலும் அவர் தந்தையாலும் ஆதரிக்கப்பெற்றவர். திருச்சிராப்பள்ளி வெங்கனூரில் இவர்கள் செய்த கோயிற்பணியை (1—5—1623) சிவப்பிரகாசர் தமது நூலில் சிறப்பித்துள்ளார். இவர் பிரபுலிங்கலீலை பாடியது 1652ல்.

சிதம்பரச்செய்யுட் கோவை. யாப்பருங்கலக்காரிகையின் உதாரணச் செய்யுட்கள் பலவும் சமணசமயர் தழுவின என்று, சிவநேயச்

செல்வர்கள் சிலர், அந்நூலின் இலக்கணங்களுக்கு எடுத்துக்காட்டாகத் தில்லைக்கூத்தனைப் பாடித்தருமாறு வேண்ட, குமரகுருபரர் இயற்றியது இந்நூல். இவர் திருநெல்வேலி ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்தவர்; காசி வாசி; திருமலைநாயக்கர் காலத்தவர். இவருடைய கவிகளின் தனிப்பண்பு அவற்றின் ஓசைப்பெருக்கே. சொல்லுந் தொடரும் பொருளுடன் பொருந்திப் பொருநை நதியின் ஓட்டம் போலப் பெருமிதத்துடன் இயங்கும் இவர் வாக்கில் 'மதுரித்தெழும் முத்தமி'ழைப் 'பண்ணுலாம் வடிதமிழ்' எனலாம். காசியில் இவர், தாம் அமைத்திருந்த புராண சாலையில் ஹிந்துஸ்தானி தமிழ் மொழிகளில் கம்பராமாயணப் பிரசங்கம் செய்தபோது, இராம பக்தராகிய துளஸீதாசர் உடனிருந்து கேட்டு உவந்தனர் என்பர். கம்பன் கருத்துக்களும் கற்பனைகளும் துளஸீதாசர் ராமாயணத்திற் காணப்படுவதற்கு இதுவே காரணம் என்பர்.

17. கலிங்கத்துப்பரணி. இதன் வாக்கிலும் போக்கிலும் ஈடுபட்டு முன்னோரும் பின்னோருமான புலவர் பெருமக்கள் அனைவரும் இதனைத் 'தெய்வப்பரணி' என்றார்கள்; 'தேடற்கருங்கவி' என்றார்கள். பொருளுக்கிசைந்த பாவமும் பாவத்துக்கிசைந்த நடையுங்கொண்டு இயங்குவதிந்நூல். இதனைப்பாடியவர் 'தீபங்குடி சவிற்சண்டிதன் கவிச் சக்கிரவர்த்தி செயங்கொண்ட'ராவார். குலோத்துங்கனுடைய மகா சாமந்தனும் மந்திரித்தலைவனும் வண்டழாஞ்சேரியுடையானுமாகிய வேளான் கருணாகரனான 'தொண்டைமானார்' கலிங்கமெறிந்து, இப் பரணியால் தமது பெருமையை நிலவுலகில் நிலைபெற நிறுத்தினாராவார். இக்கலிங்கப் படையெடுப்பு நடந்தது 12வது நூற்றாண்டின் தொடக்கம் என்பர்.

பரணியாவது ஆயிரம் யானையைக்கொன்ற வீரன்மீது அவனது போர் விருப்பமும் புகழும்தோன்ற, கடவுள் வாழ்த்தும் கடைதிறப்பும் சொல்லிக் காளி கூளிக்கு, கூளிகாளிக்குக் கூறுவதாகத் தாழிசையிற் பாடப்பெறுவது. நாடுகெழு செல்விக்குப் பரணிநாட் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி இவ்வித நூலுக்குப் பரணி என்ற பெயர் உண்டாயிற்று.

1–8. அபயனது திருவோலக்கச் சிறப்பு.

3. வண்டைமன் (ஆகிய கருணாகரத்) தொண்டைமான்; மந்திர (ஆலோசனையில் தேர்ந்த) பாரகர் (- தலைவர்).

4. திருமந்திர ஓலை:- அரசன் கட்டளைகளை அவன் ஆணைப்படி எழுதுவதும் அவற்றை நிறைவேற்றுவதுமாகிய சோழராஸ்தான உத்தியோகம்.

5. ஒழிய (-இடாமல்) நின்றவராகிய அரசரும்.

9, 10. படைதிரளுதல். 11-12 படைகளின் புறப்பாடு.

13. பல ஆறுகளைக்கடந்து படை செல்லுதல்.

14. கலிங்கரை வலியப்போருக்கழைத்தல்.

15. கங்கைக்குத் தெற்கே கலிங்கம்.

16, 17. கலிங்கர் தமதூர் அழியக்கண்டு ஓடி அரசன் காலில் விழுந்து முறையிடல்.

18. அந்தரம் - கேடு; அழிவு; ஒன்று - ஒரு சிறிதும்.

19, 20. அனந்தபன்மனது ஆவேச உரை.

21, 25. கலிங்கரும் கருணாகரனும் நெருங்கிப் போர் புரிதல்.

26. உடைந்தோடுங்கலிங்கர் தமது நிழலையே கண்டு தமிழரென்று அஞ்சி வணங்குதல். அருவர் - அரவர் என்பது வடுகர் தமிழரைக் குறிக்க வழங்கிய சொல்.

27. கருணாகரன் யானைகளைக் கைப்பற்றுதல்.

28. அபிதாவிட்டு - அபயமிட்டு.

30. தொண்டைமான் அபயனடி குடிஞன்.

21. சேக்கிழார். இவர் பெரிய புராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணம் பாடியவர். தொண்டை மண்டலம் புலியூர்க் கோட்டம் குன்றைவளநாடு குன்றத்தூரில் வேளாண்குலத்திலே சேக்கிழார் மரபிலே சைவம் தழையப் பிறந்தவர் இவர்; (கிழார் - உரியவர்; இது வேளாளர்க்குப் பண்டு வழங்கியதொரு பட்டப்பெயர்.) இவர் அநபாயன் என்னும் இரண்டாங் குலோத்துங்கச் சோழனுக்கு மந்திரியாயிருந்து அவனுடையவேண்டுகோளின்படி இப்புராணப் பெருநூலைப்பாடியருளினர். இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு. 'பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப்பாடிய கவிவலவ'ர் இவர். சரித்திரத்தை வித்தாகக்கொண்டு சமைந்த இவர் நூலை அன்புக்கடல் என்பர்.

1. பால் - பக்கம்; சால் - படைச்சால்; தடம் - குளம்; திருந்திய மனைகளில் விருந்து.

2. எனைப்பல (-எல்லா) ஊர்களும்: பாலிக்கும் - வளர்க்கும், காக்கும்; சிவம் - நன்மை. திரு (-செல்வம்) ஆம் (-உண்டாகும்) ஊர் (ஆகிய).

3. தலம்-உலகம்; விலக்கு (வழு) இல் (லாத).

4. நிகழும் - விளங்கும். 6. பன்னிரண்டு வயது ஆக.

7. ஆண் தகைமைத் தொழில் – போர்த் தொழில்.

8. வதுவை - மணம்; வட புலத்தோர் (-நாட்டினர்) மன்னவற்கு மாறு (-பகையாய்) எற்க (-போர் தொடுக்க) அவர் (-அந்தப் பகைவர் (மேல் (போர் புரிய). அன்ன (தானைத் தலைவனுக்கும் அத்தன்மையுடைய) வர் (ஆகிய) கலிப்பகையார்) க்கு.

9. இப்பால் - திருவாமூரில்; தொன்றுதொ (ட்) டு (த்தொடர்ந்து வரும்) நிலையாமை மேய (-சேர்தற்குரிய) வினை (யின்) பயத்தால் (-வசத்தால்).

12. முனை - போர்முகம்; முருக்கி - அழித்து; தலம் - உலகம்.

14. தயா உம்பர் (-தேவர்) உலகு அணையவுறும் (-அடைய விரும்பிய உறுதி) நிலை (யை) விலக்க; நூல் - மாங்கலியம்.

16. புலன் - அறிவு. துங்க முழு உடல் என்றது உடையில்லாத நீண்ட உடலை.

18. திருவுலகு பணிமாறி - பெருக்கி; புனிறு - ஈன்றணிமை.

19. சுடரொளி - சிவபெருமான்; ஈண்டு வினை - சேரும் (மிகுந்த) தீவினையை (விளக்கும்).

20. அடைவு (-ஒழுங்கு) இல் (லாத) அமண் (சமயம்) புரி (விரும்பிய); வச்சிர(ாயுத)ம்; பாழி - சமண முனிவர் தங்குமிடம்.

25. கோள் (-கொள்கை) இல் (லாத) பரசமயக் குழியினின்றும் எழுந்திரீர்.

26. திருவாளன் - சிவன்; உருவார - உடல் முழுதும்.

25. கம்பராமாயணம்.

1. நொவ்விடை-நொ இடை-நோதலான இடை; வருந்தும் இடை.

2. ஒளித்துவைத்த வாறு நன்று என்க.

3. காக - குற்றம், சிக்கு. 8. சிவண - போல.

9. எறூழ் வலி - மிக்க வலி. 11. கோடி - கொள்ளுதி.

12. துரும்பு, விளி

13. செருவில் - போரில்; எற்கும் - எதிர்க்கின்ற; தலையும் தோளும் இலக்கமாகும்; இலக்கம் - அடித்து வீழ்த்தற்கு உரிய குறி.

15. நான் வஞ்சஞ் செய்தது உயிரும் நீக்கும் என்பதை எண்ணி (ஆகும்)

17. தேற்றியாளும் - தேறச்செய்தாவது; வசித்து - இணங்கச் செய்து.

19. மஞ்சன் - மைந்தன்; உய்ஞ்சனன் - உய்ந்தனன்

21, 22· எட்டுப்பிரதிகள் சிலவற்றுள் கண்டபடி.

25. இதின் உயிருதவி உண்டோ எனலுமாம்.

28. விலக்கல் - மலை; இங்கே மந்தரம்.

32. அண்முகம்-அடுத்த; வாழ்தலையுடைய மணியாழி எனலுமாம்.

33. பாழி - வலியுடைய; வாயுயர் - வியங்கோள்; ஊழியோர் பகலாய் - ஒவ்வோரூழியும் ஒவ்வொரு நாளாய்.

34. எண்ணில் யாக்கை - அற்பமான உடல்.

35. சுட்டி (க் காட்டி) னன் - அறிவித்தான். 38. சூட்டி - ஆலோசித்து.

41. பதம் - காவல் சோறுமாம்; வேறு நன்று என் - நீ என்னை எடுத்துச் செல்வது எல்லா விதத்திலும் குற்றமுள்ளதே.

42. மாக்கள் - மிருகங்கள். இலங்கை மட்டுமா?

44. இருளும் ஞாலம் தெருளும் என்க. 45. நின்னை நோக்கி - நீ சாட்சியாக.

31. பாரதவெண்பா. இது 9-ம் நூற்றாண்டில் தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவ வேந்தன் காலத்தில், பெருந் தேவனார் என்பவரால் இயற்றப்பட்டது. இது உரையும் நடையும் விரவப் பெற்றுள்ளது. தொல்காப்பிய உரையுள் நச்சினார்க்கினியர் மேற் கோளாக எடுத்துக்காட்டும் பாரதப் பாடல்கள் வேறு; அவை சங்க காலத்துக்குரிய நடையும் நயமும் உடையன.

இந் நூலை ஆக்குவித்ததுடன் நந்திவன்மன் கலம்பகம் ஒன்றனுக்கும் பாட்டுடைத் தலைவனாக விளங்குகின்றான். கலம்பகங்களுள் முற்பட்டது அது; முதன்மையானதுங்கூட.

1. கண்டத்திலிட்ட களங்கம் என்றது மாங்கலியம் இன்மையை.

3. காண வர விடுதி (என்று சொல்லி) எழுந்துதொழுதான்.

5. தேர் வேந்தன் - பாண்டு; வந்தவா - வந்தது என்ன வியப்பு.

7. பாரளந்தான் - திருமால்; இங்கே கண்ணபிரான்.

8. திகிரி - தேருருளை; ஒளியோன் - சூரியன்.

9. நீர் எனதுதாயென்று சொல்லிக்கொண்டு வந்து; துடி-உடுக்கை.

16. தோன்றல் - பிறத்தல்; மேவிய என்பது மேவி என்றாயிற்று.

தருமன், வீமன், நகுலன், சகாதேவன் என்னும் இந்நால்வரையும் கொல்லாதே என்று குந்தி ஒருவரம்வேண்டினாள். கன்னனும் அருச்சுனனால் இறப்பேனாயின் நான் உம்முடைய பிள்ளை என்று நீர் பலரும் அறியச்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.

31. (இப்பாவம்) தேவர்க்கு ஆகுமோ? அல்லது பரிகாரமில்லாத என்ன பாவம் ஆகுமோ?

35. சிலப்பதிகாரம். சேரமுனி இளங்கோவால் இயற்றப் பட்டது. சொற்பொருட் சுவைகளிற் சிறந்தது; தெள்ளிய இனிய நன்னடையுடையது. முத்தமிழும் விரவப்பெற்றது; நாடகஉறுப்புக்களோடு உரையும் இசையும் ஊடே கொண்டிலங்குவது.

'அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்,
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை யுருத்துவந் தூட்டும் என்பதூஉம்,
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்,
சிலப்பதி காரம் என்னும் பெயரால்,
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'

என்று சொல்லி இந்நூலைத் தொடங்கினார் இளங்கோ. கதை நடந்தது அடிகள் காலத்திலேயே; அது கி. பி. 140—192க் கிடையில்.

1—10 குணில் - குறுந்தடி; கொன்றை ஆம்பல் முல்லையந் தீங்குழல்கள் - இசைக்கருவிகள்; பண்களுமாம்.

11—82 வந்தாள் – ஐயை. எஞ்சிலார்-அயலார். ஞெகிழம் - சிலம்பு. கரையாமல்-ஓசைப்படாமல். முகத்திற்கும் கூந்தலுக்கும் திங்களும் புயலும் உவமை. 'நீ எவ்விடத்தாயோ ஆ ஆ' என அழுதாள். கவலைய மகளிர் - உயவற் பெண்டிர்.

33—40 வாய்வதின் - புத்தி பூருவமாக எடுத்த. கேட்டிமின்- கேண்மின்; கேட்டைக்க - கேட்பீராக. குரல், அசரீரி.

41—74 ஈதொன்று - இஃதோராச்சரியம் இருந்தபடி. மல்லல் - வளம். ஆற்றவும் - மிகவும்; மிகவும் மன்னவனைப் பழிதூற்றுங்குடியது மதுரை. பொன் - திரு. தழீஇக் கொள்ள - தழுவிக்கொண்டாளாக; பழுதொழிந்து (- பொல்லாத உடம்பை நீத்துத் துறக்கம் புக) எழுந்திருந்தவன், நீ இருக்க என்று சொல்லிக் குழாத்துள்ளானாய்ப் போனான்.

75—100 அறிவு அறை (- கீழற்றுப்) போகிய பொறி (- புண்ணியம்) அற (- அற்ற). இறை முறை - இராசநீதி. நீர் வார்ந்த கண்ணை (யுடையாய்!) யாரோ நீ? வெள்வேல் கொற்றம் - இராச நீதி. நல்திறம் படரா – நல்ல நெறியிற் செல்லாத.

38. மணிமேகலை. இளங்கோ அடிகள் கேட்ப மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இந்நூலை இயற்றினார். மாதவிமகள் மணிமேகலையின் துறவைவிரித்துக் கூறுவது. சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து எளிதாகப்பொருளையுணர்த்தும் இனிய நன்னடையது. பௌத்த சமயந்தழுவியது.

1—37 வச்சிர(ாயுதம் நிற்கும்) கோட்டம் (- கோயில்). கடிப்பு - குறுந்தடி. கோள் - நவக்கிரகங்கள். கோட்டி - சபை. வேதிகை-திண்ணை. விலோதம் - துவசம். மதலை - கொடுங்கை. பொதியில் - அம்பலம். செற்றம் - வைரம். கலாம் - சண்டை. துருத்தி - ஆற்றிடைத்திட்டு. வசி - மழை.

40. ‘பழையனூரார் பழி தீர்த்த தீக்குழி அவியா தெரிய மூவேந்தரும் வந்து பார்த்துப் பாடியதென்ற தலைப்பின் கீழ்த் தமிழ் நாவலர் சரிதையில் இவை காணப்படுகின்றன. திருவாலங்காட்டில் திரிந்துகொண்டிருந்த பேய் வழிப்போக்கன் வணிகன் ஒருவனைப்பின்பற்றிப் பழையனூர் சென்று, வேளாளரிடம் ‘கானகத்தே காதலியைக் கைவிட்டுச் செல்லக் கருதுகின்றானே’ என்று முறையிட, அவன் ‘பேய்! பேய்!’ என்று மறுக்க, ‘பேயாயின் நாங்கள் பிணையாவோம்; மனைவியை ஏற்றுக்கொள்’ என்று அவர் கூற, பேய் வஞ்சித்து வணிகனைக் கொன்று மறைந்தது. வேளாளரும் தீப்பாய்ந்து பழி தீர்த்தனர். இவ் வரலாறு ‘வஞ்சம் படுத்

தொருத்தி வாளுள் கொள்ளும் வகை கேட்டஞ்சும் பழையனூர் ஆலங் காட்டெம் அடிகளே' என்று சம்பந்தரால் புகழப்படுகிறது. வேளாளர் கூறிய சொற் பிழையாது துணிந்து செந்தீக்குழியில் எழுபது பேரும் முழுகிய திறத்தை உமாபதிசிவமும் பாராட்டுகின்றார்.

பத்தினி தேவி கண்ணகி. கண்ணகி தன் கணவன் கொலை யுண்டு கிடந்ததைக் கண்டு பாடியது. யாப்பருங்கலமேற்கோள் பாட்டு. கெண்டி ஊட என்க; கெண்டுதல்-வருத்துதல்; கெழுதகைமை அன்பு. இத்துடன்,

வண்டார் இருங்குஞ்சி மாலை தன் வார்குழல் மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன் பால் காலைவாய்;
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்;

என்று தொடங்கி இளங்கோ பாடுவதை ஒப்பிடக் கண்ணகி பாடலைச்சேர முனிவர் தழுவிக்கொண்ட முறைமை புலனாம்.

41. தேவார ஆசிரியர்கள், சமய குரவர், நால்வருள் சம்பந்தர் அப்பர், சுந்தரர் என மூவர்; சம்மந்தரும் அப்பரும் சமகாலத்தவர்; ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி. தேவாரம் - தெய்வத்தைத் துதிக்கும் பாடல்; தேவனைப்பரவும் பாடல். மாணிக்கவாசகர் திருவாசகம் பாடியவர். இவர் அவர்களுக்குப் பின் வந்தவர் என்றும் முன் வாழ்ந்தவரென்றும் இவர் காலம்பற்றிப் புலவர்கள் கருத்து வேறுபா டுறுகின்றனர்.

42. குலசேகரப்பெருமாள். இவர் சேர நாட்டரசர். திருவஞ்சைக்களத்திற் பிறந்தவர். ஸ்ரீராமனிடம் மிகுந்த பக்தி யுடையவர். ஸ்ரீராமனைப் பெருமாள் என்பது சம்பிரதாயம். இராம கதையைக் கேட்குந்தோறும் இராமனாகவே இவர் தம்மைப் பாவித்து ஈடுபட்டவராதலின் இவருக்குப் பெருமாள் என்னும் திருநாமம் வந்தது என்பர்.

நம்மாழ்வார், திருக்குருகூரில் அவதரித்தவர்; வேளாளர். ஆழ்வார்களுக்கெல்லாந் தலைவராவர். 'உலகினரைத் துதிப்பதால் பயன் ஒன்றும் இல்லை. திருமாலைச் சேவித்தால் சிறந்த நற் பயன்களெல்லாம் வந்து சேரும். ஆகவே அவனை என்னோடு துதிக்க வம்மின்' என்று உபதேசிப்பது இப்பதிகம்.

45. புறத்திரட்டு. அறம் பொருள் இன்பம் என்ற பொருட் பாகுபாட்டை யொட்டி, திருக்குறளின் அதிகார அடைவைப் பின்பற்றி, பெருநூல்கள் பலவற்றிலிருந்தும் தொகுக்கப்பெற்ற 1570 செய்யுட்களை யுடையது. இந்நூலை ஆராய்ந்து அரிய முகவுரையுடன் முதன் முதல் பதிப்பித்த ராவ் சாஹெப் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் இதன் அருமை பெருமைகளையும், இலக்கிய வளர்ச்சியைக் கணித்தற்கு இது எவ்வளவில் பயன்படும் என்பதையும், நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இது தொகுக்கப் பெற்றதாகும்.